தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[Issued—24-9-1979

[வெளியீடு—24-9-1979

TAMIL NADU LEGISLATURE LI...
4-DEC 1979
MADRAS

தமிழ் நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

திங்கட்கிழமை 1979 ஏப்ரல் 23—தொகுதி XXXII—எண் 1
Monday 23rd April 1979 — Volume XXXII—No. 1

©
தமிழ் நாடு அரசு — GOVERNMENT OF TAMIL NADU
1979

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department, Fort St. George, Madras-600 009

விலை 1-50 காசுகள்] [Price 1-50 Paise

TAMIL NADU LEGISLATURE
4-DEC 1979
MADRAS

உள்ளடக்கம்

23–4–1979

பக்கங்கள்

(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் அமைச்சர்களின் பேரவைச் செயலர்களும் i–iv

(ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் iiv

(iii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப் பெற்ற பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உட்பட) vii–xvi

1 வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 1-26

2 உரிமைப் பிரச்னைகள்—

(அ) மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மீது (தீர்ப்பு) .. 27

(ஆ) முதலமைச்சர் மீது .. 28-47

3 கவன ஈர்ப்பு—

மதுரை மாவட்ட கூட்டுறவு வங்கி ஊழியர்கள் கைது செய்யப் பெற்றுள்ளது குறித்து .. 47-57

4 மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1972—73 .. 57-58

5 மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1973—74 .. 58-59

பக்கங்கள்.

6 வரவு செலவுத் திட்டம் 1979-80—வாக்கெடுப்பு (தொடர்ச்சி)—

(அ) கோரிக்கை எண். 24-தொழில் வளர்ச்சி தொடர்ச்சி .. 59

(ஆ) கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு—தொடர்ச்சி .. 59-112

திரு. எம். ஏ. லத்திப் .. 59-83

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் 67-68, 69, 70

திரு. யா. சை. மு. யூசுப் .. 83-87

திரு. ரா. மார்க்கபந்து .. 90-93

திரு. பொ. விஜயராகவன் .. 93.99

டாக்டர் கே. சமரசம் .. 99-105

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன். .. 88-90, 105-111

(இ) கோரிக்கை எண். 7—மாநில சட்ட மன்றம் 112

(ஈ) கோரிக்கை எண். 37—பொதுப் பணிகள்—கட்டடங்கள் .. 112

(உ) கோரிக்கை எண். 38—பொதுப் பணிகள்—பணியாளரும் கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் .. 112

(ஊ) கோரிக்கை எண். 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் 113

(எ) கோரிக்கை எண். 43—பல்வகை .. 113

(ஏ) கோரிக்கை எண். 53—பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்டடங்கள் .. 113

(ஐ) கோரிக்கை எண். 58—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் .. 114

(ஒ) கோரிக்கை எண். 8—தேர்தல்கள் .. 114

(ஓ) கோரிக்கை. எண் 44—எழுது பொருள் அச்சுத்துறை 114

பக்கங்கள்.

7 அறிவிப்பு—

நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1979 114

8 அரசினர் சட்ட முன்வடிவு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1979 .. 115

9 பேரவை முன்வைக்கப்பெற்ற ஏடுகள் .. 115

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS
TAMIL NADU LEGISLATURE LIBRARY
4-DEC 1979
MADRAS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

TAMIL NADU LEGISLATIVE LIBRARY
28 JAN 1981
MADRAS

உள்ளடக்கம்

24-4-1979

பக்கங்கள்

1. இரங்கற் குறிப்பு—

முன்னாள் உறுப்பினர் திரு. ஏ. அப்பாவுத் தேவர் மறைவு குறித்து 121

2. வினாக்கள்-விடைகள்—

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள் 122—158

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் 159—211

3. தகவல் கோரல்—

பேரவைச் செயலர் குறித்து 211

4. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

(அ) கிண்டி இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனத் தொழிலாளர்கள் கைது குறித்து. 211—214

(ஆ) பல்வேறு மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் கைது செய்யப் பெற்றுள்ளது குறித்து 214—244

5. கவன ஈர்ப்புகள்—

(அ) முகவை மாவட்டத்தில் வீட்டு மனைட் பட்டா வழங்குவது குறித்து 244—246

(ஆ) தோல்ஏற்றுமதி பாதிக்கப் பெற்றுள்ளது குறித்து 246—251

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன் வடிவு, 1979 251

(ஆ) கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு, 1979 251—252

(இ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 25

(ஈ) உள்ளாட்சி அதிகார மன்றங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979. 252—2

(உ) நிதி ஒதுக்க (எண் 4), சட்ட முன்வடிவு, 1979 257

(ஊ) நிதி ஒதுக்க (எண் 5), சட்ட முன்வடிவு, 1979 258

(எ) நிதி ஒதுக்க (எண் 3), சட்ட முன்வடிவு, 1979 258—28
288—30

7. அறிவிப்புகள்—

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு 1979 251

(ஆ) 1972–73-ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள். 25

(இ) 1973–74-ஆம் ஆண்டு மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 255

(ஈ) நிதி ஒதுக்க (எண் 4), சட்ட முன்வடிவு, 1979 257

(உ) நிதி ஒதுக்க (எண் 5), சட்ட முன்வடிவு, 1979 257

(ஊ) பேரவை அலுவல் குறித்து 288

8. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்—1972–73—வாக்கெடுப்பு .. 253—255

9. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்—1973–74—வாக்கெடுப்பு 255—256

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 302—303

உள்ளடக்கம்

25-4-1979

1, வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 323-356

2, உரிமைப் பிரச்னை—

மாண்புமிகு முதலமைச்சர் மீது 356-357

3, ஒத்திவைப்புத் தீர்மானம்—

திருப்பரங்குன்றம் சம்பவம் காரணமாக சில வழக்கறிஞர்கள் உண்ணாவிரதம் இருப்பது குறித்து 357-371

4, கவன ஈர்ப்புகள்—

(அ) பொதத்தூர்பெட் நகர மாணவர்கள் சிலர் உண்ணாவிரதம் இருப்பது குறித்து 371-372

(ஆ) மகிமைபுரத்தில் மதிய உணவு அருந்திய மாணவர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப் பெற்றுள்ளது குறித்து 373-376

5, தகவல் கோரல்—

உறுப்பினர்கள் கொடுத்த அறிவிப்புகள் எடுத்துக் கொள்வது குறித்து 376-380

6, அறிவிப்புகள்—

(அ) கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 376

(ஆ) கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன் வடிவு. 1979 377

(இ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 456

7, அரசினர் சட்ட முன்வடிவுகள்—

(அ) கூட்டுறவு நிலவள வங்கிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 377

(ஆ) கேளிக்கை வரி (திருத்த) சட்ட முன் வடிவு, 1979 377

(இ) அடகுக் கடைக்காரர்கள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 378

(ஈ) வட்டிக்குக் கடன் கொடுப்பவர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 .. 378

(உ) ஊராட்சிகள் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 378–379

(ஊ) ஊராட்சிகள் (பதவிகால நீட்டிப்பு) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1979 379

(எ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1979. 379

(ஏ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1979 (விவாதம் தொடர்ச்சி) .. 380–455

(ஐ) நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு. 1979 455

(ஒ) நிதி ஒதுக்கம் (எண் 5) சட்ட முன்வடிவு, 1979 455–456

(ஓ) சம்பளம் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 456–466

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 466–467

TAMIL NADU LEGISLATIVE
8 FEB 1980
MADRAS-600 009

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: (முதலமைச்சர்) பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, இலஞ்ச ஒழிப்பு, பெருந் தொழில்கள், சுரங்கம்-கனிவளம்.

2. திரு. கி மனோகரன்: (நிதி அமைச்சர்) நிதி திட்டம், சட்டமன்றம், பொதுப்பணி (கட்டிடங்கள் மற்றும் பொதுப்பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

3. திரு. ச. இராமச்சந்திரன்: (மின் துறை அமைச்சர்) மின்சாரம், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கூட்டுறவு, ஆவணப் பதிவுத் துறையும்.

5. திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (வருவாய்த் துறை அமைச்சர்) வருவாய், வணிக வரிகள், ஆயத் துறை.

6 திரு. க. உரொ. எட்மண்ட்: (உணவுத் துறை அமைச்சர்) உணவு, மீன்வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், தேர்தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலை வாசிக் கட்டுப்பாடு.

7. திரு. இராம. வீரப்பன்: (செய்தி, அறநிலையத் துறை அமைச்சர்) செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத்துறை, சிங்கோனா உட்பட வனங்கள்.

8. திரு. க. நாராயணசாமி முதலியார்: (சட்ட அமைச்சர்) சட்டம் நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், அளவைகள் பற்றி சட்டம், இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல் சீட்டுநிதிப்பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு.

9. திரு. செ. அரங்கநாயகம் : (கல்வி அமைச்சர்) தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

10. திரு. கா. காளிமுத்து : (உள்ளாட்சித் துறை அமைச்சர்) நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம் கிராமதானம்.

11. திரு. எஸ். இராகவானந்தம் : (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகரஅமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அரிசன நலத் துறை அமைச்சர்) அரிசன நலம், எழுதுபொருள், அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதம் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

13. திரு. சி. பொன்னையன் : (போக்குவரத்துத்துறை அமைச்சர்) போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறை முகங்கள்.

14. திரு. ப. குழந்தைவேலு : (வேளாண்மை நீர்ப் பாசனத் துறை அமைச்சர்) வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், பாசனத் திட்டங்கள் (சிறு பாசனம் உள்ளிட்டது). வேளாண்மை பொறியியல்.

15. திரு. கா. இராசா முகமது : (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், வஃபு.

16. திரு. ஆர். சௌந்திரராஜன் : (மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்) மக்கள் நல்வாழ்வுத்துறை.

17. செல்வி பி. டி. சரஸ்வதி : (சமூக நலத்துறைஅமைச்சர்) மகளிர், குழந்தைகள் நலம்உள்ளிட்ட சமூகநலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள் அகதிகள், வெளியேற்றப்பட்ட வர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

18. திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : (கைத்தறி நெசவுத் துறை அமைச்சர்) கைத்தறி, கதர், நெசவாலைகள், நூல்.

அமைச்சர்களின் பேரவைச் செயலர்கள்

1. திரு. எம். வின்சென்ட்: நிதி அமைச்சரின் பேரவைச் செயலர்.

2. திரு. ஆனூர் ஜெகதீசன்: கூட்டுறவுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

3. திரு. பி. முசிரிபுத்தன்: வருவாய்த் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

4. திரு. ஐசரி வேலன்: செய்தி, அறநிலையத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

5. திரு. எம். ஏ. ஜெயவேலு: சட்ட அமைச்சரின் பேரவைச் செயலர்.

6. திரு. ஆ. வெள்ளைச்சாமி: கல்வி அமைச்சரின் பேரவைச் செயலர்.

7. திரு. ப. கோ. கிட்டு: போக்குவரத்துத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

8. திரு. இரா. அருணாசலம்: மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

Governor of Tamil Nadu.

Thiru *PRABHUDAS PATWARI*

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. Hon. Thiru M. G. RAMACHANDRAN (*Chief Minister*)—Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prohibition, Prevention of Corruption, Large scale Industries, Mines and Minerals.

2. Hon. Thiru K. MANOHARAN (*Minister for Finance*)—Finance, Planning, Legislature and Public Works (Buildings).

3. Hon. Thiru S. RAMACHANDRAN (*Minister for Electricity*)—Electricity, Iron and Steel Control.

4. Hon. Thiru K. A. KRISHNASWAMI (*Minister for Co-operation*)—Co-operation, Registration.

5. Hon. Thiru S. D. SOMASUNDARAM (*Minister for Revenue*)—Revenue, Commercial Taxes and Excise.

6. Hon. Thiru G. R. EDMUND (*Minister for food*)—Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections, Ex-Servicemen and Price Control.

7. Hon. Thiru R. M. VEERAPPAN (*Minister for Information and Hindu Religious Endowments*)—Information and Publicity, Film Technology, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests and Cinchona.

8. Hon. Thiru K. NARAYANASWAMI MUDALIAR (*Minister for Law*)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Chits and Registration of Companies.

9. Hon. Thiru C. ARANGANAYAGAM (*Minister for Education*)—Education including Technical Education, Official Language and Employment and Training.

10. Hon. Thiru K. KALIMUTHU (*Minister for Local Administration*)—Municipal Administration, Community Development, Panchayats, Panchayats Unions, Rural indebtedness and Bhoodan and Gramdan.

11. Hon. Thiru S. RAGAVANANDAM (*Minister for Labour*)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water-Supply and Drainage Board, Town Planning, Accommodation Control.

12. Hon. Thiru P. SOUNDARAPANDIAN (*Minister for Harijan Welfare*)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour.

13. Hon. Thiru C. PONNAIYAN (*Minister for Transport*)—Transport, Motor Vehicles Acts, Highways and Ports.

14. Hon. Thiru P. KOLANDAIVELU (*Minister for Agriculture and Irrigation*)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service, Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Agro-Engineering.

15. Hon. Thiru K. RAJA MOHAMMED (*Minister for Rural Industries*)—Rural Industries including village, cottage and small industries, Milk and Dairy Development and Waqfs.

16. Hon. Thiru THIRUCHI R. SOUNDARARAJAN (*Minister for Health*)—Health.

17. Hon. Selvi P. T. SARASWATHI (*Minister for Social Welfare*)—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggar Homes, Orphanages, Indians—Overseas, Refugees and Evacuees; Correctional Administration.

18. Hon. Thirumathi SUBBULAKSHMI JAGADEESAN (*Minister for Handlooms*)—Handlooms, Khadi, Textiles and Yarn.

PARLIAMENTARY SECRETARIES TO THE CABINET MINISTERS.

1. THIRU M. VINCENT—Parliamentary Secretary to Minister for Finance.

2. THIRU ANNOOR JAGADEESAN—Parliamentary Secretary to Minister for Co-operation.

3. THIRU P. MUSIRIPUTHAN—Parliamentary Secretary to Minister for Revenue.

4. THIRU ISARI VELAN—Parliamentary Secretary to Minister for Information and Hindu Religious Endowments.

5. THIRU M. A. JAYAVELU—Parliamentary Secretary to Minister for Law.

6. THIRU A. VELLAISAMY—Parliamentary Secretary to Minister for Education.

7. THIRU P. G. KITTU—Parliamentary Secretary to Minister for Transport.

8. THIRU R. ARUNACHALAM—Parliamentary Secretary to Minister for Health.

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. முனு ஆதி.

பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. எஸ். ஜே. இராமசாமி
2. திரு. பி.எச். பாண்டியன்
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
4. திரு. சோ. பாலகிருஷ்ணன்.
5. திரு. ரா. உமாநாத்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.,

துணைச் செயலாளர்கள்.

திரு. த. இராதாகிருஷ்ணன்

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

குழு அலுவலர்.

திரு. ச. பாஷ்யம், பி. ஏ. (ஆனர்ஸ்)

சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்.

திரு. பி. எம். பத்மநாபன் நம்பியார், பி. ஏ.,

திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.

திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.

திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ. (எஸ்டேட் அலுவலர்.

தலைமை நிருபர்.

திரு. மா. சந்திரசேகரன்.

விவாதப் பதிப்பாளர்,

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.

12–2–1979 அன்று அறிவிக்கப்பெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர்ப் பட்டியல். (தொகுதிகள் உள்பட.)

தொடர் எண்ணும் உறுப்பினர்கள் பெயரும். (1)		தொகுதி. (2)
1	அண்ணாமலை, திரு. எம். ..	அரூர் (செ.வ.).
2	அப்துல் ரசாக், திரு. கே. எம்.	ஆலந்தூர்.
3	அப்துல் லத்தீப், திரு. கி. ..	கடலூர்.
4	அப்புனு கவுண்டர், திரு. கா.	பென்னகரம்.
5	அம்பிகாபதி, திரு. மு. ..	மன்னார்குடி.
6	அமிர்தராஜ், திரு. இரா. ..	திருச்செந்தூர்.
7	அய்யாச்சாமி, திரு. ரா. ..	தாராபுரம் (செ.வ.)
8	அர்ச்சுனன், திரு. வீ.	ஆரணி.
9	அரங்கசாமி, திரு. க. ..	குன்னூர் (செ.வ.)
10	அரங்கநாதன், திரு. அ. க. ..	வேலூர்.
11	அரங்கநாதன், திரு. மு. ..	திருவல்லிக்கேணி, சென்னை.
12	அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்).	கோயம்புத்தூர்-மேற்கு.
13	அருணாசலம், திரு. இரா. (அமைச்சரின் பேரவைச் செயலர்.)	நாமக்கல் (செ.வ.).
14	அழகர்சாமி, திரு. சோ. ..	கோவில்பட்டி.
15	அன்பழகன், திரு. க. ..	புரசைவாக்கம், சென்னை.
16	அன்பழகன், திரு. தி. ..	நாட்ராம்பள்ளி.
17	ஆண்டி அம்பலம், திரு. மெ. ..	நத்தம்.
18	ஆதீசுவாமி, திரு. இரா. ..	குளச்சல்.
19	ஆறுமுகம், திரு. இல. ..	திருநாவலூர்.
20	ஆறுமுகம், திரு. எச். ஜி. ..	பர்கூர்.
21	ஆறுமுகம், திரு. சி.	மதுராந்தகம்.
22	ஆறுமுகம், திரு. த.	அரியலூர்.
23	ஆறுமுகம், திரு. சேலம் மு. ..	சேலம்-2.
24	இராசமாணிக்கம், திரு. இரெ.	குத்தாலம்.
25	இராசரத்தினம், திரு, து. ..	பூந்தமல்லி.
26	இராதா, திரு. எஸ். ஆர். ..	கும்பகோணம்.
27	இராமச்சந்திர ரெட்டி, திரு. என். ..	ஹோசூர்.

	தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதி (2)
28	இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்.)	அருப்புக்கோட்டை.
29	இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். ஆர்.	சாத்தூர்.
30	இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்).	பண்ருட்டி.
31	இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந.	செஞ்சி.
32	இராமசாமி, திரு. எஸ். வி.	பெரம்பலூர் (செ.வ.).
33	இராமசாமி, திரு. எஸ்.ஜே. ..	சோளிங்கர்.
34	இராமசாமி, திரு. கே. என்.கே.	கோபிசெட்டிப்பாளையம்.
35	இராமசாமி, திரு. கொ.	சிவகாசி.
36	இராமசாமி, திரு. த. ..	இராமநாதபுரம்.
37	இராமசாமி, திரு. து. ..	வெள்ளக்கோவில்.
38	இராமலிங்கம், திரு. செ. ..	திருவிடைமருதூர்,
39	இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா.	தல்லி.
40	இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர்.	திண்டிவனம்.
41	இளங்கோவன், திரு. கோ. ..	திருவையாறு
42	ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.	அம்பாசமுத்திரம்.
43	உக்கிரபாண்டியன், திரு. க.	பரமக்குடி.
44	உச்சி, திரு. கே.	கூடலூர்.
45	உத்திராபதி, திரு. பொ. ..	திருத்துறைப்பூண்டி (செ.வ.).
46	உமாநாத், திரு. ரா.	நாகப்பட்டினம்.
47	உய்யக்கொண்டான், திரு. கே. ஜே.	ஆற்காடு.
48	எட்மண்ட், மாண்புமிகு திரு. க. உரொ. (அமைச்சர்).	திருநெல்வேலி.
49	எத்ராஜ், திரு. கி.	அச்சரபாக்கம் (செ.வ.).
50	ஏகாம்பர ரெட்டி, திரு. ..	பள்ளிப்பட்டு.
51	ஐசரி வேலன், திரு. (அமைச்சரின் பேரவைச் செயலர்.)	டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், சென்னை.
52	கண்ணன், திரு, ம.	கண்டமங்கலம் (செ.வ.).

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1)		தொகுதி. (2)
53	கணேசன், திரு. இ. ..	எடப்பாடி.
54	கணேசன், திரு. எஸ். ..	பூம்புகார்.
55	கந்தசாமி, திரு. கா. வே. ..	கிணத்துக்கடவு.
56	கந்தசாமி, திரு. கே. ..	ஆண்டிப்பட்டி.
57	கபாலி, திரு, டி. கே. ..	மயிலாப்பூர்-சென்னை.
58	கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம.	திருவாடானை.
59	கருணாநிதி, திரு. மு. ..	அண்ணாநகர், சென்னை.
60	கருணாநிதி, திரு. தாழை மு.	திருவாரூர் (செ. வ.)
61	கருணாமூர்த்தி, திரு. வெ. ..	ஜெயங்கொண்டான்.
62	கருப்பசாமி பாண்டியன் திரு. வீ.	ஆலங்குளம்.
63	கலியமூர்த்தி திரு. துரை. ..	சிதம்பரம்.
64	காத்தமுத்து, திரு. கி. பெ.	தொட்டியம்.
65	காளிமுத்து, மாண்புமிகு திரு கா. (அமைச்சர்)	திருப்பரங்குன்றம்.
66	காளியப்பன், திரு. இரா	ஏற்காடு (ஆ. வா.)
67	காளியப்பன், திரு. பொ. ..	காரைக்குடி.
68	கிட்டப்பா, திரு. என். ..	மாயூரம்.
69	கிட்டு, திரு. ப. கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	பல்லடம்.
70	கிருஷ்ணன், திரு. செ. ..	கன்னியாகுமரி.
71	கிருஷ்ணன், திரு. நா. ..	ஸ்ரீபெரும்புதூர் (செ. வ.)
72	கிருஷ்ணன், திரு. பி. ..	விழுப்புரம்.
73	கிருஷ்ணன், திரு. பி. எம். ..	பாலக்கோடு.
74	கிருஷ்ணன், திரு. ரா ..	வாசுதேவநல்லூர் (செ.வ.
75	குப்புசாமி, திரு. என். ..	மொரப்பூர்.
76	குருசாமி, திரு. ப.	ஆண்டியூர் (செ. வ.)
77	குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. (அமைச்சர்).	உடுமலைப்பேட்டை.
78	கோதண்டராமன், திரு. வி. கே.	குடியாத்தம்.
79	கோபாலன், திரு. போ. ..	உதகமண்டலம்.
80	கோவிந்தராசன், திரு. சி.	நெல்லிக்குப்பம்.
81	கோவிந்தன், புலவர் ..	கா. செய்யாறு.
82	கோவேந்தன், திரு. மு. ரெ.	பேராவூரணி.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதி.
	(1)	(2)
83	சங்கரய்யா, திரு. என். ..	மதுரை கிழக்கு,
84	சண்முகம், திரு. ஆர். ..	திருத்தணி.
85	சண்முகம், திரு. கா. ந. ..	லால்குடி.
86	சண்முகம், திரு. கூத்தக்குடி ச.	திருப்பத்தூர்.
87	சண்முகம், திரு. ப. உ. ..	திருவண்ணாமலை.
88	சதாசிவம், திரு. செ. ..	அரவக்குறிச்சி.
89	சந்திரசேகரன், திரு. ஆ. ..	கம்பம்.
90	சந்திரன், திரு. ப. ..	பெரணமல்லூர்.
91	சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ.	தியாகராய நகர், சென்னை.
92	சமரசம், டாக்டர், கே. ..	காவேரிப்பட்டிணம்.
93	சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்).	திருமங்கலம்.
94	சவுந்திரராஜன், திரு. ரெ. வீ.	பாபனாசம்
95	சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே.	ஆயிரம்வளக்கு, சென்னை.
96	சாது செல்வராஜ், திரு. கோ.	ஸ்ரீவைகுண்டம்.
97	சாமிக்கண்ணு, திரு. தா. ..	செங்கம் (செ. வ.)
98	சிகாமணி, திரு. பொ. ..	திருவொற்றியூர்.
99	சிவசாமி, திரு. செ.	இளையாங்குடி
100	சிவபெருமாள், திரு. மு. ..	ஓமலூர்.
101	சின்னசாமி, திரு. வ. ..	சேந்தமங்கலம் (ஆ.வா.)
102	சின்னசாமி, திரு. வி. கொ. ..	பவானிசாகர்.
103	சின்னையா, திரு. வீ. ..	குளத்தூர் (செ.வ.)
104	சின்னராசு, திரு. கு. இரா. ..	கிருஷ்ணகிரி.
105	சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ.	குளித்தலை.
106	சுந்தரம், திரு. ப.	திருப்பத்தூர்.
107	சுந்தரம், திரு. மு.	ரிஷிவந்தியம்.
108	சுந்தரராஜ், திரு. நா. ..	திருமயம்.
109	சுந்தரராஜன், திரு, மு. ..	விருதுநகர்.
110	சுப்பராயன், திரு. என். ..	பனைமரத்துப்பட்டி.
111	சுப்பிரமணியம், திரு. ஆ. சி. ..	கடலாடி.
112	சுப்பிரமணியம், திரு. கே. ஜே.	போளூர்.
113	சுப்பிரமணியம், திரு. டி. ..	ஆண்டிமடம்.

தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதி
	(1)	(2)
114	சுப்பிரமணியம், பாக்கூர், திரு. சு.	உத்திரமேரூர்.
115	சுப்பிரமணியன், திரு. ஓ. ..	சிவகங்கை.
116	சுப்பிரமணியன், திரு. மா. ..	சின்னசேலம்.
117	சுப்பிரமணியன், திரு. வ. மு.	மானாமதுரை (செ.வ.)
118	சுப்ரவேலு, திரு. கா. ..	சீர்காழி (செ.வ.)
119	சுப்பு, திரு. க.	வில்லிவாக்கம்.
120	சுப்புலட்சுமி ஜெகதீசன், மாண்புமிகு திருமதி (அமைச்சர்). ..	மொடக்குறிச்சி.
121	சுப்பையா, திரு. ச. ..	சங்கரநயினார் கோவில் (செ.வ.)
122	சுவாமிதாஸ், திரு. அ. ..	பத்மநாபபுரம்.
123	செங்கோட்டையன், திரு. கு. அ.	சத்தியமங்கலம்.
124	செங்கோடன், திரு. கா. ..	கபிலமலை.
125	செல்லப்பா, திரு. அ. ..	வலங்கைமான் (செ.வ.)
126	செல்வராசன், திரு. அ. ..	துறைமுகம், சென்னை.
127	செல்வராஜ், திரு. சீனி ..	சமயநல்லூர் (செ.வ.)
128	செல்வராஜ், திரு. மு. ..	குறிஞ்சிப்பாடி.
129	சொக்கலிங்கம், திரு. கெ. ..	திருப்போரூர் (செ.வ.)
130	சோமசுந்தரம், திரு. ஓ. ப. ..	பொள்ளாச்சி.
131	சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்).	கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
132	சௌந்திரராஜன், திரு. கே.	திருச்சிராப்பள்ளி-2.
133	சௌந்திரராஜன், மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். (அமைச்சர்)	ஸ்ரீரங்கம்.
134	சௌந்திரராஜன், திரு. மு. ரா.	பவானி.
135	ஞானசிகாமணி, திரு. தே. ..	விளவங்கோடு.
136	தங்கவேல், திரு. ர.ச. ..	வால்பாறை (செ.வ.)
137	தங்கவேலு கவுண்டர், திரு. பொ.	மேலமலையனூர்.
138	தண்டபாணி, திரு. ரா. க. சு.	காங்கேயம்.
139	தமிழரசன், திரு. இ. ..	பேரணாம்பட்டு (செ.வ.

தொடர் எண்ணும் உறுப்பினர்கள் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
140 தனசேகரன், திரு. ந. ..	தூத்துக்குடி.
141 தனபால், திரு. ப. ..	சங்கரி (செ.வ.)
142 தனுஷ்கோடி, திரு. கோ. ..	ராஜபாளையம் (செ.வ.)
143 தாமரைக்கனி, திரு. இரா. ..	ஸ்ரீவில்லிபுத்தூர்.
144 திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத்தலைவர்).	அறந்தாங்கி.
145 திருவேங்கடம், திரு. பெ. சு.	கலசப்பாக்கம்.
146 துரை கோவிந்தராசன், திரு. (அரசாங்கத் தலைமைக் கொரடா).	திருவோணம்.
147 துரைசாமி, திரு. ப.	ராசிபுரம்.
148 துரை முத்துசாமி, திரு. ..	சங்கரபுரம்.
149 துரை முருகன், திரு. ..	இராணிப்பேட்டை.
150 துரைராஜ், திரு. சு. ம. ..	பொன்னேரி (செ.வ.)
151 துலுக்காணம், திரு. வ. ..	உளுந்தூர்பேட்டை (செ.வ.)
152 தைலப்பன், திரு. டி. எம். ..	ஒரத்தநாடு.
153 நடராசன், திரு. ஆர். ..	பேரூர்.
154 நடராசன், திரு. எஸ். ..	தஞ்சாவூர்.
155 நல்லதம்பி, திரு. தீ. சு. ..	பார்க்டவுன், சென்னை.
156 நாச்சிமுத்து, திரு. க. ..	பொங்கலூர்.
157 நாச்சிமுத்து கவுண்டர், திரு. கே. பி.	மேட்டூர்.
158 நாராயணன், திரு. ரா. ..	தாரமங்கலம்.
159 பட்டாபிராமன், திரு. செ. ..	திருவள்ளூர்.
160 பண்ணை சேதுராம், திரு. கே.	பெரியகுளம்.
161 பரமசிவம், திரு. மொ. ..	வானூர் (செ.வ.).
162 பரமசிவன், திரு. ஏ. எம். ..	மேலூர்.
163 பழனிசாமி, திரு. சு. ..	மேட்டுப்பாளையம்.
164 பழனிசாமி, திரு. சொ. நா.	அவினாசி.
165 பழனிமுத்து, திரு. சி. ..	ஆத்தூர்.
166 பழனியப்பன், திரு. அ. ப. ..	ஒட்டன்சத்திரம்.
167 பழனிவேல், திரு. என். ..	பழனி (செ.வ.).
168 பாண்டியன், திரு. பி. எச். ..	சேரன்மாதேவி.

	தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும்.	தொகுதி.
	(1)	(2)
169	பாலகிருஷ்ணன், திரு. சோ. ..	முதுகுளத்தூர்.
170	பாலகுரு, திரு. வெ. ..	சோழவந்தான்,
171	பாலன், திரு. சு.	பெரம்பூர், சென்னை.
172	பாலாஜி, திரு. க. ..	காஞ்சிபுரம்.
173	பாலுச்சாமி, திரு. அ. ..	நிலக்கோட்டை (செ.வ.).
174	புருஷோத்தமன், திரு. து. ..	சைதாப்பேட்டை, சென்னை.
175	புஸ்பராஜு, திரு. த.	ஆலங்குடி.
176	பெரியசாமி, திரு. டி. பி. எம்.	மதுரை மேற்கு.
177	பெரியசாமி, திரு. மொ. ..	மங்களூர் (செ. வ.)
178	பெரியசாமி, திரு. ரா. ..	உப்பிலியாபுரம்.
179	பெருமாள், திரு. என்.	வரகூர் (செ. வ.)
180	பெருமாள், திரு. ரா. கு. ..	விளாத்திகுளம்.
181	பொன்னுசாமி, டாக்டர் ஏ.	பெருந்துறை.
182	பொன்னுரங்கம், திரு. ப. ..	இராயபுரம், சென்னை.
183	பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்)	திருச்செங்கோடு.
184	மணிமாறன், திரு. ஆர். ..	திருப்பூர்.
185	மணிமாறன், திரு. மா. ..	நன்னிலம் (செ.வ.).
186	மணிமுடி, திரு. எஸ். ..	எழும்பூர், சென்னை. (செ. வ.)
187	மருதாசலம், திரு. க. ..	தொண்டாமுத்தூர்.
188	மனோகரன், மாண்புமிகு திரு. கி. (அமைச்சர்)	பாளையங்கோட்டை.
189	மாணிக்கம், திரு. சி... ..	திருச்சிராப்பள்ளி-1.
190	மார்க்கபந்து, திரு. ரா. ..	அணைக்கட்டு.
191	மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் ..	(நியமன உறுப்பினர்).
192	மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.	பட்டுக்கோட்டை.
193	மீனாட்சிசுந்தரம், திரு. மா.	வேதாரண்யம்.
194	முசிரிபுத்தன், திரு. பி. (அமைச்சரின் பேரவைச் செயலர்).	முசிரி.
195	முத்துசாமி, திரு. பா. கா. சி.	தர்மபுரி.

தொடர் எண்ணும் உறுப்பினர்கள் பெயரும்.		தொகுதி.
	(1)	(2)
196	முத்துசாமி, திரு. சு. ..	ஈரோடு.
197	முத்துசாமி கரையாளர், திரு.சு.	தென்காசி.
198	முத்தையா, திரு. இரா. ..	சேடப்பட்டி.
199	முத்தையா, திரு. கே. கே. ..	மருங்காபுரி.
200	முருகேசன், திரு. கூ. ச. ..	திருவரம்பூர்.
201	முனிரத்தினம், திரு. இரா. ச.	கும்மிடிபூண்டி.
202	முனுஆதி, திரு. மாண்புமிகு (பேரவைத் தலைவர்) ..	தாம்பரம்.
203	முனுசாமி, திரு. பொ. ..	வந்தவாசி (செ.வ.).
204	மூக்கையா தேவர், திரு. பி. கே.	உசிலம்பட்டி.
205	யூசுப், திரு. யா. சை. மு. ..	ராதாபுரம்.
206	ரகுமான்கான், திரு. அ. ..	சேப்பாக்கம்-சென்னை,
207	ரகுராமன், திரு. வி. ..	புவனகிரி.
208	ரகோத்தமன், திரு. கோ. ..	முகையூர்.
209	ரசாக், திரு. எம். எம். ஏ. ..	கடையநல்லூர்.
210	ரமணி, திரு. கு.	கோயம்புத்தூர் கிழக்கு.
211	ராமதாஸ், திரு. பி. ..	போடிநாயக்கனூர்.
212	ராமநாதன், திரு. சி. ..	விருத்தாசலம்.
213	ராமலிங்கம், திரு. ஏ. ..	காட்டுமன்னார்கோவில் (செ. வ.).
214	ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. ..	புதுக்கோட்டை.
215	ராஜு, திரு. செ. மெ. ..	தலைவாசல் (செ. வ.).
216	ராஜு, திரு. வி. கே. ..	அரக்கோணம் (செ.வ.).
217	லட்சுமிநாராயணன், திரு. என்.	மதுரை மத்திய தொகுதி.
218	லத்தீப், திரு. எம், ஏ. ..	வாணியம்பாடி.
219	வடிவேல், திரு. கு. ..	கரூர்.
220	வரதராஜன், திரு. என். ..	திண்டுக்கல்.
221	வரதராஜன், திரு. சௌ. வே.	சேலம்-1.
222	வாசன், திரு. சீ. மு. ..	வேடசந்தூர்.
223	வின்செண்ட், திரு. எம். .. (அமைச்சரின் பேரவைச் செயலர்).	நாகர்கோவில்.
224	விஜயராகவன், திரு. பொ.	கிள்ளியூர்.

தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1)		தொகுதி (2)
225	வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா.	சிங்காநல்லூர்.
226	வெள்ளைச்சாமி, திரு. ஆ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	ஆத்தூர்.
227	வேங்கா கவுண்டர், திரு. பி...	வீரபாண்டி.
228	வேணுகோபால், திரு. த. ..	தண்டராம்பட்டு.
229	வேலுச்சாமி, திரு. ஓ. சோ.	ஓட்டப்பிடாரம் (செ.வ.)
230	ஜகதீசன், திரு. ஆனூர் பு. கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	செங்கல்பட்டு.
231	ஜான் வின்சென்ட், திரு. மு.	நாங்குனேரி.
232	ஜெபமணி, திரு. ர. ..	சாத்தான்குளம்.
233	ஜெயராமன், திரு. வே. இரா.	தேனி.
234	ஜெயவேலு, திரு. எம். ஏ. (அமைச்சரின் பேரவைச் செயலர்)	காட்பாடி.
235	ஜேம்ஸ், திரு. ஜே. ..	திருவட்டாறு.

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள்—

1 திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி.

2 திரு. எஸ். டி. சோமசுந்தரம்.

3 திரு. ஆர். எம். வீரப்பன்.

4 திரு. கே. நாராயணசாமி.

5 திரு. எஸ். இராகவானந்தம்.

6 திரு. கே. இராஜா முகமது.

தலைமை வழக்கறிஞர் —

திரு. வி. பி. இராமன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

——

திங்கட்கிழமை, 1979 ஏப்ரல், 23

——

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

கல்லூரிகளில் கூட்டுறவு பொது சமையற்கூடங்கள்

*வினா எண். 774—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்லூரிகளில் கூட்டுறவு 'பொது சமையற்கூடங்கள' முறை அமுல்படுத்தப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில் எத்தனை கல்லூரிகளில்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:

(அ) கல்லூரிகளில் பொதுச் சமையற்கூட முறை அமுல் படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) இதுவரை 28 கல்லூரிகளில் இக்கூடங்கள் துவக்கப் பட்டுள்ளன.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, 28 பொது சமையல் கூடங்களை துவக்கப் பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந் தெந்த இடங்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அதற்கான பட்டியல் என்னிடத்தில் இருக் கிறது. அதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொர்ணம் அவர்களிடத்தில் நான் கொடுத்துவிடுகிறேன்.

'கற்பகம்' சிறப்பங்காடி' வேலூர்.

* வினா எண். 775—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டம், வேலூரில் உள்ள கற்பகம் சிறப்பங்காடியில் 1978–ஆம் ஆண்டில் தீபாவளி இனிப்புகள் எவ்வளவு ரூபாய் மதிப்பிற்குத் தயார் செய்யப் பட்டது?

(ஆ) எவ்வளவு ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:—

(அ) ரூ. 10,330 மதிப்புள்ள தீபாவளி இனிப்புகள் தயார் செய்யப்பட்டது.

(ஆ) ரூ. 11,340-க்கு விற்பனை செய்யப்பட்டன.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி தயாரிக்கப்பட்ட இனிப்புகளில் மீதி என்ன செய்யப் பட்டது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கற்பகம் சிறப்பு அங்காடியில் தயாரிக்கப் பட்ட இனிப்புகள் விற்பனை செய்யப்பட்டு விட்டன. ஆகவே, அந்தப் பிரச்னை எழவில்லை.

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இனிப்புகள் என்று அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள். அதில் எந்தெந்த வகையான இனிப்புகள் என்று சொல்லவில்லை. உதாரணமாக, ஜிலேபி, மைசூர்பாக் என்று பல வகையான இனிப்புகள் இருக்கின்றன. எந்தெந்த வகை யான இனிப்புகள் என்று அறிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் எந்தெந்த வகையான இனிப்புகளை மக்கள் விரும்புகிறார்களோ அதை அனுசரித்து, அதற்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டது.

1979 ஏப்ரல் 23]

தலைக்குந்தா கிராமத்தில் கல் உடைக்க அனுமதி.

*வினா எண். 776—திரு. கே. உச்சி: மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை ஒன்றியம், தலைக்குந்தா என்ற கிராமத்திலுள்ள போயர் சமுதாயத்தினர் தாங்கள் இதுவரை கல்லுடைத்த இடத்தில் கல்லுடைக்க அனுமதி கேட்டு கோரிக்கை ஏதாகிலும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், கல்லுடைக்க வழங்கும் அனுமதியில் மாறுதல்கள் ஏதாவது செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) நீலகிரி மாவட்ட உதகை வடக்கு வனசரகத்தைச் சார்ந்த முத்தினாடு கல் குதைக்குழியில் கல்லுடைப்பதற்கு 'தலைக்குந்தா' என்ற கிராமத்திலுள்ள போயர்கள் அனுமதி கேட்டு நீலகிரி மாவட்ட தெற்குக் கோட்ட மாவட்ட வன அலுவலரிடம் கோரிக்கை வரப்பெற்று அனுமதிச் சீட்டின் பேரில் அவர்கள், அங்கீகரிக்கப்பட்ட கல்—குதைக்குழியில் (quarry) கல்லுடைக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

(ஆ) இல்லை.

பேரறிஞர் அண்ணா எழுதிய நூல்கள்

*வினா எண். 777—திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரறிஞர் அண்ணா எழுதிய நூல்களின் பட்டியல் அரசின் கைவசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) அரசுக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் * விவர அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

* 116-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய நூல்கள் பல இன்னும் இருக்கின்றன. ஆனால், இங்கு வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையைப் பார்க்கும்போது சில குறிப்பிட்ட புத்தகங்கள் மட்டும் தான் கையில் இருப்பதாகத் தெரிகிறது. இந்தப் பட்டியலில் இல்லாத புத்தகங்களை—அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய புத்தகங்களை—அரசு வாங்கி கையிருப்பில் வைக்குமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: கிடைத்திருக்கின்ற அளவுக்கு உள்ள புத்தகங்களின் பட்டியல் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருகிறது. மாண்புமிகு உறுப்பினர் மேலும் அவருக்கு கிடைத்த தகவல்களை தருவார்களேயானால் அவைகளையும் சேகரிக்க முயற்சி எடுக்கப்படும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா அவர்கள் எழுதியுள்ள நூல்களில் 'கம்ப ரசம்' என்ற புத்தகம் இந்த லிஸ்டிலிருந்து நீக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய நூல்களின் பட்டியல் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. பட்டியலில் எதைச் சேர்ப்பது, எதை நீக்குவது என்கின்ற பிரச்னை இப்போது எழவில்லை. ஆகவே, இதற்கான பதில் இல்லை.

விராச்சிலை கிராமத்தில் உள்ள அரிசனக் குடியிருப்புகள்

*வினா எண். 778—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலூகாவில் உள்ள விராச்சிலை கிராமத்தில் கட்டப்பட்டுள்ள அரிசன குடியிருப்புகள் மோசமான நிலையில் உள்ளதால் இன்னும் அம்மக்கள் குடியேறவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், விராச்சிலை கிராமத்தில் கட்டப்பட்டுள்ள அரிசன குடியிருப்புகள் மோசமான நிலையில் இல்லை. கட்டப்பட்ட அத்தனை குடியிருப்புகளிலும் அரிசன மக்கள் குடியேறியுள்ளார்கள்.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

1979 ஏப்ரல் 23]

திரு. நா. சுந்தரராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு இதிலுள்ள பயம்—

I am afraid that the Hon. Minister has been given wrong information.

அமைச்சர் அவர்களுக்குத் தவறான தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்களே நேரடியாகச் சென்று பார்வையிட்டோ அல்லது பொறுப்புள்ள அதிகாரிகள் யாரை யாவது அனுப்பியோ இதைப் பார்வையிடுவார்களா? அங்கே 120 வீடுகள் கட்டப்பட்டு, கிட்டத்தட்ட 20 வீடுகளில்தான் மக்கள் குடியேறியிருக்கிறார்கள். மற்ற வீடுகள் எல்லாம் திறப்பு விழாவே நடைபெறவில்லை. முன்னால் இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்திலும் திறப்பு விழா நடைபெறவில்லை. அதன் பின்னால் ஆளுநர் அவர்கள் ஆட்சி காலத்திலும் திறப்பு விழா நடைபெறவில்லை. பின்னால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பின்னும், அமைச்சர் அவர்கள் அந்த இடங்களில் தீவிரமாக சுற்றுப்பயணம் செய்த பின்பும் இதுவரை இந்த வீடுகள் திறந்து வைக்கப்படவில்லை. காரணம், அந்த வீடுகள் எல்லாம் எப்போது இடிந்து விழுந்து விடுமோ என்கிற அச்சம் இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அமைச்சர் அவர்கள் நேரடியாகவோ அல்லது அதிகாரிகள் மூலமாகவோ இந்த நிலைமைகளை அறிந்து அதன் மீது நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கேட்கப்பட்டிருக்கிற கேள்வி. அங்கு கட்டப்பட்ட வீடுகள் மோசமான நிலையில் இருக்கிறதா என்று. அதற்குப் பதிலாக மோசமான நிலையில் இல்லை என்று சொல்லியிருக்கிறேன். சில குறைபாடுகள் இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. அதை அந்தந்த வீடுகளின் சொந்தக்காரர்கள்தான் போக்கிக் கொள்ள வேண்டும். இதில் அரசாங்கம் ஒன்றும் செய்வதற்கில்லை.

திரு. வீ. சின்னையா: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலூகா, காரையூர் கிராமத்தில் அரிசனங்களுக்கு கட்டிக்கொடுக்கப்பட்ட வீடுகள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்விக்கு தொடர்பில்லை. திரு. கூத்தகுடி சண்முகம்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, குடி போவதற்கு முன்னால் குறைகள் ஏற்பட்டிருந்தால், அந்த வீடுகள் யாருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அவர்கள்தான் அந்த

குறைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கையா? வீடுகளில் குடி போவதற்கு முன்னால் குறைகள, கோளாறுகள் இருந்தால் அதையும் அங்கே குடி போகிறவர்கள்தான் ரிப்பேர் செய்து கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் சொல்வது சரிதானா? ஆகவே, பெருவாரியாக குறைகள் கோளாறுகள் இருப்பதாக சொல்லப்படுகின்ற இடங்களில் உள்ள வீடுகளில் இவற்றைப் போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த வீடுகள் எல்லாம் 1974-76 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்டவை. கட்டப்பட்ட வீடுகளில் எங்கெங்கு குறைகள் கோளாறுகள் இருக்கின்றன என்பதைப் பார்த்து, இப்படிப்பட்ட தவறுக்கு யார் காரணம் என்பதைக் கண்டு பிடித்து, நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இதைக் கட்டியவர்கள் யார், இந்தக் கோளாறுகளுக்கு யார் காரணம் என்பதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் முற்பட்டிருக்கிறது. இருந்தாலும் இப்படிப்பட்ட வீடுகள் கட்டியதற்கு முழுப் பொறுப்பும் இந்த அரசை சேர்ந்ததல்ல.

திரு. நா. சுந்தரராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறிப்பிட்ட ஊரில் இப்படிப்பட்ட குறைகள் இருக்கின்றன என்று இந்த அவையில் இரண்டு ஆண்டுகளாக என்னால் பேசப்பட்டவை. ஆனால், இதுநாள் வரைக்கும் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதில் குறைபாடுகள் இருக்கின்ற காரணத்தினால், இதைத் திறந்து வைக்கவேண்டும் என்று அதிகாரிகள் செயல்படவில்லை என்று நினைக்கிறேன். 120 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்ற காலனியை எந்த அமைச்சர்களைக் கொண்டும் திறந்து வைக்க அங்குள்ள அதிகாரிகள் செயல்படவில்லை. அமைச்சர் அவர்களே இதை நேரடியாக பார்வையிட்டு, இதில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள முன் வருவார்களா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, கட்டப்பட்ட எல்லா வீடுகளையும் அமைச்சர் திறந்து வைக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. ஆங்காங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர்களும், மாவட்ட ஆட்சியாளர் போன்றவர்களும் திறந்து வைக்கலாம். அதிலே இந்த அரசுக்கு எந்த விதமான ஆட்சேபணையும் இல்லை. நான் நேரில் சென்று

1979 ஏப்ரல் 23]

பார்வையிடுவதைவிட, இந்தத் துறையைச் சேர்ந்த ஒரு காரியை அனுப்பி அறிக்கை பெற்று கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இந்தக் கேள்வியில், இந்தத் தொகுதி உறுப்பினர் சொல்லுகின்றார், இந்தக் குடியிருப்பில் இன்னும் குடியேறவில்லை என்று. குடியிருப்பதற்கு லாயக்கில்லாத நிலைமையில் இருக்கின்றது என்று அவர் சொல்லியிருக்கிறார். அமைச்சர் அவர்கள் அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை; ஒரு சில வீடுகள் பழுது அடைந்திருக்கின்றன என்று கூறியிருக்கிறார். இதில் உண்மையான நிலை என்ன? 120 குடியிருப்புகளும் மக்கள் குடியேறுவதற்கு இயலாத நிலைமையில் இருக்கின்றதா அல்லது ஒருசிலர் அனுமதி இல்லாமல் 5 அல்லது 10 பேர்கள் அந்த வீடுகளில் குடியேறியிருக்கிறார்களா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, உண்மை நிலையை நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன்,

திரு. ஓ. சோ. வேலுச்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு கட்டப்பட்ட வீடுகள் ஒப்பந்தக்காரர்கள் மூலமாக கட்டப்பட்டிருக்கின்றன. அந்த ஒப்பந்தக்காரர்கள் மேலும் நடவடிக்கை எடுப்பதோடு மட்டுமல்லாமல், அரசாங்கமே அந்த வீடுகளைக் கட்டிக்கொடுக்க ஏதாவது பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, தற்போது அதுபற்றி எதுவும் பரிசீலனையில் இல்லை; எதிர்காலத்திலே பரிசீலிக்கலாம்.

திரு. பொ. உத்திராபதி: பேரவைத் தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு கட்டப்பட்ட இந்த வீடுகள், காலனிகள் சம்பந்தமாக 1974, 1975, 1976 உள்ள ஒப்பந்தக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்போவதாகச் சொன்னார்கள். நடவடிக்கை எடுக்கட்டும். நான் தவறு என்று சொல்லவில்லை. அதே நேரத்தில் குடியிருப்பு வீடுகளுக்கும், குடியேறுபவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டும். கட்டிடத்திற்கும் குடியிருப்பவர்

களுக்கும் சம்பந்தமில்லை. அரசாங்கம் கட்டிக்கொடுத்த வீட்டை, எந்த அரசாங்கமாக இருந்தாலும், இந்த அரசாங்கம் அதை சரிசெய்து குடியிருக்க வாய்ப்பளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, கட்டப்பட்ட வீடுகளில் சில குறைபாடுகள் இருப்பது அரசின் கவனத்திற்கு அடிக்கடி வந்துகொண்டுதான் இருக்கின்றது. அவ்வப்போது இந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளை அனுப்பி, ஏன் இப்படிப் பழுதானது, எப்படிக் கட்டப்பட்டிருக்கின்றது ஏன்பதை ஆராய்ந்து பார்த்து சம்பந்தப்பட்ட அத்தனை பேர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் முற்பட்டிருக்கிறது. இதற்காக ஒரு தனி கவனம் செலுத்தினால் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியுமா என்பது பற்றி இப்போது பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. எம், ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, கட்டப்படுகின்ற, கட்டப்பட்ட வீடுகள் அரிசன குடியிருப்பு வாரியத்தின் அடிப்படையிலே செயல்படுகின்றது. அவர்களுடைய கண்காணிப் பின்கீழ் இருக்கிறது. இதுவரையில் மாநிலத்தில் எத்தனை வீடுகள் வாரியத்தால் கட்டப்பட்டிருக்கின்றது? அவைகளில் எத்தனை வீடுகள் பழுதடைந்த காரணத்தால், யாரும் குடியேறாத நிலை உருவாகி யிருக்கிறது? ஊருக்கு வெளியே கட்டப்படுகின்ற காரணத்தால் அங்கு குடியேறாத நிலையில் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்? இதையெல்லாம் போக்க, ஊருக்கு அருகாமையிலேயே இனிமேல் கட்டப்படுகின்ற வீடுகள், ஊருக்குள்ளேயே கட்டுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இதுவரை 38,211 வீடுகளை இந்த வாரியம் கட்டி முடித்திருக்கிறது. ஏற்கனவே நிலத்தைக் கையகப்படுத்திய அந்த வீட்டு மனைகளில்தான் இந்த வீடுகளைக் கட்ட அரசாங்கம் அனுமதி அளிக்கிறது. முன்பு எங்கெங்கு ஆர்ஜிதம் செய்தார்களோ அங்குதான் வீடு கட்ட முடியும். தற்போது கூடுமான வரை கிராமப் பகுதிகளில் கிராமத்தை ஒட்டிய இடங்களில் இதுபோன்ற மனைகளைக் கையகப்படுத்த வேண்டுமென்ற ஆணை இடப்பட்டிருக்கிறது. எதிர் காலத்தில் இந்த பணிகளை ஊரை ஒட்டிய பகுதிகளில் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. சிவசாமி: 1974-75—ம் ஆண்டில் ஒப்பந்தக்காரர்கள் கால்வாசி, முக்கால் வாசி வீடுகளைக் கட்டாமலே பில்களுக்கான பணம் முழுவதையும் வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள் என்று

சொல்லப்படுகிறது. இதனால் பல அரிசன குடியிருப்புகள் கட்டப் படாமலே இருந்து கொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட வீடு களைக் கட்டிக் கொடுக்க கவனம் செலுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: எந்தெந்த ஊர்களில் அப்படி வீடுகள் கட்டி முடிக்கப்படாமல் இருக்கின்றன என்ற தகவலைத் தருவார்களானால் அதுபற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: எந்த அரசாங்கம் வந்தாலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனியாகத்தான் காலனி கட்டித் தருகிறார்கள். புரட்சித் தலைவர் அரசாங்கம் தீண்டாமையை ஒழிக்கிற அடிப்படையில் எல்லா சமுதாய மக்களும் வாழ்கிற பகுதியில் அந்த மக்களுக்கு மத்தியில் வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்த அரசைப் பொறுத்தவரை ஏழை முன்னேறிய சமுதாயத்தைச் சேர்ந்தவர் களுக்கும் 10 சதவிகிதம் வீட்டு மனையோ வீடோ தரவேண்டு மென்று ஆணையிட்டிருக்கிறது. சாதியற்ற சமுதாயத்தை உரு வாக்கவும், எல்லோரும் சமமாக இருப்பதற்கும் ஒரே குடியிருப்பு பகுதிகளில் எல்லோரும் சேர்ந்து வாழ வழிவகை செய்வதைப் பொறுத்தவரை இந்த அரசாங்கத்திற்கு தங்கு தடை இல்லை. அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. வீ. சின்னைய்யா: அரசாங்கத்தால் அரிசனங்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படுகின்ற வீடு அவர்களுக்கு ஒதுக்கும்போது பள்ளர், பறையர், சக்கிலி என்ற மூன்று இனத்தவர்களாகப் பாகுபாடு செய்து தரப்படுகிறது. கட்டப்பட்ட வீடுகள் அவரவர்களுக்குத் தனித்தனியாக ஒதுக்கப்படுகிறது. இந்த அரசு இனிமேல் இந்த நிலையைக் கையாளாமல் பொதுவாக அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தாழ்த்தப் பட்ட சமுதாயத்தில் மட்டுமல்ல. எல்லா சமுதாயத்திலும் அந்த சாதிக்குள்ளே பல பிரிவுகள் இருப்பதை இந்த அரசும் அறியும். நாடும் அறியும். இந்த அரசைப் பொறுத்தவரை எடுத்துத் தருகிற னைகளில் வீடு கட்டிக் கொடுக்கிறது. சின்னையனா பா ன்னையனா என்று பார்ப்பதில்லை.

டாக்டர் கே. சமரசம்: தர்மபுரி மாவட்டம், என்னுடைய தொகுதியில் கடந்த ஆறு ஆண்டுகளாக

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுவான கேள்வியாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட இடத்தைப் பற்றித் தகவல் இருக்காது.

திரு. யா. சை. மு. யூசுப்: அரிசனங்களுக்கான பள்ளிக் கூடத்தைக் கட்டும் பொறுப்பு ஒருசில அரிசனங்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்ற காரணத்திற்காக அந்தக் காண்டிராக்டர்களுக்குத் தொல்லைகள் கொடுக்கப்படுகின்றன என்ற தகவல் வந்திருக்கிறது. அப்படி அரசுக்குத் தகவல் வந்திருக்குமானால் அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற அப்படிப்பட்ட புகார் எதுவும் அரசுக்கு இதுவரை வரவில்லை.

திரு. ரா. கிருஷ்ணன்: இப்படிப்பட்ட காலனிகளிலே அன்-ஆதரைஸ்டு ஆக்குபேஷன் இருப்பது அரசுக்குத் தெரியுமா? ஏற்கனவே பலமுறை புகார் கொடுத்தும் சம்பந்தப்பட்ட ஆதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை. அரசு அன்-ஆதரைஸ்டு ஆக்குபேஷனை நீக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இதுபற்றிச் சில ஊர்களிலிருந்து புகார்கள் வந்த உடனேயே உரிய நடவடிக்கை எடுத்து அகற்றுவதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசு செய்து கொண்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: அரிசனங்கள் குடியிருப்பதற்காகக் கட்டிக் கொடுக்கப்படுகிற வீடுகள் அவர்கள் குடியிருப்பதற்கு முன்பாகவே பழுதடைந்து விடுவதாகப் பல உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் மதிப்பீடுகள் தயாரிக்கும் போது இருக்கிற விலையைவிட கட்டி முடிக்கும்போது விலை உயர்ந்து போகிற காரணத்தால் காண்டிராக்டர்கள் சரிவரக் கட்டுவதில்லை. ஆகவே, காண்டிராக்டுக்கு விடும் முறைக்குப் பதிலாக அரிசன வீடு கட்டும் கழகத்தின் மூலமாக, டிப்பாட்மெண்ட் மூலமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இது ஆழ்ந்து சிந்தித்துப்பார்க்கவேண்டிய பிரச்சினை. அது பற்றிய சாத்தியக் கூறுகளை அரசு பரிசீலிக்கும்.

1979 ஏப்ரல் 23]

திரு. கே. சௌந்திரராசன்: திருச்சி போன்ற நகரங்களில் வாழ்கின்ற ஆதித் திராவிட மக்கள் பல்லாண்டு காலமாக வீட்டு மனை வேண்டுமென்று மனு கொடுத்தும் இதுவரை கொடுக்கப் படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரிசனக் குடியிருப்பு பற்றிய கேள்வி இது. மனைப்பட்டா கொடுப்பது பற்றிய கேள்வி வேறு அமைச்சருக்குப் போடவேண்டும்.

திரு. கே. சௌந்திரராசன்: அந்த மக்களுக்குக் குடியிருப்புகள் அந்த நகரத்தில் இல்லையென்ற காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுமா? இந்த அரசு அதற்கான முயற்சிகளை எடுக்குமா?

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, பட்டா தருகின்ற பிரச்சினை என்றால் அரசாங்கம் வேகமாகச் செயல்படுகிறது. வீடு கட்டுகின்ற பிரச்சினை என் றால் நிதிநிலையைக் கருத்தில் கொண்டுதான் செய்யவேண்டி யிருக்கிறது, சட்டியிலே வரும்பொழுது அகப்பையிலே அள்ளி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கு எங்கு பரிமாறச் சொல் கிறார்களோ அங்கங்கு பரிமாறப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, இந்த அரிசனங்களுக்கு வீடுகளைக் கட்டுகிறபோது வீடுகள் எந்த முறையிலே அலாட் செய்யப்படுகின்றன, விதி முறைகளுக்குப் புறம்பான முறையிலே அங்கே குடியேற்றப்படு கிறார்கள் என்ற புகார் அரசுக்கு வந்திருக்கிறதா? அப்படி யென்றால் அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, முதலில் இந்த அரசாங்கமே எந்தெந்த மக்களுக்கு எந்த எந்த ஊர்களில் வீட்டுமனைகளைக் கையகப்படுத்தி தந்திருக் கிறதோ அங்கே முன்னுரிமை தந்து வீடுகள் கட்டித் தரு கிறோம். அது அல்லாமல், புறம்போக்கு நிலத்தை நீண்டகால மாக அனுபவித்து வந்து அதற்கு பட்டாவை பெற்றிருப்பார் களானால் அந்த இடத்திலேயும் வீடுகளைக் கட்டித் தருகிறோம். இந்த இரண்டு முறைகளிலேதான் அரசாங்கம் வீடுகட்டுவதை நடைமுறையாக வைத்திருக்கிறது. இதுபோன்ற புகார்கள் எங்

கிருந்து வந்தாலும் உடனுக்குடன் அவைகளைக் கவனிக்கின்ற பொறுப்பை அரசாங்கம் எடுத்துக்கொள்கிறது. இந்த அரசாங்கம் பொறுப்பேற்றதற்குப் பிறகு அதைத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறோம்.

அரிவளூர் அரிசன நலப் பள்ளிக் கட்டிடம்.

*வினா எண். 779—இரா. திரு. இராசமாணிக்கம்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் வட்டம் அரிவளூர் ஊராட்சியில் இயங்கிவரும் அரிசன நலப் பள்ளிக் கட்டிடம் இடிந்து கீழே விழுந்து விட்டதால் ஈராண்டு காலமாக வேறு கட்டிடம் இன்றி பள்ளிக்கூடம் மரத்தடியில் நடந்து வருவது குறித்து அரசுக்கு முறையீடு வந்துள்ளதா?

(ஆ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:

(அ) ஆம். 1978-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இது அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

(ஆ) 5000/-ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் தற்காலிக கட்டிடம் கட்டப்பட்டு, 9-11-78 ஆம் தேதியன்று தலைமை ஆசிரியரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு கே. சௌந்திரராசன்: தலைவர் அவர்களே, இந்த ஒப்பந்தக்காரர்கள் கட்டடங்களைக் கட்டுகிறபோது பள்ளி போன்ற முக்கியமான இடங்களைக் கூட மிகவும் மோசமாகக் கட்டுவதும் அதைத் தொடர்ந்து பல்வேறு சூழ்நிலைகளில் அந்தக் கட்டடங்கள் இடிந்து விழுகின்ற நிலை இருந்து வருகிறது யார் கட்டுகிறார்கள்? அவர்களுக்கு ஒப்பந்தங்கள் அளித்தவர்கள் யார் யார்? சம்பந்தப்பட்ட பொறியியல் வல்லுநர்கள் யார் யார் என்று எல்லாம் பார்த்து அவர்கள் மீது இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த வினாவில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற கட்டடம் எப்போது கட்டப்பட்டது என்ற விவரம் இங்கே இல்லை, இருந்தாலும் பழுதடைந்த நிலைமையை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்த பிறகு உடனடியாக இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்து கட்டடத்தைக் கட்டிக் கொடுத்திருக்கிறோம்.

1979 ஏப்ரல் 23]

மணவாளக்குறிச்சியிலுள்ள வள்ளியாறு பாலம்

* வினா எண். 780 —திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் சாலையில் 16-வது கி. மீ-ல் மணவாளக்குறிச்சியிலுள்ள வள்ளியாறு பாலம் மிக அபாயகரமான நிலையில் இருப்பதாக அரசுக்குப் புகார் ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம்.

(ஆ) தற்பொழுதுள்ள இரும்புப் பாலத்திற்குப் பதிலாக ஒரு வலுவேற்றப்பட்ட சிமெண்ட் காங்கிரீட் பாலம் அமைக்கும் பணிக்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, மணவாளக்குறிச்சி மிக முக்கியமான இடம். மண்ணிலிருந்து தோரியம் என்ற கனிப்பொருளை அங்கே எடுக்கிறார்கள். அங்கே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். வாகனப் போக்குவரத்தும் அதிகமாக இருக்கிறது. அந்த ஊரை இணைப்பது இந்த ஒரே ஒரு பாலம்தான். ஆகவே அந்த ஒரே ஒரு பாலத்தைக் கட்டிக்கொடுக்கன பரிசீலனை, ஆய்வு என்று சொல்லி காலத்தைக் கடத்தாமல் உடனடியாகக் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே வருகின்ற பார்ட் 2 ஸ்கீமிலே எடுத்துக்கொள்ளப்படும், 12 லட்சம் திட்டச் செலவிலே அது மேற்கொள்ளப்படும்.

திரு. யா. சை. மு. யூசுப்: தலைவர் அவர்களே, இத்தகைய அறிக்கையை கொடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'கெதார அள்ள' ஆற்றின் குறுக்கே பாலம்

* வினா எண். 781 — திரு. கே. உச்சி: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உதகை தாலுக்கா, ஏப்பநாடு, தூனேரி, சின்னக்குன்னூர், கடநாடு ஊராட்சிகளை இணைக்கும் தொரையட்டி-எப்பநாடு சாலையில் ஓடும் 'கெதார அள்ள' ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்ட அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம்.

தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் உரம்

* வினா எண். 782 — திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் உற்பத்தியாகும் உரம் எவ்வளவு?

(ஆ) இரண்டிற்கும் உள்ள விலை வித்தியாசம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) & (ஆ) விவரஅறிக்கை ** அவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

உர விலை

* வினா எண் 783—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் வினா எண். 158-க்கு பேரவையில் 3-1-78 அன்று அளித்த விடையையொட்டி கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உர விலையைக் குறைப்பது குறித்து மத்திய அரசிடமிருந்து தகவல் ஏதும் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் தனியார் துறையில் யூரியா 37 லட்சம் அளவிற்கும்,

**119 ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

1979 ஏப்ரல் 23]

பொதுத்துறையில் 20 லட்சத்து 64 ஆயிரம் அளவிற்கும் இருப்பதாக குறிப்பிட்டு இருக்கிறார்கள். இவ்வளவு விலை வித்தியாசம் இருப்பதற்குக் காரணம் என்ன? அந்த விலை வித்தியாசத்தைக் குறைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகப் படித்து இருக்கின்றார்கள் என்று நான் நினைக்கிறேன். உற்பத்தி அளவு எவ்வளவு என்றுதான் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதிலே தனியார் துறையில் யூரியா 37,45,000 மெட்ரிக் டன்கள் என்றும் பொதுத்துறையில் 20,64,000 மெட்ரிக் டன்கள் என்றும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அதேபோல் மெட்ரிக் டன்கள் என்ற அளவில்தான் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. விலையில் அல்ல.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூச்சி மருந்துகள் விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவாகளே, விவசாயிகளுக்கு வேண்டிய 'இடு பொருள்கள்'—இன்புட்—அவைகளுடைய விலையைக் குறைக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு மாநில அரசு கடிதம்அடிக்கடி எழுதி தொடர்பு கொண்டது; ஆனாலும் கடந்த பட்ஜெட்டில் அவர்கள் உரத்தின் விலையை ஓரளவிற்குக் குறைத்தார்களே தவிர, பூச்சி மருந்துக்கள் விலையைக் குறைக்கவில்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த உரம், யூரியா போன்ற உரங்கள் விலை எல்லாம் ரூ. 55 ஒரு மூட்டை என்று விற்றுக்கொண்டு இருந்தது. அவசர காலத்தின் பரிசாக அது மூட்டை ஒன்றுக்கு ரூ. 110-என உயர்த்தப்பட்டது. அதை மீண்டும் ரூ. 55 என்ற அளவிற்குக் கொண்டுவருவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவாகளே, மைய அரசு விலை நிர்ணயித்து—பூல் திட்டம் மூலம்—குறிப்பிட்ட உரங்களின் விலைகளை நிர்ணயித்துக் கொடுக்கின்றது. அதன் காரணமாகத்தான் அந்த விலைகளின் அடிப்படையில் இந்த மாநில அரசு விற்றுக் கொண்டு இருக்கிறது. அந்த விலைகள் எல்லாம் குறைக்கப்பட வேண்டும், விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகும் விலையில் உரங்கள் விற்கப்பட வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு பல தடவை கேட்டு இருக்கிறது. 1-6-74, 18-7-75, 1-12-75, இது போன்று அடிக்கடி மத்திய அரசு சிலவகை இரசாயன உரங்களின் விலைகளைக் குறைத்துள்ளது.

திரு. இ. தமிழரசன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உரம் உற்பததி செய்யும் தொழிற்சாலைகள் தனியார் துறையில் எவ்வளவு? பொதுத் துறையில் எவ்வளவு? இரண்டையும் அரசாங்கமே ஏற்று நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே 5 இடங்களில் தனியார் துறை மூலமாகவும், இரண்டு இடங்களில் பொதுத் துறை மூலமாகவும் உரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

திரு. து. இராமசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பூச்சி மருந்து விலையைக் குறைப்பதற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து இருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இதேபோன்று நெல் விலையை உயர்த்த வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள், சர்க்கரை விலைப் பிரச்னை என்றாலும் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டு இருப்பதாகச் சொல்கிறீர்கள். ஆகவே, நாம் கேட்டுக்கொண்டு இருக்கிற நிலையில் இருக்கிறோமே தவிர மத்திய அரசு நம்முடைய வேண்டுகோளை, கோரிக்கையை ஏற்றுக்கொள்வதாக இல்லை. ஆகவே, அதற்காக மத்திய அரசை வற்புறுத்தும் வகையில் ஒரு போராட்டத்தைத் துவங்க இந்த அரசு தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அதோடு பூச்சி மருந்துக்கு மத்திய அரசு விலை குறைக்காவிட்டாலும் மாநில அரசு சப்சிடி கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, பூச்சி மருந்தின் விலையையும், உரத்தின் விலையையும் கட்டுப்படியாகக்கூடிய விலையில் நிர்ணயிக்கவேண்டும்; விற்கப்பட வேண்டும் என்று நாம் மத்திய அரசிடம் பல தடவை கேட்டுக் கொண்டோம். ஆனாலும் கடந்த பட்ஜெட்டில் ஒரு டன்னுக்கு ஏறத்தாழ ரூ. 100 அளவிற்கு அவர்கள் விலையைக் குறைத்து இருக்கிறார்கள். அப்படி குறைத்து இருந்தும் 50 கிலோ மூட்டைக்கு ஏறத்தாழ 5 ரூபாய்தான் குறைக்கப் பட்டு இருக்கிறது. இது கூட விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை இல்லை என்று நாம் அவர்களுக்குத் தெரிவித்து இருக்கிறோம். அதே போல் பூச்சி மருந்தின் விலையையும் குறைக்க வேண்டும் என்று மீண்டும் கேட்டுக் கொண்டு இருக்கிறோம். இதற்காக ஒரு பெரிய போராட்டத்தைத் துவங்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் து. இராமசாமி அவர்கள் சொன்னார்கள். நம்மைப் பொறுத்த வரையில் நாங்கள் எவ்வளவு தூரம் வாதாட முடியுமோ அவ்வளவு தூரம் வாதாடிப் பெறவேண்டும் என்று தான் இந்த அரசு கருதிக்கொண்டு இருக்கிறது. அப்படி வாதாடியும் கண்டிப்பாக கிடைக்கவில்லை என்ற சூழ்நிலை ஏற்பட்டால் மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களின் ஒத்தாசையோடும்,

1979 ஏப்ரல் 23]

உதவியோடும், அப்போது இருக்கும் நிலைமைகளை அனுசரித்துக் கொண்டு என்ன செய்யவேண்டுமோ அவைகளை இந்த அரசு கண்டிப்பாகச் செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9—30]

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, உர விலையை குறைப்பது குறித்து மத்திய அரசிடமிருந்து தகவல் வந்திருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். வந்த தகவல் என்ன? அதன் மீது தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அதனால் ஏற்பட்ட பலன் என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நமக்கு வந்திருக்கக்கூடிய தகவல்படி 10-3-79—லிருந்து யூரியா, அம்மோனியம் சல்பேட், கால்சியம், அம்மோனியம் டை, அமோனியம் பாஸ்பேட் இவைகளின் விலை குறைக்கப்பட்டிருக்கிறது. இவைகளை எல்லாம் படித்துக் கொண்டிருந்தால் ஏறத்தாழ 15 நிமிடம் ஆகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தந்திருக்கிற புள்ளிவிவரத்திலிருந்து தனியார் உர உற்பத்திதான் அதிகமாக இருக்கிறது என்பது தெளிவாகிறது. ஆகவேதான் விலை ஏற்றமும், விலையைக் கட்டுப்படுத்த முடியாத நிலைமையும் ஏற்படுகிறது. இந்த நிலையைப் போக்க தனியார் உர உற்பத்தியை விட அரசுத் துறையில் உர உற்பத்தியைப் பெருக்க ஏதாவது திட்டம் இருக்கிறதா? தனியார் உற்பத்தியை தாண்டுகிற அளவுக்கு அரசு உற்பத்தியைப் பெருக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அதுபற்றி மத்திய அரசிடம்தான் ஒப்பந்தம் செய்து கொள்ளும் நிலமை இருக்கிறது. மத்திய அரசு பச்சைக்கொடி காட்டினால் அதை ஏற்றுக்கொள்ள இந்த மாநில அரசு தயாராக இருக்கிறது.

திரு. ந. தனசேகரன் : தலைவரவர்களே, கடந்த ஓராண்டில் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட உரம் எவ்வளவு? எந்த அடிப்படையிலே உரம் இறக்குமதி செய்யப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இறக்குமதி செய்யப்பட்ட உரங்கள் பற்றிய குறிப்பு தற்போது இல்லை. வேண்டுமென்று சொன்னால் நான் அதுபற்றிய விவரங்களை சேகரித்துத்தான் கொடுக்க முடியும். ஆகவே, தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, யூரியா அம்மோனியம் இப்படிப்பட்ட உரங்கள் தமிழ்நாட்டில் எவ்வளவு உற்பத்தியாகிறது? நம்முடைய தேவை என்ன என்பதை அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் ஏற்கெனவே எழுந்த ஒரு உப கேள்விக்கு மத்திய சர்க்கார் விலையைக் குறைப்பதில் அடம் பிடிப்பதாகச் சொன்னார்கள். அப்படி அடம் பிடித்தாலும் மாநில சர்க்கார் ஏதாவது மானியம் வழங்கி, உர விலையை குறைக்க நடவடிக்கை எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, 782-வது கேள்விக்கு கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. எவ்வளவு யூரியா, எவ்வளவு அம்மோனியம், டை அம்மோனியம் பாஸ்பேட் தயாரிக்கிறோம் என்பதைத் தெளிவாக கொடுத்து சொல்லியிருக்கிறோம். மேலும் 'பூல் பிரைஸெஸ்'-இதிருப்பு விலையை நிர்ணயம் செய்யும் அதிகாரம் நம்மிடம் இல்லை; அது மத்திய அரசிடம்தான் இருக்கிறது.

திரு. மு. ஜான் வின்சென்ட் : தலைவரவர்களே, சில உர விநியோகக் கடைகளில் அம்மோனியம் சல்பேட் வேண்டுமென்று கேட்கும்போது யூரியா வாங்கினால்தான் கொடுப்போம் அல்லது டை அம்மோனியம் வாங்கினால்தான் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் வருகின்ற நவம்பர், டிசம்பர் மாதத்தில் போதுமான அளவுக்கு அம்மோனியம் சல்பேட்டும், மற்ற உரங்களும் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு உரங்களில் எந்தவிதமான தட்டுப்பாடும் இல்லாமல் விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான் 1977-78 ஆம் ஆண்டிலும், 1978-79 ஆம் ஆண்டிலும் இந்தியாவிலேயே அதிகமாக உரங்களை உபயோகப்படுத்தும் மாநிலம் தமிழ்நாடுதான் என்ற ஒரு சூழ்நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அம்மோனியம் சல்பேட் கிடைக்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, கால்சியம், அம்மோனியம், நைட்ரேட் போன்ற உரங்கள் கரும்பு, மிளகாய் பயிர்களுக்கு முக்கியமான உரங்களாக இருக்கின்றன, ஆனால் இந்த உரங்களை பெரும் பணக்காரர்கள், பெரிய விவசாயிகள் தங்களுக்குள் கோட்டா போட்டு, பங்கிட்டுக் கொள்கிறார்கள்;

1979 ஏப்ரல் 23]

சிறு விவசாயிகளுக்கு அவை கிடைக்கவில்லை. ஆகவே, எல்லா இடங்களிலும் சிறு விவசாயிகளுக்கும் தாராளமாக கிடைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, தமிழ்நாடு முழுவதும் 12,500 டெப்போக்கள் இருக்கின்றன. இந்த டெப்போக்களில் சிறு விவசாயிகளுக்கு முதலிடம் தந்து இந்த உரங்களைத் தந்து கொண்டிருக்கிறோம். எங்காவது தட்டுப்பாடு இருந்தால் தயவுசெய்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மத்திய அரசு உரங்களின் விலையை குறைத்திருக்கிறது என்று கூறினார்கள். இருந்தாலும் இங்கே நெல் விவசாயம் செய்யும் விவசாயிகளின் பிரச்சனை தீரவில்லை; அவர்களுக்கு கட்டுப்படியாகவில்லை என்று கூறுகிறார்கள்; ஆகவே, மாநில அரசு நெல் விவசாயத்திற்குத் தேவையான உரங்களை 'சப்சிடைஸ்டு ரேட்டில்' விநியோகம் செய்ய முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் கேட்கக்கூடிய கேள்வி உரத்தினுடைய வித்தியாசம் குறைக்கப்பட வேண்டும் என்பது. அவர்கள் உரத்தை சப்சிடைஸ்ட் ரேட்டிலே கொடுக்க வேண்டும் என்று கேட்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே இன்று நிதியமைச்சராக மத்திய அரசிலே இருக்கின்றவர்கள் விவசாயிகளின் பிரதிநிதி என்று அழைக்கப்பட்டவர்கள். 50 இலட்சம் விவசாயிகளை அங்கே டெல்லியிலே கூட்டி ஒரு பெரிய நிகழ்ச்சியையே ஏற்பாடு செய்து காட்டியவர்கள்.

நாம் எல்லாம்எதிர்பார்த்தோம். இந்த பட்ஜெட் விவசாயிகளினுடைய நிதிநிலை அறிக்கையாக அமையும் என்று ஆனால் உரத்தினுடைய விலையைப் பொறுத்தவரையில் ஒரு டன்னுக்கு100ரூபாய் என்ற அளவிலேதான் குறைத்து இருக்கிறார்களே தவிர நாம் எதிர்பார்த்ததைப் போல 500 ரூபாய் 600 ரூபாய் என்ற அளவில் குறைக்கவில்லை. ஆகவே நமது மாண்புமிகு திரு. ஜேம்ஸ் அவர்கள் இங்கே தமிழகத்தில் இருக்கக்கூடிய பிரச்சினையை அங்கே மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

இன்றும்கூட எ. பி. சி, என்று சொல்லக் கூடிய அக்ரிக்கல்சுரல் ப்ரைஸ் கமிஷன் கூடுகிறது. நம்முடைய உணவுத்துறைச் செயலாளர் அவர்களும், அதேபோல் நம்முடைய விவசாய துறைச் செயலாளர் அவர்களும் அந்தக் கூட்டத்திலே கலந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே உடனடியாக டெலிபோன்

மூலம் தொடர்பு கொண்டு அங்கே இருக்கக்கூடியவர்களிடத்தில் சொல்லி நெல்லினுடைய விலையை உயர்த்தித் தரவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் கேட்டுக் கொள்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் ; தலைவரவர்களே, என்னுடைய கேள்வி மாநில அரசு சப்ஸிடைஸ்ட் ரேட்டிலே தமிழ்நாட்டிலுள்ள நெல் உற்பத்தியாளர்களுக்கு உரம் வினியோகம் செய்வதற்குத் தயாரா என்பதுதான்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; பேரவைத் தலைவரவர்களே, அங்கே கொடுத்தால் தான் இங்கே கொடுக்க முடியும். ஆகவே திரு. ஜேம்ஸ் அவர்கள் மத்திய அரசிடம் கேட்டால் நன்றாக இருக்கும்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, இந்த உர உற்பத்தி செய்யக்கூடிய 5 இடங்களிலே தனியார் உற்பத்தி நிறுவனங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். அவை எவை எவை? அதனுடைய உரிமையாளர்கள் யார் யார் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதோடு திரு. ஜேம்ஸ் அவர்கள் கேட்ட கேள்விக்கு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்போது மத்திய சர்க்கார், ஒரு மூட்டைக்கு 5 ரூபாய் 6 ரூபாய்தான் குறைத்திருக்கின்றது என்று சொன்னார்கள். ஆகவே கட்டாயமாக உர விலையைக் குறைக்கவேண்டும் என்று சொன்னால் சிறு விவசாயிகளுக்காவது இந்த மாநில அரசு உரத்திலே மானியமாக ஏதாவது கொடுப்பதற்கு உத்தேசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; பேரவைத் தலைவரவர்களே, 5 தனியார்கள் நிறுவனம் இன்று உரத்தை உற்பத்தி செய்கின்றன. அவைகள் (1) ஈ. அய். டி. (2) ஸ்பிக், (3) கோயம்புத்தூர் பயணியர் ஃபெர்ட்டிலைஸர்ஸ், (4) கோத்தாரி லிமிட்டட் (5) ஷாவாலஸ் ஆகியவை.

பொதுத் துறையிலே இருக்கின்றவை (1) மெட்ராஸ் ஃபெர்ட்டிலைஸர்ஸ் லிமிட்டட், (2) நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் ஆகியவை.

இந்த 7 நிறுவனங்களும்தான் இங்கே தமிழகத்தில் உரத்தினை உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றன. அடுத்து விவசாயிகளுக்கு கொடுக்கக் கூடிய உரங்களுக்கு சப்ஸிடைஸ்ட் ரேட்டில் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், சிறு விவசாயிகளாக இருந்தாலும், பெரிய விவசாயிகளாக இருந்தாலும்

1979 ஏப்ரல் 23]

சப்ஸிடைஸ்ட் ரேட்டில் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் வெள்ளம், புயல் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட சூழ்நிலைகளில் இதுபோன்ற சப்ஸிடைஸ்ட்ரேட்டில் கொடுக்கப்பட்டு வருகிறது. ஏற்கெனவே நாம் கொடுத்திருக்கிறோம்.

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : தலைவரவர்களே, தனியார் கடைகளிலே விற்கப்படுகின்ற உரத்தினுடைய விலை குறைவாகவும், கூட்டுறவு விவசாய வங்கிகளிலே விற்கப்படுகின்ற உரத்தினுடைய விலை கூடுதலாகவும் இருக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆனால் விவசாயிகள் ஃபெடரேஷன் மூலமாகத்தான் வாங்க வேண்டும் என்ற ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால்தான் விலை அதிகமாக விற்கப்படக் கூடிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே விவசாய வங்கிகளிலேயே உறுப்பினர்கள் நேரடியாக வாங்குவதற்கான சூழ்நிலையை அரசு உருவாக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, தனியார் கடைகளில் விற்கப்படுவதற்கும், பொதுத்துறையிலே விற்கப்படுவதற்கும் சிறு வித்தியாசம் இருக்கத்தான் செய்கின்றது. இதற்குக் காரணம் என்னவென்றால், தனியார் துறையினரின் கமிஷனும் பொதுத் துறையிலே உள்ள கமிஷனும் ஒரே மாதிரியாக இல்லை. டிஸ்ட்ரிபியூஷன் மார்ஜின் என்று சொல்லக் கூடிய அனுமதிக்கப்பட்ட கமிஷனில் ஒரு பகுதியை விட்டுக் கொடுத்துத் தனியார் துறை போட்டி மனப்பான்மையோடு விற்பனை செய்கிறார்கள். ஆகவே அதற்கேற்றவாறு, இன்று பொதுத் துறையிலே இருக்கக் கூடிய கடைகளிலும் சரியான நியாயமான விலையில் உரங்கள் கொடுக்கின்ற ஒரு சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்திக் கொண்டு வருகிறது.

[முற்பகல் 9-40]

திரு. து. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூச்சி மருந்துகளுக்கு சப்சிடி கொடுக்கப்படுமா என்று கேட்டேன். அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை. சப்சிடி கொடுக்கப்படும் என்ற முறையில் பதில் தருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, 'சப்சிடி' கொடுக்கப்படுவது என்பது எல்லா காலங்களிலும் கொடுக்கப்பட முடியாது. அப்படி கொடுக்கும் காலத்தில் அவையெல்லாம் சிறு விவசாயிகளுக்கு போய் சேருவது இல்லை என்ற நிலைமை இருப்பதாகத் தெரிகிறது. இயற்கை உற்பாதங்களால் பாதிக்கப்படும் காலங்களில், அதாவது புயல், மழை, வெள்ளம் போன்ற இயற்கை உற்பாத நேரங்களில் இப்படி 'சப்சிடி' கொடுக்கப்படுகிறது. அப்படி கொடுக்கப்படும் காலங்களில்தான் அவைகள் முழுவதுமாக

விவசாயிகளுக்குப் போய் சேருவதில்லை என்று அறியப்பட்டது. இப்பொழுது 'சப்சிடி' கொடுக்கப்படவில்லை. கொடுக்கப் படும் போது கூட இனிமேல் அவைகள் முறையாக விவசாயி களுக்குப் போய்ச் சேரும் விதத்தில் வழிவகைகள் செய்யப் பட்ட பிறகே அரசு கொடுக்க உத்தேசித்துள்ளது.

திரு. துரை கோவிந்தராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, உரத்திற்கு டன்னுக்கு 100 ரூபாய்க்கு குறைத்துக் கொடுக்கக் கூடாது என்றும், அதே நேரத்தில் நெல்லுக்கு குவின்டாலுக்கு 85 ரூபாய்க்கு மேல் கொடுக்கக் கூடாது என்றும் மத்திய அரசிடம் இருந்து அறிக்கை வந்திருப்ப தாகத் தெரிகிறதே அது உண்மையா? அது உண்மையென்றால் அதைக் குறித்து விளக்கமாகச் சொல்ல அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கேள்வி உணவுத் துறையைக் கேட்க வேண்டிய கேள்வி. உணவு அமைச்சரிடம் இந்தக் கேள்வியைக் கேட்டால் பதில் கிடைக்கும் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்; தலைவர் அவர்களே, இந்த உரம் கொடுப்பதிலே தூத்துக்குடி போன்ற பகுதிகளில் கலப்படம் செய்யப்படுவதாகத் தெரியப்படுகிறது. கலப்படம் செய்யப் படுவதற்கான இயந்திரங்கள் எல்லாம் போட்டு சோற்று உப்பைப் போட்டு இந்த உரங்களை தயார் செய்கிறார்கள். யூரியா போன்ற உரங்களை தயார் செய்யப்படுவதாகத் தெரிகிறது, அப்படி கலப்படம் செய்யப்படுவதால், சோற்று உப்பு உரங்களில் யூரியா போன்ற உரங்களில் கலக்கப்படுவதால் நிலங்கள் கெட்டுவிடு வதாக தெரிகிறது. அப்படி கெட்டுவிடுகிற நிலங்களுக்கு ஏதாவது நிவாரணம் கொடுக்க அரசு முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, சாதாரண உப்பை உரங்களிலே கலப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அதுபோன்ற எந்த வித குற்றச்சாட்டும் இதுவரையில் அரசுக்கு வரவில்லை. அரசினுடைய கவனத்திற்கு கொண்டு வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. செ. சதாசிவம்; தலைவர் அவர்களே, நிலங்களுக்கு போடப்படும் துணைச் சத்து உரங்களில் யூரியா, சல்பேட்டு ஆகியவைகளில், கரும்புக்கு தேவையானது சல்பேட்டுதான். மார்க்கெட்டுகளில் சல்பேட்டு தேவையான அளவு கிடைப்ப

தில்லை. கொஞ்சமாக கிடைக்கின்ற காரணத்தினாலேயே அதிகமான விலைக்கு விற்கப்படுகிறது. அதை உடனடியாக குறைப்பதற்கும், தேவையான அளவு சல்பேட் கிடைப்பதற்கும் அரசுவழி வகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டால் உடனடியாக வழி வகை செய்யப்படும்.

திரு. மு. அம்பிகாபதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் விலையானாலும் சரி, கரும்பு விலையானாலும் சரி, உரத்தைப்பற்றியதானாலும் சரி, பூச்சி மருந்துகள் பற்றிய தானாலும் சரி எதுவாக இருந்தாலும் மத்திய அரசு உடனுக்குடன் பதில் அனுப்புவதில்லை என்று சொல்கிறார்கள். விலை நிர்ணயம் செய்வதிலும் அலட்சியப்போக்கு காட்டுகிறார்கள். அதை எதிர்த்து மாநில அரசே தமிழகம் தழுவிய பந்த் ஒன்றை நடத்துவதற்கு, மத்திய அரசை எதிர்த்து நடத்துவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட யோசனை இப்பொழுது இல்லை.

டாக்டர் கே. சமரசம் ; பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தனியார் துறையில் உர உற்பத்தி அதிகம் இருப்பதாக பத்திரிகையிலிருந்து தெரிய வருகிறது. ஆகவே பொதுத் துறையிலும் அதிக அளவில் உர உற்பத்திக்காக அரசு ஏதாவது செயல்திட்டம் வைத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வியாகப் போட்டால் பதில் சேகரித்துத் தருகிறேன்.

திரு, என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது விவசாய உற்பத்திச் செலவு அதிகரித்திருப்பதற்கு உரம் காரணமாக இருக்கிறது. 17: 17 :17 என்ற காம்பௌக்ஸ் உரம் சில ஆண்டுகளுக்கு முன்பாக 54 ரூபாயாக இருந்தது. அது இப்பொழுது 80 ரூபாய், 100 ரூபாய் என்ற அளவுக்கு அதிகமாக விற்கிறது. ஆகவே அதை பொதுவான விலைக்குத் தான் கொடுக்க வேண்டும் என்று ஏதாவது விலை நிர்ணயித்து மத்திய அரசுக்கு மாநில அரசு கோரிக்கை கொடுத்துள்ளதா ? அப்படி இல்லையென்றால், அமைச்சர் அவர்கள் சமீபத்தில் குறிப்பிட்டதுபோல, மத்திய அரசின் அலட்சியப்போக்கை

எதிர்த்து உண்ணாவிரதம் ஆரம்பிப்பதற்கு சகல கட்சியினுடைய ஆதரவையும் பெற முயற்சியை மேற்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நாம் ஏற்கனவே மத்திய அரசிடம் நமக்கு வேண்டிய பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யும்படி. 'காஸ்ட் ஆப் ப்ரொடக்ஷன் பேஸிஸில்' உற்பத்திச் செலவுக்கு ஏற்றவாறு, 'இன் புட்ஸ்', அதாவது இடுபொருள்களை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம், நாம் இவ்வளவு 'காஸ்ட் ஆப் ப்ரொடக்ஷன்', இவ்வளவு குவிண்டாலுக்கு செலவு ஆகிறது என்று கணக்கிட்டு மத்திய அரசிடம் கொடுத்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல 17:17:17 காம்பிளக்ஸ் என். பி. கே. உரம் இப்பொழுது 1600 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருக்கிறது. ஏற்கெனவே குறைக்கப்பட்டது என்றாலும் கூட மூட்டை ஒன்றுக்கு ரூ. 13.58 ரூபாய்தான் குறைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நாம் கேட்டது 13.58 ரூபாய் குறைத்தால் மட்டும் போதாது, இன்னும் உரங்களுக்கு விலை நிர்ணயித்து குறைக்கப்பட வேண்டும் என்றுதான் மத்திய அரசிடம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அவர்கள் இன்னும் அதற்கு எந்தவிதமான முடிவையும் தெரிவிக்கவில்லை. ஆகவே, அதைவிட இதற்குக் குறைவாக நாம் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறோம்.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, உணவுப் பொருள்களுடைய விலைகள் மிகமிகக் குறைந்திருக்கிறது. ஆனால், உரத்தினுடைய விலை மூட்டை ஒன்றுக்கு ரூ. 5/-தான் குறைந்திருக்கிறது. அந்த உணவுப் பொருட்களுடைய விலையையும், இந்த உரத்தினுடைய விலையையும் பார்க்கின்ற காலத்தில் ஏற்கனவே விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த நிலைமைதான் இப்பொழுதும் இருந்து கொண்டிருக்கிறது. உணவினுடைய விலையை நிர்ணயம் பண்ணுவதற்கு மத்திய அரசாங்கத்திற்குத்தான் அதிகாரம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஒத்துக்கொள்கிறோம். ஆனால், உரத்தை தமிழக அரசாங்கமே அதிகமாக உற்பத்தி செய்து, குறைந்த விலையில் கொடுக்க நடவடிக்கை எடுக்குமா? உரத்தினுடைய விலையை இன்னும் குறைத்து மத்திய அரசாங்கத்தோடு போராடி பெறுவீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

1979 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லிய பதிலிலேயே மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு பதில் இருக்கிறது. ஆகவே, அந்தப் பதில்களை யெல்லாம் படித்துப் பார்த்தால் கண்டிப்பாக நல்ல பதில் கிடைக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டிலுள்ள நிலங்களில், பொட்டாசியம், அதாவது, சாம்பல் சத்து குறைந்து விட்டதாக நிபுணர்கள் சொல்கிறார்கள். அது உண்மையா? ஆகவே, தமிழ்நாட்டில், அங்கங்கே, அரசாங்கச் செலவில், சாம்பல் சத்தை நிலங்களில் தூவ அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காகத்தான் வேளாண்மைத் துறையின் மூலமாக, மண் ஆராய்ச்சி நிலையங்கள் ஏற்படுத்தப் பட்டு வருகின்றன. அதேபோல் நடமாடும் மண் ஆராய்ச்சி நிலையங்களும் இருக்கின்றன. எங்கெங்கே, எந்த, எந்தச் சத்துக்கள் குறைவாக இருக்கின்றனவோ, அந்தந்தச் சத்துக்களை நிரப்பக் கூடிய வகையிலே, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு யோசனைகள் சொல்லப்பட்டு வருகின்றன. ஆகவே, எங்கெங்கே, எந்த, எந்தச் சத்துக்கள் குறைவாக இருந்தாலும், அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, ரூ. 55-க்கு விற்றிருந்த உரம், திடீரென்று ரூ. 120-ஆகிவிட்ட காரணத்தாலே, நாட்டினுடைய விவசாயப் பெருங்குடி மக்கள் கஷ்டப்படக் கூடிய வகையில், மத்திய அரசாங்கம் புகுந்து விளையாடி, பொருளாதார நிலைமையைத் தாழ்த்தி இருக்கிறது. அந்த நிலைமையை மாற்றி, அவர்களுக்கு உதவி செய்யும் வகையிலே, இந்த உர விலையைக் குறைக்க என்ன நடவடிக்கை எடுக்கப் படுகிறது என்று கேட்பதோடு, அடுத்தபடியாக, அரசாங்கம் சப்ளை செய்யக்கூடிய உரங்களின் சக்தி, நீண்ட நாட்கள் ஸ்டாக் இருந்ததன் காரணமாக, அதனுடைய சக்தி இழந்துள்ளது. அப்படி சக்தி இழந்த உரங்களை, மீண்டும் அரசாங்கமே திருப்பி எடுத்துக் கொள்ளுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு புகுந்து விளையாடி விட்டது என்று எல்லாம் சொன்னார்கள், அவர்கள் புகுந்து விளையாடினாலும்,

நாம் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். இங்கு உரங்கள் நீண்ட நெடுங்காலமாக ஸ்டாக்கிலே இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள், அப்படிப்பட்ட எந்தவிதமான கருத்தும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப் படவில்லை, அப்படி இருந்தால், தயவு செய்து இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. சௌந்திரராசன்: தலைவரவர்களே, உர விலையை நிர்ணயிக்கும்போது, 'காஸ்ட் ஆஃப் புரடக்ஷன்'-ஐ அடிப்படையாக வைத்து நிர்ணயிக்கிறார்கள். அதற்கு மேலே 'கமிஷன்' வைக்கிறார்கள், என்றெல்லாம் அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். நான் கேட்க விரும்புவது, அரசு தயாரித்த உரத்தின் விலையிலே, காஸ்ட் ஆஃப் புரடக்ஷன் என்ற அடிப்படையிலே வைக்கப்படும் என்ற நிலையிருக்கும் போது, விவசாய விளை பொருள்களுக்கான விலையை அவர்களுடைய உற்பத்திச் செலவுக்கேற்ற வகையிலே நிர்ணயிக்க, அதற்கேற்ற என்ன சரியான நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: சரியான நேரத்தில், சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதுதான் இந்த அரசினுடைய தலையாய கொள்கை. இன்று உற்பத்திச் செலவுக்கேற்றவாறு உரங்களின் விலையை நிர்ணயிக்க வேண்டுமென்று தான் நாம் கேட்கிறோம். அந்த ஆலையில் ஏற்படக் கூடிய உற்பத்திச் செலவை அவர்கள் கணக்குப் பார்க்கிறார்களே தவிர, விவசாயிகளுக்கு ஏற்படக் கூடிய உற்பத்திச் செலவை அவர்கள் கணக்குப் பார்க்கவில்லை. இதைத்தான் ஆதாரமாக, அடிப்படையாக வைத்துக்கொள்ள வேண்டுமென்று நாம் கேட்கிறோம். நாம், மத்திய அரசிடம் வலியுறுத்திச் சொல்வது இன்று உற்பத்தி செய்த விளைபொருள் விலை விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய இடுபொருள் விலையை, ஆதாரபூர்வமாக வைத்து 'காஸ்ட் ஆஃப் புரடக்ஷன் பேசிஸில்' தான் அமைய வேண்டும் என்பது. ஆகவே, அந்தச் சரியான நடவடிக்கையைச் சரியான நேரத்தில் நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:—வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெறாதது என்பதைக் குறிக்கும்]

1979 ஏப்ரல் 23,

2. உரிமைப் பிரச்னைகள்,

அ. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மீது [தீர்ப்பு]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. விஜயராகவன் அவர்கள் 4-4-1979 அன்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மீது அவை உரிமை மீறல் குறித்த பிரச்னை ஒன்றினை அவையில் எழுப்பினார். இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் அளித்துள்ளார். பேரவையில் பிரச்னை எழுப்பப் பட்டபோது உடனடியாகத் தொலை பேசி மூலம் துறையிடம் தொடர்பு கொண்டு அவர்கள் கொடுத்த தகவலைத் தாம் அவைக்கு அளித்ததாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறி தவறான தகவல் அளித்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப் படும் என்றும் கூறியிள்ளார். மேலும் அவைக்குத் தவறான தகவலைத் தரவேண்டுமென்ற எண்ணத்துடன் தாம் அப்படிக் கூறவில்லை என்றும் அவர் விளக்கியுள்ளார்.

[முற்பகல் 9-59]

பேரவைக்கு அளிக்கப்படும் தகவல் தவறானது என்று தெரிந்து, வேண்டும் என்றே பேரவையை திசை திருப்பும் எண்ணத்துடன் அத்தவறான தகவல் பேரவைக்கு அளிக்கப் பட்டால்தான் அது அவை உரிமை மீறிய செயல் ஆகும்.

மாண்புமிகு அமைச்சர்கள் பேரவைக்குத் தகவல் அளிக்கும் போது தாங்கள் அளிக்கும் தகவல் சரியானதுதானா என்று தெரிந்த பிறகு தகவல் பேரவைக்கு அளிப்பது நல்லது. ஏனெனில் பேரவைக்குத் தெரிவிக்கப்படும் தகவலுக்கு அத் தகவலை அளிக்கும் அமைச்சர்தான் பொறுப்பாகிறார்.

ஆயினும் இங்கு எழுப்பப்பட்ட பிரச்னை (த தவறான தகவலை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளித்தார் என்பதற்கான எந்தவித ஆதாரமும் அளிக்கப்படவில்லை. ஆகவே, இப்பிரச் னையில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

[1979 ஏப்ரல் 23

ஆ. முதல் அமைச்சர் மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 184-வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஜேம்ஸ் அவர்கள் ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்னையை அவையில் எழுப்ப அனுமதி கேட்டுள்ளார். இதே பொருள் குறித்து திரு. லத்தீப் அவர்களும் ஒரு அறிவிப்புக் கொடுத்துள்ளார். இப்பிரச்னையை அவையில் எழுப்ப அனுமதி அளிக்கப்படுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, on 23-3-79 raised a matter of privilege under Section 184 of the Tamil Nadu Assembly Rules against the Chief Minister .You also said on 24.3.79 that "it has come to my notice." May I read the subject matter of the privilege. While replying to the Leader of the Opposition the Hon. Chief Minister said, " Special Court இதிலே ஆட்சேபணை இல்லை என்று சொல்கிற அதே நேரத்தில் ஸ்பெஷல் கோர்ட் என்ற அளவில் அது முக்கியமானது. தனிப்பட்டவர் சிலரை பழிவாங்குகிற முறையில் ஏற்படுத்துவதை புறக்கணித்து, டில்லியில் எங்கள் கட்சி ஆட்சேபணைத் தெரிவித்து ஜனதாவுக்கு எதிர்த்து வாக்கு அளித்து இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார். This is an untrue statement contrary to facts. The Special Court Bill was passed for speedy trial of offences.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் முன்பு எழுதிக் கொடுத்த குறிப்புக்கும் இப்போது படிப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. உங்கள் முடிவு என்ன ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஜேம்ஸ் அவர்களே, எனக்கு இங்கே கொடுத்திருக்கிற அவை மீறல் பிரச்னைக்கு விளக்கம் தாருங்கள். வேறு எதையோ படிக்கவேண்டாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் படித்தது, ஒரு காப்பி ஆப் தி ஸ்டேட்மெண்ட் மேட் பை தி சீப் மினிஸ்டர் ஆன் தி ப்லோர் ஆப் தி அவுஸ். நான் ஏற்கெனவே கொடுத்த தீர்மானத்திற்கும். இந்த ஸ்டேட்மெண்ட்டுக்கும் சிறிதளவு வித்தியாசம் இருக்கிறது, என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். நான் இப்போது ஏற்கெனவே கொடுத்திருக்கிற தீர்மானத்தின் வாசகத்தைப் படிக்கிறேன், While replying to the Leader of the Opposition Hon. Chief Minister said தனிப்பட்டவரை பழி வாங்குவதற்காகவும், இந்திரா காந்தியை விசாரிப்பதற்காகவும் தனிக் கோர்ட் அமைப்பதற்காக நிறைவேற்றப்பட்ட சட்டம். அதை எதிர்த்து

[1979 ஏப்ரல் 23] [திரு. ஜே. ஜேம்ஸ்]

எங்கள் கட்சியினர் வாக்கு அளித்தனர். இதற்கு நான் அன்று 24-3-79 தேதியிட்ட ஒரு தீர்மானத்தை உங்களிடத்தில் கொடுத்தேன். அன்றைக்கு கொடுத்தது பத்திரிகை செய்தி தான் கிடைத்தது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பேசிய பேச்சு அதிகாரப் பூர்வமாகக் கிடைக்கவில்லை. முயற்சித்தும் கிடைக்கவில்லை, பத்திரிகை செய்திதான் கிடைத்தது. ஆக, அன்றைக்கு பத்திரிகை செய்தியைக் கொண்டுதான் தீர்மானம் கொடுத்தேன். இப்போது அபிஷியல் ரிகார்டு ரிப்போர்ட்டிங் செக்ஷனில் இருந்து எனக்குக் கிடைத்தது. அந்த நகலைப் படித்தேன். இரண்டுக்கும் உண்மையில் கருத்து வித்யாசம் இல்லை. வார்த்தைகளில்தான் சில வித்தியாசம் இருக்கிறது என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது படித்ததற்கும் முன்னால் கொடுத்ததற்கும் கருத்து மாறுபாடு இல்லை என்று கூறுகிறார்கள். நிச்சயமாக இருக்கிறது என்பதை மீண்டும் இப்போது சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் ; எனக்கு அபிஷியல் ரிகார்டு கிடைத்த பிறகு ஆதாரமாக இங்கே பேசுகிறேன். திஸ் இஸ் ஆன் அன்டுரு ஸ்டேட்மென்ட்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அங்கத்தினர் அவர்கள் ஒரு உரிமை மீறல் பிரச்னையில் அக்கறை காட்டி, அதை முன்மொழிந்து இங்கே பேசவேண்டும் என்று சொல்லி, பிறகு இன்னொரு பிரச்னையை எடுத்து அதை ஒரு புது விவகாரமாக உண்டாக்கி விவரமான முறையில் பேசுகிறார்கள். அது உரிமை மீறல் பிரச்னையா என்பதற்கு தாங்கள் தீர்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஜேம்ஸ் அவர்கள் கொடுத்திருப்பதை மட்டும் ஆதாரங்களோடு சுருக்கமாக பேசி முடியுங்கள்..

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே : This is an untrue statement and contrary to facts. The Special Court Bill which was passed in the Rajya Sabha is for speedy trial of offences by persons occupying political, public, offices either before emergency or after emergency. It was not passed for trial. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; தாங்கள் தங்களுடைய குறிப்பில் இருப்பதை படிக்கிறீர்களா அல்லது சம்பந்தப் பட்ட வேறு ஏதாவதிலிருந்து படிக்கிறீர்களா ?

[1979 ஏப்ரல் 23

திரு. ஜே. ஜேம்ஸ்: உங்களிடம் தந்ததைத்தான் படிக்கிறேன்.

It was not passed for trial of any individual or not for offences during any particular period. It has got a wider scope contrary to what was stated by the Hon. Chief Minister.

Thereby the Hon. Chief Minister has want only made an untrue statement on the floor of the House on 23-3-'79 with the intention to mislead the House.

Hence it is a matter of privilege, affecting the privilege of the House as well as that of the members of the House.

Hence this matter may be referred to the privilege Committee for that appropriate action.

இது தான் நான் கொடுத்தது, அது சம்பந்தமாக எனது கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்த வரையில்—அவர் இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் மிகவும் செல்வாக்கு உள்ளவர். அவரது கருத்துக்கள் இந்த மாநிலத்தில் எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நான் கூறி இந்த நாடு அறிந்து கொள்ள வேண்டிய நிலையில் இல்லை.

As he is in a most responsible position in the State any statement made on the floor of this House must have its own effect.

ஆகவேதான் நான் என்ன சொல்கிறேன் என்றால். பாராளு மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தை திரித்து, உள் நோக்கம் கற்பித்து கூறியதன் காரணமாக இது இந்த அவையின் உரிமையை மீறியது மட்டுமல்ல, இந்தக் சட்டத்தை நிறை வேற்றிய பாராளுமன்றத்தை அவமதித்த குற்றத்தையும் செய்திருக்கிறார்கள். இந்தச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது முதலமைச்சர் அவர்கள் கூறுகின்ற . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஜேம்ஸ் அவர்கள் வாசித்த பகுதி ரிப்போர்டிங் செக்ஷனிலிருந்து கிடைத்ததாக சொன்னார்கள். ரிப்போர்டிங் செக்ஷனிலிருந்து யாருக்கும் பிறர் பேசிய பகுதிகளைக் கொடுப்பதில்லை. லைப்ரரியிலிருந்து கொண்டுவந்தேன் என்று வேண்டுமென்றால் சொல்லுங்கள். ரிப்போர்டிங் செக்ஷனிலிருந்து கொண்டு வந்திருக்க முடியாது.

1979 ஏப்ரல் 23]

திரு. ஜே. ஜேம்ஸ் : ரிப்போர்டிங் செக்ஷனிலிருந்து கிடைக்க வில்லை. லைபரரியில் வைக்கப்பட்ட பின்தான் இந்தக் குறிப்பை எடுத்து வந்திருக்கிறேன். It took several days to get it from the Library Section.

திரு. நா. சுந்தரராஜ் ; முதலமைச்சர் அவர்கள் மீது உரிமைப் பிரச்னை கொண்டுவந்து பேசும்போது, இங்குள்ள தமிழ் நாடு சட்ட மன்றத்தின் விதிகளைப் பற்றி சொல்லுகிறார்களா அல்லது பாராளுமன்றத்தை அவமதிப்பதாக இருக்கிறது என்று சொல்லக்கூடிய அளவுக்கு பாராளுமன்றத்திற்கு இவர்கள் வக்காலத்து வாங்கி பேசுகிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பாராளுமன்றத்தை அவமதித்த வகையில் இருக்கிறது என்பதைத்தான் நான் கூறிக்கொள்கிறேன். பாராளுமன்றத்திற்கு யாரும் வக்காலத்து வாங்கக் கூடிய நிலையில் பாராளுமன்றம் இருக்கின்றதா என்பதை தாங்கள் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் டணிவன்பாக. அடுத்து, இதை எப்படி வேண்டுமென்றே மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதற்கு சில ஆதாரங்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். முதற்படியாக நான் கூறுவது, பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டம் தனி நபரை சிட்சிக்க வேண்டும் என்பதோ பழிவாங்க வேண்டும் என்பதோ அல்ல என்பது என்னுடைய கருத்து. இரண்டாவது, ராஜ்ய சபாவில் இந்த மசோதா நிறைவேற்றப் பட்டபோது இரண்டு திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக் கின்றன. ஒன்று, சி. பி. ஐ. பார்டியைச் சேர்ந்த பூபேஷ் குப்தா அவர்கள் இது எமர்ஜென்ஸி காலத்திற்கு மட்டும் இல்லாமல் அதற்கு முன்பும் பின்பும் உள்ள காலத்தில் நடந்த நிகழ்ச்சியும் இந்தச் சட்டத்தில் அடங்கி வரவேண்டும். அடுத்ததாக இன்னொரு அங்கத்தினர், இரண்டு, இது சம்பந்தமாக ஸ்பெஷல் நீதிபதியை நியமிக்கும்போது, விரிவாக, அரசுக்கு, மத்திய அரசுக்கு மட்டும் அதிகாரம் இருக்கும் முறையில் விரிவாக இருக்க வேண்டும் என்ற திருத்தம். இதையும் ராஜ்யசபா ஏற்றுக்கொண்டு இந்த மசோதாவின் நோக்கம் நிறைவேற்றப்பட்டிக்கிறது என்பதை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10–00]

ஆக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் இங்கே தகவல் கூறுகின்றபோது, ராஜ்ய சபாவிலும், லோக் சபாவிலும் இந்த திருத்த மசோதாவை நிறைவேற்றியிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் சேர்ந்திருக்கின்ற அண்ணா தி.மு.க. பாராளுமன்ற கட்சி லோக் சபாவிலே 'நியூட்ரல்'லாக இருந்த

தாகத் தகவல். ஆனால், அதே நிலையில் ராஜ்ய சபாவில் அவர்கள் எதிர்த்திருக்கிறார்கள். இந்த மசோதாவை எதிர்த் திருக்கிறார்கள். அப்படி எதிர்த்து, அதற்கு அவர்கள் மட்டுல்ல...

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இந்த விளக்கம் நமக்குத் தேவையில்லை. அது நிறைவேற்றப்பட்டது என்பதை ஒரு வார்த்தையில் சொல்லி முடித்துவிட்டால் போதும். யார் யார், எப்படி எப்படி வாக்களித்தார்கள், எவ்வளவு வாக்குகளில் அது நிறைவேற்றப்பட்டது என்ற பிரச்னை தேவையில்லை. தாங்கள் முதல் அமைச்சர் அதற்கு மாறாக என்ன பேசினார்கள் என்பதற்கு ஆதாரங்கள் சொல்லலாமே தவிர, பாராளு மன்றத்திலே, ராஜ்ய சபாவிலே என்ன ஏற்பட்டது என்ப தெல்லாம் நமக்குத் தேவையில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நான் கொடுக் கின்ற ஆதாரம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்ததுதான். வேண்டுமென்றே, திட்டமிட்டு, உண்மைக்கு மாறாக இங்கே கூறியிருக்கிறார்கள். ஆதாரம் கூறுகின்றேன். அண்ணா தி. மு. க. ராஜ்ய சபா பார்டி எந்த நிலை எடுத்தது என்பது முதல் அமைச்சர் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. ஆகவே, முதல் அமைச்சர் அவர்களுக்கு ஏற்கனவே தெரிந்துதான் இந்த அறிக்கையை வைத்திருக்கிறார்கள் என்பதற்கு சில ஆதாரங்களை நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், பாராளுமன்றத்திலே அண்ணா தி. மு. க. பார்டி ஒரு தீர்மானம் நிறைவேற்றி யிருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தில் கூறியிருப்பது என்ன வென்று சொன்னால்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மன்னிக்க வேண்டும். இந்தத் தீர்மானத்திற்கும், நமக்கும் சம்பந்தமில்லை. டெல்லியிலே இருக்கக்கூடிய பாராளுமன்ற கட்சி ஒரு முடிவு எடுத்திருக்கும். இங்கே அந்தப் பிரச்னைக்கும், நமக்கும் சம்பந்தமில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : மன்னிக்க வேண்டும். பாராளும் மன்றத்திலே நிறைவேற்றப்பட்ட சட்டம் சம்பந்மாக, ஒரு உரிமை மீறல் பிரச்னை. பாராளு மன்றத்தில் முதல் அமைச்சர் சார்ந்திருக்கின்ற பார்டி எடுத்த நிலை என்ன என்பதை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தீர்மானத்திற்கு ஆதாரம் கேட்கின் றார்கள். அங்கே தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்மானம் யு. என். ஐ. ரிப்போர்ட்படி, இந்தத் தீர்மானத்தை மேலிடம் அங்கீகரித்திருக்கிறது என்ற செய்தி வருகிறது.

1979 ஏப்ரல் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; ஜேம்ஸ், இந்தப் பத்திரிகைச் செய்தியை வைத்துக்கொண்டு, அது நிறைவேற்றப் பட்டது என்பதை ஆதாரமாக இந்த அவை எடுத்துக்கொள்ள முடியுமா ? சிந்தித்துப் பாருங்கள். பத்திரிகையிலே வரலாம், ஆனால் அங்கே யிருக்கின்ற பாராளுமன்ற குறிப்பிலே ஆதாரங்கள் இருந்தால், அதை என் கவனத்திற்கு கொண்டுவந்தால் சரி. பத்திரிகையை வைத்துக் கொண்டு, தாங்கள் ஆதாரங்கள் சொல்வதை நான் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் ?

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, தங்களுக்கு உள்ள சிரமம் எனக்குத் தெரியாமல் இல்லை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டைம் இல்லை. ஜேம்ஸ், தாங்கள் வழக்கறிஞர். மிக அழகாக, திறமையாகப் பேசுகிறீர்கள். என்னை நேர்முகப்படுத்திப் பேசவேண்டாம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தங்கள் நெருக்கடி தெரியாததல்ல. சுருக்கமாக கூறிக்கொள்ள விரும்புகிறேன். பத்திரிகையில் வந்தது மட்டுமல்ல. பார்லிமெண்டிலே அண்ணா தி. மு. க. கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு சுவாமிநாதன், எம். பி. அவர்கள் பேசியிருக்கிறார்கள். "Shri Bhupesh Gupta has brought forward an amendment to this Bill. We support it. In case this amendment is approved by Government, we are also ready to support the Bill." இதைத் தொடர்ந்து ராமமூர்த்தி அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

AIADMK Members' opposition relates to only one thing, viz. "that since you are making this provision only for the period of emergency and not making it a permanent feature we are opposing it".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பத்திரிகையிலே வந்த இந்த ஸ்டேட்மெண்டுகளைப் படிக்கிறீர்களா ?

திரு. ஜே. ஜேம்ஸ் : தாங்கள் கூறியதுபோல் பத்திரிகையில் வரவில்லை, எனக்குக் கிடைத்த ஆதாரங்கள்; எனக்குக் கிடைத்த தகவல்கள். நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; எதிலே இருக்கின்றதைப் படிக்கின்றீர்கள் என்பது எனக்குத் தெரியவேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பார்லிமெண்டிலே பேசியது, பாராளுமன்ற . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஜேம்ஸ், எனக்கு விளக்கம் மட்டும் தாருங்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இதற்கான பொறுப்பை நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். இல்லாவிட்டால் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறேன். என்ன நடவடிக்கை வேண்டுமானாலும் எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது இரண்டாவது பிரச்னை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் கேட்பது, இதை ராஜ்ய சபா புரொசீடிங்கிலே இருந்து படிக்கின்றீர்களா என்று கேட்கின்றார். அதைப்பற்றிச் சொல்ல வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ராஜ்ய சபை ப்ரொசீடிங்கில் ஒரு பகுதி—

Sir, I also hope that if the Government accepts that amendment, the AIADMK will support this decision; otherwise they will be judged that because they wanted to have some political arrangement with the Indira Congress, they are adopting a particular attitude and what they speak here is not the truth'', சுருக்கமாக முடிக்கிறேன். This is the statement made by Thiru P. Ramamoorthy.

அடுத்ததாக, மாண்புமிகு திரு.கே.வி. ரகுநாத ரெட்டி, எம்.பி. அவர்கள், முன்னாள் அமைச்சராக இருந்தவர்கள், ஒரு கருத்தைக் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாராளுமன்றத்தில் ஒவ்வொரு உறுப்பினரும் பேசுகிற பேச்சையெல்லாம் வைத்துக் கொண்டு பேசி இதற்கு அது ஆதாரம் என்று சொன்னால் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? 100 உறுப்பினர்கள் 100 விதமாகப் பேசலாம். அதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்குத் தொடர்புள்ள ஆதாரங்கள் இருந்தால் அதை மட்டும் சொல்லவேண்டும். ஒவ்வொரு கட்சிக்காரர்களும் என்னென்ன சொன்னார்கள் என்பதை ஆதாரமாகக் கூறிக்கொண்டிருக்க முடியாது.

[1979 ஏப்ரல் 23]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நாளைக்கு மாநிலங்கள் அவையில் தாங்கள் அப்படிப் பேசவில்லை என்று அவர்களே உரிமைப் பிரச்சினை கொண்டு வரலாம். அவர்கள் படிப்பது எந்த அடிப்படையில் என்றுதான் தெரிந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் கேட்கிறேன். நாளைக்கு அவர்கள் அங்கே உரிமைப் பிரச்சினை கொண்டு வரலாம். அப்படிப் படிப்பதற்கான ஆதாரத்தைத் தரவேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பொறுப்பேற்றுக்கொண்டுதான் சொல்கிறேன். இது கரெக்ட் ஸ்டேட்மெண்ட். தவறு இருந்தால் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொள்ளலாம். அங்கே உரிமைப் பிரச்சினை வந்தால் தாங்கள் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே அவையில் தாங்கள் பொறுப்பேற்றுக்கொள்ள முடியும். இதையெல்லாம் அனுமதித்தால் அங்கே உரிமைப் பிரச்சினையை என் மீதே கிளப்பினார்களானால்—அதாவது இந்த அவையின்மீது கிளப்பினார்களானால் ஜேம்ஸ் எப்படிக் காப்பாற்ற முடியும் ?

திரு. ஜே. ஜேம்ஸ் : You will permit me to read this. I assure you, Sir that this is a true version of what they said in Parliament. On that assurance you can permit it. There will not be any responsibility on you and no proceedings will be taken against you. I assure you that.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னை என்றால் ஹவுசைத்தான சொல்லுகிறேன், அவையைத்தான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் ; பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே ஜேம்ஸ் அவர்கள் மாநிலங்கள் அவைக் குறிப்பேட்டில் இருந்து படித்துக் காட்டியதாகச் சொல்லப்பட்ட வாசகங்கள் அதிலே இடம் பெறவில்லை என்று நிரூபிக்கப் பட்டால் 'எனது சட்டமன்றப் பதவியை ராஜினாமா செய்து விட்டு வெளியேறுகிறேன்' என்று சொல்லியதைக் கவனப் படுத்தி, அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் அவர் சட்டசபையை விட்டு வெளியே போய்விட்டால் உங்களைக் காப்பாற்றுவது யார்

[1979 ஏப்ரல் 23

திரு. ஜே. ஜேம்ஸ் : நீங்கள் கேட்டதற்குப் பதில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்—

This is part of the proceedings. I take the responsibility for my statement. I say this is part of the proceedings.

திரு. க. உரோ. எட்மண்ட் : கடந்த மாதம் 23 ஆம் தேதி நடைபெற்ற ராஜ்ய சபைக் குறிப்பைப் பற்றிச் சொல்லுகிறார்கள். இன்றைக்கு ஏப்ரல் மாதம் 23 ஆம் தேதியில் இருக்கிறோம். ஒரு மாதம் கழிந்திருக்கிறது. ஒரு மாத கால இடைவெளி கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு உரிமைப் பிரச்சினை அவையில் கொண்டுவர அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. நீண்ட கால அவகாசம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது இதைவிட மிகுந்த ஆதாரத்தோடு பேசுவது பொருத்தமாக இருக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : நீண்ட அவகாசம் கொடுத்ததால் இதற்கிடையில் டில்லிக்குச் சென்று அந்த பிரொசீடிங்சைப் பார்த்து எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன். அதிலே எந்தவிதமான தவறுதலும் இல்லையென்று மாண்புமிகு தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். 'இட் இஸ் பார்ட் ஆப் தி ப்ரொசீடிங்ஸ்.'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 500 உறுப்பினர்களும் ஒவ்வொரு கருத்தைச் சொல்லியிருக்க முடியும். அதை இங்கே படித்து அது ஆதாரம் என்று சொன்னால் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும் ?

திரு. ரா. உமாநாத் : இந்த விவாதத்தில் இரண்டு விஷயம். ஒன்று கோட் பண்ணக்கூடியதற்கு ஆதாரம் என்ன ? ப்ரொசீடிங்சில் இருந்து படிக்கிறார் என்பதற்கு அவரே பொறுப்பேற்றுக் கொள்கிறார். அங்கு லைப்ரரியில் இருந்து கொட்டேஷனைக் குறித்துக் கொண்டு வந்து படிக்கிறார். அதை அனுமதிக்க வேண்டியது அவசியம். இரண்டாவது—ரெலவன்சி, இங்கு ரெய்ஸ் பண்ணியிருக்கக்கூடிய பிரச்சினைக்கு ரெலவன்டாக இருக்கிறதா, இல்லையா என்று நீங்கள் பார்த்து டிசைட் பண்ண வேண்டும்.

[முற்பகல் 10-10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அந்த புரசீடிங்ஸை தங்களிடத்திலே காண்பித்து அனுமதி பெற்று இருக்கவேண்டும் என்பதுதான் நம்முடைய மரபு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலே என்னிடம் கேட்டார், ஆனால் புரசீடிங்ஸை நான் தீர்ப்புத் தரும்போது வாங்கிப்பார்த்து முடிவு எடுக்க இருக்கிறேன், நான் வேண்டா

மென்று சொல்லவில்லை. ஆனால் இவையெல்லாம் உரிமை மீறலுக்கு ஆதாரம் என்று அனுமதிக்கப்படலாமா என்பதைத் தான் கேட்க விரும்புகிறேன். ஒவ்வொரு கட்சியும் தங்கள் கருத்துக்களைச் சொல்வார்கள். அந்தக் கருத்துக்களை எல்லாம் இங்கே ஆதாரம் என்று வைத்துக் கொள்ளலாமா என்பதுதான் பிரச்சினை.

திரு. ஜே. ஜேம்ஸ்: எல்லாவற்றையும் சொல்லி இங்கே விவாதத்தை நான் விரிவாக்கிக்கொண்டு போக விரும்பவில்லை. இதற்கு ஆதாரமாக மற்ற அங்கத்தினர்களும் அங்கே பேசி இருக்கிறார்கள்.

நேற்றைய தினம் *** ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜேம்ஸ், அது தேவையில்லாத ஒன்று. அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. அதை விட்டுவிடுங்கள்.

திரு. து. இராமசாமி: தலைவர் அவர்களே, விட்டு விடுங்கள் என்று சொன்னால் மட்டும் போதாது, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நானே சொல்லலாம் என்று இருந்தேன். தாங்கள் அவசரப்பட்டுவிட்டீர்கள். திரு. ஜேம்ஸ் அவர்கள்*** பிரச்சினையைப்பற்றிப் பேசியதை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்திரவிடுகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: என்னுடைய கருத்து என்ன என்று சொன்னால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள "has attributed motives on the proceedings of Parliament. He can criticise Central Government. He has got all the liberty. He can make a statement against the Central Government. He has all the liberty. But he has no right to make any statement against the proceedings or decision taken by Parliament, by either House of Parliament."

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் இங்கே ஆட்சியில் இருந்தாலும் இல்லையானாலும் சட்டமன்றத்திலிருந்து அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் நாடாளுமன்றத்தி லேயோ அல்லது மாநிலங்கள் அவையிலேயோ ஏதாவது ஒரு

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 ஏப்ரல் 23

கருத்தைச் சொன்னால் எங்கள் கட்சிக்காரர்கள் அப்படிப் பேசினார்கள் என்று சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறதா இல்லையா ?

திரு. ஜே. ஜேம்ஸ்: அதற்காகத்தான் நான் பல ஆதாரங்களை இங்கே எடுத்து வைக்க முயன்றேன். ஏன் என்று சொன்னால் முதலமைச்சர் அவர்கள் இதனைக் குறித்து இங்கே சொன்னார்கள். பல விவரங்கள் இருக்கின்றன. காலம் ஆகும் என்பதால் தான் அவற்றை விட்டேனே தவிர வேறு ஒன்றும் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரித்து உண்மைக்கு மாறாக

Distorted statement has been made by the Hon. Chief Minister on the floor of the House.

ஆகவே, இந்த அடிப்படையில் அதற்கு ஆதாரமாக

I rely on a passage in May's Parliamentary Practice, page 142 (19th edition).

The House may treat the making of a deliberately misleading statement as a contempt.

In 1963 the House resolved that in making a personal statement which contained words which he later admitted not to be true, a former Member had been guilty of a grave contempt. etc.

என்றெல்லாம் ரெபர் பண்ணியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜேம்ஸ், தாங்கள் படித்ததினுடைய கருத்து என்ன ? இது உண்மையிலேயே பிரைமா—பேஸி உள்ளதாக இருக்கிறது என்று சொன்னதற்குப் பின்னாலே தான் அந்த விளக்கம் எல்லாம் வரும். அதற்கு முன்னாலேயே அதையெல்லாம் படித்தால் எப்படி ? இந்த அவையிலே சொன்னது அவை உரிமையை மீறிய செயலாகும் என்று ஆதாரத்தைக்காட்டி அதை எடுத்துக்கொண்டதற்குப் பிறகு சொல்லவேண்டியது அது.

திரு. ஜே. ஜேம்ஸ் : டிஸ்டார்ட்டட் ஸ்டேட்மெண்டு என்று சொன்னால் தாங்கள் அதை எடுத்துக்கொண்டால் தங்களுக்கு இது உதவியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது உதவியாக இருக்காது. நான் பிரைமா—பேஸி இருக்கிறது என்று எடுத்துக் கொண்டதற்குப் பிறகு தான் அது உதவியாக இருக்கலாம். நான் ஏற்றுக்கொள்ளாததற்கு முன்பாகவே அதை எடுத்துக் கொள்ள முடியாது.

1979 ஏப்ரல் 23]

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆகவே உண்மைக்கு மாறான ஒரு தகவலை பாராளுமன்றத்தை அவமதிக்கின்ற முறையிலேயும் இந்த மன்றத்தைத் தவறாக வழி நடத்துகின்ற முறையிலேயும் இருக்கின்ற இந்த அவையின் உரிமை மீறிய செயலாகவும் பாராளுமன்றத்தினை மீறிய செயலாகவும் இருப்பதால் இதனை உரிமைக் குழுவிற்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. லத்தீப் பேச விரும்புகிறார் என்றால் பேசலாம்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே இந்தத் தீர்மானத்தை இங்கே மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் படித்துக் காட்டிவிட்டார்கள். ஆகையினால், நான் மீண்டும் அந்தத் தீர்மானத்தை வேறு வகையிலே எழுதி இருந்தாலும், அதை நான் படிக்க விரும்பவில்லை. இருந்தாலும், அந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகின்ற கருத்தாக, என்னுடைய இந்தப் பேச்சை அமைத்துக் கொள்கிறேன் என்று நான் தங்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நோக்கம் என்ன என்பதைப் பற்றியும் நான் ஆராய விரும்பவில்லை. அதே நேரத்தில் அங்கே டெல்லியிலே இருக்கிற, ஆட்சி செய்கின்ற கட்சி, இந்தச் சட்டத்தைக் கொண்டு வரும்போது, அதனுடைய நோக்கம் என்ன என்பதைப் பற்றியும் நான் இங்கே பேசுவதற்கு விரும்பவில்லை. நான் இந்த உரிமை மீறல் பிரச்னையைக் கொடுத்தது, சபைக்குத் தவறான தகவல் கொடுக்கப்பட்டதா ? அப்படி கொடுக்கப்பட்ட தகவல் பாராளுமன்றத்தில் நடந்த நிகழ்ச்சிகள், அங்கு ஏற்படுத்தப்பட்ட சட்டம், அந்தச் சட்டத்தினுடைய தன்மை, இதன் அடிப்படையிலே கொடுக்கப்பட்டதா ? முதலமைச்சருக்கு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தினுடைய தன்மை தெரியவில்லையா என்ற அடிப்படையிலேதான் என்னுடைய இந்தக் கேள்விகள் அமைந்திருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒன்று பாராளுமன்றத்தில் ஒரு சட்டம் நிறைவேற்றப்படுகிறது. அது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுகிற சட்டம். இங்கே, முதலமைச்சர் பதவி வகிக்கின்ற மாண்புமிகு திரு. முதலமைச்சரவர்களை உள்ளிட்டு ஒரு சாதாரண மனிதராக இருந்தாலும், பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுகின்ற, சட்டமன்றத்தில் நிறைவேற்றப்படுகின்ற அத்துனையும் the public is put under notice என்பது தான் நிலை. ஒரு சட்டம், நிறைவேற்றப்பட்டால், அதைப்பற்றி, மக்கள் படிக்கிறார்களோ, இல்லையோ, தெரிந்து கொள்கிறார்களோ, இல்லையோ, ஆனால் அவர்களுக்கு 'நோடீஸ்' தரப்படுகிறது. சட்டத்தில், அவர்கள் எல்லாம்

அந்தச் சட்டத்தினுடைய, தீர்மானத்தினுடைய, முடிவினுடைய, தனமைகளை அறிந்திருக்கிறார்கள் என்பது 'பிரசம்ஷன்'. அது சாதாரண மக்களுக்குரிய 'பிரம்ஷன்'. ஆனால், ஒரு மாநிலத்தினுடைய முதலமைச்சர், ஒரு முக்கியமான சட்டம் பாராளுமன்றத்திலே நிறைவேற்றப்படுகிறது. அது சாதாரணமாக, நிறைவேற்றப்படாமல், அவருடைய கட்சி அதிலே என்ன நிலைமையை மேற்கொள்ள வேண்டுமென்ற விவாதத்திற்குப் பிறகு அந்தச் சட்டம் நிறைவேற்றப்படுகிறது, அந்தக் கட்சி நிலை என்னவாக இருக்கவேண்டுமென்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கலந்து ஆலோசிக்கப்படுகிறார். அந்த அடிப்படையிலேதான் ஜேம்ஸ் அவர்கள் சில உண்மைகளைச் சொன்னார்கள். அந்த விவரங்களுக்கு நான் செல்ல விரும்பவில்லை. ஆகையினாலே, பாராளுமன்றத்திலே ஒரு முடிவு செய்யப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, முதலமைச்சர் அவர்கள் அங்கே பாராளுமன்றத்தில் இயங்குகின்ற அவருடைய கட்சியினுடைய உறுப்பினர்களால் கலந்துகொள்ளப்பட்டு, இத்தனை நிலைகளுக்குப் பிறகு, அங்கே பாராளுமன்றத்தில்—மேலவையில், இராஜ்ய சபையில்—அந்தச் சட்டத்தினுடைய வரையறை scope கொஞ்சம் extend ஆக்கப்பட்டு அது நெருக்கடி நிலைக்கு மட்டுமல்லாமல், நெருக்கடி நிலை கால கட்டத்திற்கு மட்டும் அல்லாமல், நெருக்கடி நிலைக்கு முந்தி நடந்திருந்தாலும் அல்லது அதற்குப் பிறகு நடந்திருந்தாலும் அவைகளையும் அது உள்ளடக்கும் என்ற ஒரு திருத்தம் நிறைவேற்றப்பட்ட பிறகு, இங்கே ஒரு தனி நபரைப் பழி வாங்குவதற்காக நிறைவேற்றப்பட்ட சட்டம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்வார்கள் என்று சொன்னால், அதிலே தான் உரிமைப் பிரச்னை வருகிறது என்பது என்னுடைய வாதமாகும். முதலமைச்சரவர்கள் அங்கே நிறைவேற்றப்பட்ட சட்டத்தினுடைய வரையறை எதுவாக இருந்தாலும், நோக்கம் இதுதான் என்று சொல்லக்கூடிய உரிமை அவருக்கு இல்லையா என்றால் நிச்சயமாக இருக்கிறது. முதலமைச்சர் சொல்லலாம். 'ஸ்கோப்' எதுவாக இருந்தாலும், நெருக்கடி நிலைக்கு முந்தியும், பிந்தியும் நிலைமைகளை உள்ளடக்கிய சட்டமாக அது வருவதாக இருந்தாலும், தனி ஒரு நபரை பழி வாங்குவதற்காகத்தான் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று அவர்கள் பேசலாம். ஆனால், அவர்கள் வெளியே பேசுவதற்கும் சட்டமன்றத்திற்குள்ளே பேசுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது. சாதாரணமாக திரு. எம். ஜி. இராமச்சந்திரன் என்ற முறையிலே, அரசியல்வாதியாக, அரசியல் மேடைகளிலே தன்னுடைய கருத்துக்களைச் சொல்லலாம். இதுதான் நோக்கம் என்று அவர்கள் சொல்லலாம். ஆனால், ஒரு முதலமைச்சர் என்ற முறையிலே மன்றத்தில் அவர் சொல்கின்ற கருத்துக்கு வலு இருக்கிறது, ஆற்றல் இருக்கிறது என்ற நிலை இருக்கும்போது, அவருக்கு 'பாப்புலர் சப்போர்ட்' இருக்கிறதா, அவர் சொல்

1979 ஏப்ரல் 23] *[திரு. எம். ஏ. லத்தீப்]*

வதை தேச மக்கள் ஏற்றுக்கொள்கிறார்களா—ஏற்றுக்கொள்கிறார்கள் என்று ஜேம்ஸ் சொன்னார்கள்—அதிலே நான் மாறுபடுகிறேன். — ஏற்றுக்கொள்கிறார்களா, இல்லையா என்பது வேறு பிரச்னை. ஆனால், அவர் சொல்வது 'பப்ளிசிட்டி, ட்யூ பப்ளிசிட்டி' ஆகிறது. முதலமைச்சர் என்ற முறையில் அவர் பேசும்போது அது 'பப்ளிசிட்டி' ஆகிறது.

[முற்பகல் 10-20]

அது மட்டும் அல்லாமல் இந்த மன்றத்திலேயே அதனுடைய தன்மை பாதிக்கும் வகையில் குறிப்பிட்டுச் சொல்லும்போது, தெரியாமல் சொல்லிவிட்டார் என்று சொல்லமுடியாது. தெரிந்துதான் சொல்லியிருக்கிறார். பாராளு மன்றத்தில் நடந்ததை வேண்டுமென்றே மாற்றி தவறான தகவல் தந்தார் என்றுதான்—அதுதான் பிரசம்ப்ஷன். "Ignorantia juris non-excusant" என்னென்ன நாட்டிலே சட்டம் இயற்றப்படுகிறதோ அந்த சட்டத்தைப் பற்றியெல்லாம் ஒரு தனி மனிதனுக்கே தெரியவில்லை என்று சொன்னாலும் அது மன்னிக்க முடியாத குற்றம் என்கிற போது, முதலமைச்சராக இருக்கிறவருக்கு தெரியாது என்று சொல்லமுடியாது, அதுவும் எந்தவித கட்டுப்பாடும் இல்லாமல் இதுதான காரணம் என்று அறிவித்துவிட்டு, உறுதியிட்டு இறுதியாக அறிவித்து இதுதான் காரணம் என்று சொன்னால், சபைக்கு தவறான தகவல் தருகிறார்கள் என்றுதான் பொருள். பாராளுமன்றத்தின் உரிமை பாதிக்கப்படுகிறது என்று வரும்போது அதை அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். அதைப்பற்றி நான கவலைப்படவில்லை. பாராளுமன்றத்தில் நடந்ததை ஒரு மாநில முதல்வர் மாற்றி சொல்கிறார் என்ற உணர்வு ஏற்பட்டால் அந்த நடவடிக்கைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளட்டும், அவர்களுக்கு வக்காலத்து வாங்க நான தயாராக இல்லை. எங்களுக்கு இங்கே தவறான தகவல் கொடுத்திருக்கிறார், தெரியாமல் கொடுத்திருக்கிறார் என்று சொல்லிவிட முடியாது. ஏனென்றால், பாராளுமன்றத்தில் இந்தச் சட்டம் இயற்றுவதற்குமுன் அந்தக் கட்சி இவர்களிடம் கலந்திருக்கிறார்கள். ஆகவே ஒரு தனி நபரை கண்டிப்பதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்று தவறான தகவலை இந்த அவையில் வைத்த காரணத்தினால் உடனடியாக Suo-motu அடிப்படையில் பிரிவிலேஜ் கமிட்டிக்கு அனுப்பி உடனடியாக உரிமை மீறல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் பேசும்போது பாராளுமன்றத்தில் முக்கியமான சட்டம்

என்று கூறினார்கள். அது அவருக்கு மட்டும் முக்கியமான சட்டமா, எல்லோருக்கும் முக்கியமான சட்டமா என்பதை அறியவிரும்புகிறேன் ?

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, சட்ட மன்றத்தில் எந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டாலும் அது முக்கியமானது என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டும். முக்கிய மில்லாத எந்த்ச் சட்டமும் பாராளுமன்றத்திலோ, இந்த மன்றத்திலோ நிறைவேற்றப்படமுடியாது. எந்தச் சட்டமாக இருந்தாலும் மக்களுக்கு முக்கியமானது என்று இருந்தால்தான் நிறைவேற்றப்படும் என்பதுதான் பிரசம்ப்ஷன்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் பேசுகிறபோது பாராளுமன்றத்தில் இருப்பவர்களை தூண்டிவிடும் முறையில் ஒரு கருத்தை வெளியிட்டார். அந்தக் கருத்து அவைக்குறிப்பேட்டில் இருக்க வேண்டியது அவசியம் தானா என்றுதான் கேட்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, இந்த அவையில் பேசப்படுவதை வைத்துக்கொண்டுதான் பாராளுமன்ற உறுப்பினர் நடவடிக்கை எடுப்பார்கள் என்று சொல்வது, அவர்கள் ஏதோ தூங்கிக் கொண்டு இருக்கிறார்கள் தமிழக சட்டமன்றத்திலே சொல்லியபிறகு தான் அவர்கள் விழித்துக் கொள்வார்கள் என்பதே பாராளுமன்ற உறுப்பினர்களை அவமதிப்பதாகும். நான் அவர்களை தூண்டிவிடும் விதத்தில் பேசவில்லை என்றாலும், இப்படிச் சொல்வதே அவர்களை அவமதிப்பதாகும் என்பதால் இதற்காகவே ஒரு உரிமை மீறல் பிரச்னையை கொண்டு வரலாம் என்பதுதான் என்னுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி சரி இத்தோடு இதை நிறுத்திக் கொள்வோம. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசட்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் உரிமைப்பிரச்னையைக் கொண்டுவருவது என்றால் அதற்குள்ள அடிப்படை காரணம் என்ன என்பதைச் சொல்லித்தான், அதன் மீதுதான் உரிமைப் பிரச்னை கோண்டு வருவது வழக்கம் என்பதை நான் அறிந்திருக் கிறேன் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எடுத்த எடுப்பிலேயே அந்த வார்த்தையை மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்டு எழுதி இப்படி முதலமைச்சர் அவர்கள் மாமன்றத்திலே பேசியிருக்கிறார்கள். அது அவையை திசை திருப்புவதாக இருக்கிறது என்ற குற்றச்சாட்டை சொல்லித்

1979 ஏப்ரல் 23] [திரு. எம். ஜீ. இராமச்சந்திரன்]

தான் உரிமை மீறல் பிரச்னையைக் கொண்டு வந்திருக்கிறார்கள், ஆனால் அப்படி அவர்கள் எழுப்பியது தவறு என்று ஒத்துக் கொண்டபிறகு உரிமைப் பிரச்னைக்கு இங்கே இடமேயில்லை என்பதை நான் மிக மிக தெளிவோடு குறிப்பிட விரும்புகிறேன்.

அது போலத்தான் மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களும் தானாகவே எழுதியதை வேறு மாதிரியாகத்தான் எழுதி கொடுத்துவிட்டேன் என்று சொல்லி அந்த எழுதியதைப் பேச வில்லை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.....

திரு. எம். ஏ. லத்தீப் : அதை மீண்டும் நான் படிக்க விரும்ப வில்லை. அவர் எழுதிய தன்மை வேறு. நான் எழுதிய தன்மை வேறு. ஆனால் இரண்டும் உரிமை மீறல் பிரச்னை என்ற அளவில் வந்து இருக்கின்றன. அவர்கள் தங்களுடைய தீர்மானத்தைப் படித்த பிறகு நோக்கம் நிறைவேறிவிட்டது. ஆகவே, தீர்மானத்தின் மீது பேசுகிறேன் என்று நான் சொன்னேன். நான் மாறுபட்டு எழுதிவிட்டேன் என்று சொல்ல வில்லை. என்னுடைய நோக்கமே அவையின் உரிமை மீறப் பட்டு இருக்கிறது. அது கண்டிக்கப்பட வேண்டும். தண்டிக்கப் பட வேண்டும் என்பது தான். அதைத்தான் எழுதி இருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வேண்டுகோள். மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் உங்களுக்கு எழுதிக் கொடுத்ததைப் பற்றித் தான் இங்கே பேசினேன் என்று அவர் சொல்கிறறா என்பதை அறிய நான் விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : ஆமாம், எழுதிக் கொடுத்ததின் மீது தான் என் விளக்கங்களைச் சொன்னேன். எழுதிக் கொடுத்ததைப் படிக்கவில்லை. எழுதிக் கொடுத்ததின்மீது என் விளக்கங்களைச் சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு அளித்து இருக்கும் குறிப்புப்படி, அவர் எழுதி கொடுத்து இருப்பது

The Chief Minister said that his party did not belive in a special court to try cases against single individual and that was why his party had voted against it in Parliament. என்று எழுதி இருக்கிறார்கள். அந்த வார்த்தையை நான் உபயோகித்தேன் என்று அவர் ஒப்புக் கொண்டு தான் என் மீது உரிமை மீறல் பிரச்னை கொடுத்து இருக்கிறேன் என்று அவர் சொல்கிறாரா என்று மீண்டும் நான் கேட்டு தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, தீர்மானத்தில் ல வாசகங்கள் இருக்கின்றன. அந்த வாசகங்கள் ஏற்கனவே எழுதிக் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அந்த வாசகங்கள் தங்களிடத்தில் எழுதிக் கொடுத்த பிறகு தாங்கள் சபைக்கு சமர்ப்பிக்கிறீர்கள். அவையின் நேரம், காலத்தை உத்தேசித்து, மீண்டும் அந்த வாசகத்தைப் படிக்கத் தேவையில்லை என்ற அடிப்படையில் என்னுடைய விளக்கங்களை மட்டும் சொல்லிக் கொள்கிறேன் என்று நான் விளக்கம் சொன்னேன். பாராளு மன்றத்தில் உங்களுடைய கட்சிக்காரர்களை நீங்கள் கலந்து கொண்டீர்கள், கலந்து கொள்ளவில்லை என்பதற்கான விளக்கங் களைத் தந்திருக்கிறேன். அந்த அடிப்படையில் தான் பேசினேன். தீர்மானத்தில் இருக்கிற வாசகங்கள் மட்டும் தான் உள்ளிட்டுப் பேச வேண்டும் என்று சொன்னால் உள்ளிட்டுத்தான் பேசியிருக்கிறேன். அதற்கான விளக்கங்களைத் தான் நான் சொல்லியிருக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் எடுத்துக் கூறியது போல் மாண்புமிகு லத்தீப் அவர்கள் அந்தத் தீர்மானத்திலே கொடுத்து இருக்கின்ற வார்த்தைகள் இந்துப் பத்திரிகையில் அன்றைய தினம் வந்திருப்பவைகள் தான் அந்தத் தீர்மானத்திலே கொடுக்கப்பட்டு இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் கேட்பது, திரு. லத்தீப் எழுதிக் கொடுத்து இருக்கும் வாசகத்தைப் பற்றி. அவர் இந்து பத்திரிகையில் இருந்து எழுதிக்கொடுத்தார் என்று நீங்கள் அவருக்கு வக்காலத்து வாங்க வேண்டாம். அது திரு. லத்தீப் சம்பந்தப்பட்டது. தாங்கள் சொல்ல வேண்டியது இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : நான் கொடுத்து இருக்கிற அதே மாதிரியான தீர்மானத்தின் மீது விவாதம் நடக்கிறபோது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்து இருப்பதைத்தான் நீங்கள் பேசவேண்டும். திரு. லத்தீப் கொடுத்ததின் பேரில் அவர் பேசவேண்டும். அவர் எதை வைத்துச்சொன்னார், எதிலிருந்து எழுதிக் கொடுத்தார் என்று நீங்கள் சொல்லத்தேவையில்லை.

THIRU. J. JAMES : It has become the property of the House and so I can interfere and give my opinion.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய உரிமை மீறல் பற்றி இருந்தால் நீங்கள் சொல்லவேண்டும். திரு. ஜேம்ஸ், எனக்கு அவ்வளவு தெரியாது என்று எண்ணக்கூடாது. நீங்கள் கொடுத்ததைப் பற்றித்தான் நீங்கள் பேசவேண்டும்.

1979 ஏப்ரல் 23]

THIRU J. JAMES: This is a resolution under Rule 184.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலமைச்சர் அவர்கள், சில விளக்கங்களை, திரு. லத்தீப் அவர்களிடத்தில் கேட்டு இருக்கிறார். நீங்கள் மறுபடியும் அதில் தலையிட்டு பதில் சொல்வது நியாயம் அல்ல. உறுப்பினர் ஒரு தடவை பேசினால் அதற்கு மேல் பேசுவது சரியல்ல.

திரு. ஜே. ஜேம்ஸ்: நான் மறுபடியும் பேச வரவில்லை. சில விளக்கங்களை......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் இன்னொரு முறை சொல்கிறேன். பிரிவிலேஜ் மோஷனில் ஒரு தடவை பேசி விட்டால் மறுபடி பேசுவதை இந்த அவையில் மரபாக ஏற்றுக் கொள்ளவில்லை. திரு. லத்தீப் அவர்களிடத்தில் விளக்கம் கேட்டு இருக்கிறார். அவர் சொல்லட்டும். இதைப் பொறுத்தவரையில் உங்கள் விளக்கத்தை நீங்கள் ஏற்கனவே சொல்லிவிட்டீர்கள். இப்போது அந்த உரிமை உங்களுக்குக் கிடையாது, உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் இங்கே நான் தெரிவிக்க விரும்புவது, நான் பேசாத ஒன்றை நான் பேசியதாக உங்களுக்கு எழுதி, என் மீது உரிமை மீறல் பிரச்னை கொண்டு வந்து இருக்கிறார்கள். இப்போது அவர்கள் மீது உரிமைப் பிரச்னை கொண்டு வரலாமா என்று நான் யோசிக்கிறேன். ஏனெனில் சட்டமன்றத்தில் நான் உபயோகிக்காத வார்த்தைகளை உபயோகித்ததாக அவர்கள் உண்மைக்கு மாறாக எழுதி தங்களிடம் கொடுத்து நான் உரிமை மீறியதாக சொல்வது எப்படி பொருத்த முடையதாக இருக்கும் என்பதை என்னால் புரிந்துக் கொள்ள முடியவில்லை. இருந்தாலும் என்ன பேசினேன் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: இந்தச் சபையில் பேசப்படாத ஒன்றைப் பற்றி உரிமை மீறல் பிரச்னை கொண்டுவர நாங்கள் விஷயம் தெரியாதவர்கள் அல்ல. முதலமைச்சர் மேலே ஒரு உரிமைப் பிரச்னை கொண்டு வரவேண்டும் என்று கொண்டு வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லத்தீப், ஒவ்வொன்றுக்கும் தாங்கள் எழுந்து விளக்கம் அளித்துக்கொண்டு இருப்பது சரியல்ல. ஒவ்வொரு வார்த்தைக்கும் டிபேட் வைக்க முடியாது. தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: ஆதாரம் இல்லாமல் நான் சொல்ல வில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடத்தில் நீங்கள் ஏற்கனவே எழுதிக் கொடுத்து விட்டீர்கள். என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து விட்டீர்கள். நீங்கள் நான் சொல்வதைக் கேளுங்கள். பேசிக் கொண்டே இருக்காதீர்கள். தாங்கள் கொடுத்த அந்த ஆதாரங்கள் என் கையில் இருக்கின்றன. தாங்கள் பேசியதும் குறிப்பேட்டில் இருக்கிறது. தீர்ப்புக்கு அது சாதகமா பாதகமா என்பதை ஆய்ந்து சொல்கிறேன். இப்படி முதலமைச்சர் பேசுகிறபோது அடிக்கடி எழுந்து குறுக்கிட்டுக் கொண்டே இருந்தால் அது விவாதத்திற்குரிய பொருளாகிவிடும்.

[முற்பகல் 10-30.]

திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு இவைகளைக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஆகவே, தலைவரவர்களே, என்னைப் பொறுத்தவரையில் அவர்கள் குறிப்பிட்ட எந்த சொற்களையும் நான் பயன்படுத்தவில்லை. குறிப்பாக ஜேம்ஸ் அவர்கள் என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்றால் தனிப்பட்டவர்களை பழி வாங்குவதற்காகவும், இந்திரா காந்தியை விசாரிப்பதற்காகவும் தனி கோர்ட் அமைப்பதற்காக நிறைவேற்றப்பட்ட சட்டம்; அதை எதிர்த்து எங்கள் கட்சி வாக்களித்தது என்று நான் பேசியதாக உரிமை மீறல் பிரச்சனையை என்மீது எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். இவைகளில் நான் பேசியதை படித்துக் காண்பிக்க விரும்புகிறேன். அவர் சொல்லியிருக்கிற எந்த வார்த்தையாவது அதில் இருக்கிறதா என்பதை நீங்கள் கவனித்து, தீர்ப்புக் கூற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நான் அன்றையதினம் பேசிய பேச்சுக்களின் தொடர்ச்சியில் ஒரு இடத்தில் இதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்று சொல்லுகின்ற அதே நேரத்தில் ஸ்பெஷல் கோர்ட் என்கின்ற அளவில் முக்கியமான தனிப்பட்டவர்கள் சிலரை பழி வாங்குகின்ற முறையில் ஏற்படுத்துவதை புறக்கணித்து டில்லியில் எங்கள் ஆட்சேபணையைத் தெரிவித்து, அங்கே ஜனதாவை எதிர்த்து வாக்களித்து இருக்கிறோம். தனிப்பட்டவர்களுக்காக இதை உருவாக்கக் கூடாது என்று நாங்கள் வாக்களித்திருக்கிறோம். இதில் எங்கே இந்திரா காந்தி அம்மையார் பெயர் வந்திருக்கிறது என்று பார்க்கின்றேன். இல்லை. தனிப்பட்டவர்கள் என்கிற அடிப்படையில் 'இன்டிவிடுவல்' என்று சொன்னார்களே, அப்படி யாரையாவது குறிப்பிட்டிருக்கிறேனா என்றால் அதுவும் இல்லை. ஆகவே, அவர்கள் எந்த அடிப்படையிலே கொண்டு வந்திருக்கிறார்களோ அந்த அடிப்படையில் இது உரிமைப் பிரச்சனையை மீறுகிற ஒரு அளவில் இல்லை என்று முதலிலே நான் சொல்லுகின்றபோது இந்த அரசினுடைய நிலையை இன்னும் நான் தெளிவாக விளக்க விரும்புகிறேன்.

சுப்ரீம் கோர்ட்டில் ஸ்பெஷல்கோர்ட்டுக்கு அனுமதி கொடுக்கலாமா, வேண்டாமா என்று ஒவ்வொரு மாநில அரசினுடைய அபிப்ராயத்தையும் கேட்டபோது, இந்த தமிழக அரசு அப்படி ஸ்பெஷல் கோர்ட் வைப்பது சரியல்ல என்பதற்காக ஆதாரங்களை எடுத்துக் காட்டி, அட்வகேட் ஜெனரல் மூலம் சுப்ரீம்கோர்ட்டிற்கு நாங்கள் எழுதி இருக்கிறோம் என்பதை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அதைத் தொடர்ந்துதான் எங்கள் கொள்கை இருக்கிறது என்பதை இங்கே சுட்டிக் காட்டிவிட்டு இந்த அளவில் அவர்கள் சொல்லிய எந்தக் குற்றச்சாட்டையும் இங்கே சொல்லி நிரூபிக்கக்கூடிய வகையில் ஆதாரம் இல்லை என்பதை நான் தெரிவித்து, நான் உபயோகப்படுத்தாத வார்த்தைகளை சேர்த்து கொடுத்திருப்பதால், அவர்கள் கொடுத்திருப்பது உரிமை மீறிய பிரச்சனையாக இருக்கிறது என்பதை பணிவோடு தெரிவித்துக் கொண்டு, நீங்கள் என்ன முடிவு எடுக்கிறீர்களோ அதற்கு நான் கட்டுப்படுகிறேன் என்று சொல்லி, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பிரச்சனை குறித்து எனது தீர்ப்பு பின்னர் அறிவிக்கப்படும்.

3. கவன ஈர்ப்பு.

மதுரை மாவட்ட கூட்டுறவு வங்கி ஊழியர்கள் கைது செய்யப் பெற்றுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 41-வது விதியின்கீழ் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து திருவாளர்கள் சோ. அழகர்சாமி, கூத்தக்குடி ச. சண்முகம், மு. அம்பிகாபதி, செ. சிவசாமி, பொ. உத்திராபதி, பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், நா. பழனிவேல்' என். வரதராஜன், ரா. உமாநாத், கு. ரமணி, க. கந்தசாமி, டி. பி. எம். பெரியசாமி, கே. பண்ணை சேதுராம் ஆகியோர் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். முதலில் திரு. சோ. அழகர்சாமி.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே,.........

திரு. யா. சை. மு. யூசுப்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். தலைவரவர்களே, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை 14 பேர்கள் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இங்கே கொடுக்கப்

பட்டி.ருக்கிற அறிக்கையில் 13 பேர்களுடைய பெயர் இருக்கிறது. திரு. கே. பண்ணை சேதுராம் பெயர் விடப்பட்டிருக்கிறது. அதன் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது 'க்ளெரிக்கல் எரர்' டிபார்ட்மென்டில் தவறு ஏற்பட்டிருக்கலாம். அவையிலே அவர் பெயரையும் நான் சேர்த்திருக்கிறேன். சிறு தவறுகளைத் திருத்திக் கொள்ளலாம்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, ''உண்ணாவிரதம் இருந்து வந்த மதுரை மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்கள் 100 பேர் கைது செய்யப்பட்டதால் அவ்வங்கி ஊழியர்களிடையே நிலவும் பதட்டநிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதுரை மத்திய கூட்டுறவு வங்கி செயலாற்றும் பகுதியில் உள்ள ஆதார கூட்டுறவு சங்கங்களில் சுமார் 465 எழுத்தர்கள் பணியாற்றி வருகிறார்கள். இவர்களில் 350 பேர் விவசாய கூட்டுறவு சங்கங்களிலும் மீதி 115 பேர் பலவகையான ஆதார கூட்டுறவு சங்கங்களிலும் பணியாற்றுகின்றனர். மத்திய வங்கி முன்பு அமைந்த தற்காலிக குழுவினரால் இவர்கள் தேர்வு செய்யப் பட்டு, ரூ. 150 மாத ஊதியத்தில் கிராம கூட்டுறவு சங்கங்களில் எழுத்தர்களாக பணியில் அமர்த்தப்பட்டனர். மத்திய வங்கியின் அப்போதைய தலைவர்தான் அக்குழுவின் தலை வராகவும் இருந்தார். தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம், அல்லது விதிகளின் கீழோ அல்லது கூட்டுறவு சங்கங்களின் துணை விதிகளின் கீழோ சட்டரீதியாக இக்குழு அமைக்கப்படவில்லை. மத்திய வங்கியின் ஊதிய பட்டியலில் இல்லாத இவர்களுக்கு சேமநிதி, பணிக்கொடை போன்ற சலுகைகள் கிடையாது.

22-2-77-ல் மதுரை மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர்கள் சங்கம் விடுத்த கோரிக்கைகளில் இந்த எழுத்தர்கள் பிரச்சனையும் ஒன்றாகும். தொழில் தகராறு சட்டம் 1947, விதி 12(3) ன் கீழ், சென்னை உதவி தொழிலாளர் நல ஆணையர் அவர்களால், வங்கி ஊழியர் சங்கத்தின் கோரிக்கைகள் முடிவு செய்யப் பட்டன. கூட்டுறவு பதிவாளரால் விடுத்துள்ள சுற்றறிக்கை களின்படியும் அவ்வப்போது விடுக்க இருக்கும் சுற்றறிக்கைகளின் படியும் இவர்களின் பணி நிலைகள் இருக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

1979 ஏப்ரல் 23] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

இந்த எழுத்தர்கள் பணியாற்றும் கூட்டுறவு சங்கங்கள் ஒவ்வொன்றுக்கும் சட்டரீதியான துணை விதிகள் இருக்கின்றன. அவற்றின்படி தேவையான பணியாளர்களை கூட்டுறவு சங்கங்கள் நியமித்துக் கொள்ளலாம். கூட்டுறவு சங்கங்களின் நிதிநிலைமைக்கேற்ப பணியாளர்களின் சம்பள விகிதம் மற்றும் படிகள் நிர்ணயிக்கப்படுகின்றன. கூட்டுறவு சங்கங்களின் துணை விதிகளின்படி நிரந்தரப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டால் இந்த தற்காலிக ஊழியர்கள் பணியிலிருந்து வெளியேற்றப்பட வேண்டிய நிலை ஏற்படும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு இந்த ஊழியர்களை ரூ. 50 நிலையான படியுடன் ரூ.150—3—180—5—230 என்ற ஊதிய விகிதத்தில் நிரந்தர பணியாளர்களாக ஏற்றுக் கொள்ளும்படி ஆதார சங்கங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இவர்களுக்குப் பணி பாதுகாப்பும் ஊதியத்தில் உயர்வும் அளிக்கும் நோக்கத்துடன் இவ்வாறு செய்யப்பட்டது.

இப்போது மத்திய வங்கிப்பணியில் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கையின் பேரில் இவர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதாகச் சொல்லப்படுகிறது. மத்திய வங்கிப்பணியில் சேர்க்கும்படி கோர இவர்களுக்கு உரிமை எதுவும் கிடையாது. 2-3-79 அன்று மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு எதிரே சுமார் 100 எழுத்தர்கள் கூடி உண்ணாவிரதம் ஆரம்பித்தனர். 4-3-79, 5-3-79 தேதிகளில் 5 ஊழியர்கள் உண்ணாவிரதம் தொடர்ந்தார்கள்.

இதற்கிடையே 21-3-79 அன்று சுமார் 112 எழுத்தர்கள் மதுரை மத்திய கூட்டுறவு வங்கியின் முன்னால் கூடி மறியல் செய்ய முயன்றபோது காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர். 29-3-79 முடிய 230 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஊழியர் சங்கத்தின் செயலாளரும் உள்ளூர் எழுத்தர்கள் சங்கத்தின் தலைவரும் 26-3-79 அன்று மதுரை கூட்டுறவு இணைப் பதிவாளருடன் பேச்சு வார்த்தை நடத்தினார். கீழ்க்கண்ட மூன்று கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றும்படி வேண்டினர்: (1) தற்காலிக எழுத்தர்கள் 581 பேரையும் மத்திய வங்கிப்பணியில் சேர்க்க வேண்டும். (2) மத்திய வங்கிப் பணியைச் சேர்ந்த செயலாளர்களுக்கும் தற்காலிக எழுத்தர்களுக்கும் வழங்கும் சம்பள விகிதங்களிலுள்ள வித்தியாசத்தை நீக்க வேண்டும். (3) சங்கத்தின் தலைவராலும் அல்லது

குழுவினாலும் எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு எதிராக கூட்டுறவு சங்கப் பதிவாளருக்கு மேல் முறையீடு ,செய்ய அனுமதிக்கும் வகையில் கூட்டுறவு சங்க தனித்துணை விதிகளை திருத்த வேண்டும்.

மத்திய வங்கிப்பணியில் தற்போது 53 காலியிடங்களே இருப்பதால் இப்போது 53 பேர்களை மட்டுமே மத்திய வங்கிப் பணியில் சேர்த்துக்கொள்ள இயலும் என்றும் சம்பள விகிதங்களை மாற்றியமைக்கவும், தனித்துணை விதிகளுக்கு திருத்தம் கொண்டுவரவும் பதிவாளரை கலந்தாலோசித்து பரிசீலனை செய்யப்படுமெனவும் இணைப்பதிவாளர் ஊழியர் சங்க பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார். ஊழியர் சங்க பிரதிநிதிகள் இணைப்பதிவாளரை 29-3-79-ல் மீண்டும் சந்தித்து தற்காலிக எழுத்தர்கள் 581 பேரையும் மத்திய வங்கிப் பணியில் சேர்க்க வேண்டுமென வற்புறுத்தினர். தற்சமயம் 53 காலியிடங்களேயுள்ளதால் அவர்கள் கோரிக்கையை ஏற்பது சாத்தியமில்லை எனவும் மத்திய வங்கிப்பணியில் மேலும் காலியிடங்கள் ஏற்படும் போது ஏனைய எழுத்தர்களை சேர்த்துக் கொள்வது பற்றி பரிசிலிக்கப்படும் எனவும் பிரதிநிதிகளிடம் தெரிவிக்கப் பட்டுள்ளது. ஊழியர் சங்கத் தலைவர் மற்ற நிர்வாகிகளையும் கலந்தாலோசித்து பிறகு மேலும் பேச்சு வார்த்தைக்கு வருவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, அந்த வங்கியிலே பணியாற்றக்கூடிய 465 ஊழியர்கள் ஏற்கனவே அந்த மதுரை மத்திய வங்கியினுடைய தலைவர்களாலே நியமிக்கப்பட்டவர்கள். ஆகவே அவர்கள் மத்திய வங்கியினுடைய ஊழியர்களாகக் கருதப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது ஆங்காங்குள்ள கூட்டுறவு சங்கத்தின் பணியாளர்கள் அப்படியே விடப்பட்டு விட்டதன் காரணமாகவும், பிடிக்கவில்லை என்று சொன்னால் எந்தவிதமான காரணங்களும் இல்லாமல் நீக்கப்படக்கூடிய சூழ்நிலை இருப்பதன் காரணமாகவும் இந்தப் பிரச்சனை ஏற்பட்டது. அந்த ஊழியர்களை எல்லாம் வீட்டுக்கு அனுப்பக் கூடிய ஆபத்தான நிலைமை இருப்பதன் காரணமாகவும், அவர்களுக்குத் தரப்படுகின்ற ஊதியம் 100 ரூபாய் என்றும் 150 ரூபாய் என்றும் மிகக் குறைந்த அளவில் இருப்பதன் காரணமாகவும், முன்னாலே அவர்கள் வேலைக்குச் சேர்க்கப்படும்போது என்னென்ன வாக்குறுதிகள் அளிக்கப்பட்டதோ அந்த வாக்குறுதியின் அடிப்படையில் மத்திய வங்கியின் ஊழியர்களாக அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், மத்திய வங்கியிலே ஏற்படக் கூடிய வேலைகளுக்கு இவர்களைத்தான் நியமிக்கவேண்டும் என்றும் அந்த ஊழியர்கள் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டு வருகிறார்கள்.

1979 ஏப்ரல் 23] [திரு. சோ. அழகர்சாமி]

ஆகவே அவர்களை எல்லாம் கூப்பிட்டு, அவர்களுக்கு வேலை பாதுகாப்பு கிடைக்கின்ற வகையிலும், ஒரு நியாயமான ஊதியம் கிடைக்கின்ற வகையிலும் அதே நேரத்திலே அவர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுத்துவிட்டால் அந்த நடவடிக்கைகளை எதிர்த்து, அது நியாயமா, அநியாயமா என்று பதிவாளருக்கு மேல் முறையீடு செய்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துகின்ற வகையிலும் பேச்சு வார்த்தை நடத்தி ஒரு முடிவு காண வேண்டும். இன்றைக்கு அவர்களுக்கு அப்பீல் செய்யக்கூட உரிமை கிடையாது. தலைவர்களுக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னால் ஊழியர்கள் வீட்டுக்கு அனுப்பப்படக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே இதுபற்றி எல்லாம் கூடிப் பேசி உரிய பாதுகாப்பு அளிப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி</u>: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. அழகர்சாமி அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல கடந்த 11.4.1979 ம் தேதி வரையிலே அந்தக் கூட்டுறவுச்சங்க எழுத்தர்கள் இந்தப் போராட்டத்தை நடத்திக் கொண்டிருந்து 11.4.1979-ம் தேதியிலிருந்து அந்தப் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு இன்றைய தினம் அந்தச் சங்கங்களிலே மீண்டும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அடுத்து மறியலிலே ஈடுபட்ட அனைவருமே இன்றையதினம் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். அடுத்து, அவர்கள் சொன்ன கோரிக்கைகள் அனைத்தையும் இன்றைக்குப் பதிவாளர் வாயிலாக அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

<u>திரு. கூத்தகுடி ச. சண்முகம்</u>: தலைவரவர்களே, நான் இந்தப் பிரச்சினையிலே பேசவில்லை. போராட்டங்கள் நடந்து கைது நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்படக்கூடிய சூழ்நிலையில் நாங்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்தோம். ஆனால் ஒப்பந்தம் நடந்து பேச்சுவார்த்தை முடிந்து அவர்கள் எல்லாம் விடுதலையாகி அமைதியான சூழ்நிலை ஏற்பட்ட பிறகு இப்போது தான் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். இந்த முறை சரிதானா? அப்போதே இதை எடுத்துக் கொண்டிருக்க வேண்டாமா? பிரச்சினை தீர்ந்துவிட்ட பிறகு அனுமதிப்பதும் அதற்குப் பிறகு நேரம் ஒதுக்குவதும் சரிதானா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு மகிழ்ச்சியான நேரத்தில் அதை எடுத்துக் கொண்டாலும் பிரச்சினை தீர்ந்துவிட்டது, ஆகவே தாங்கள் திருப்தி அடையலாம்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுத் துறையிலே பணியாற்றுகின்ற பெரும்பாலான ஊழியர்கள் 100 ரூபாய் 150 ரூபாய் என்கிற அளவுக்குத்தான் ஊதியம் பெறுகிறார்கள். ஆகவே தமிழகம் முழுவதும் இந்தச் சூழ்நிலை இருப்பதைப் பரிசீலித்து அரசாங்கம் ஒரு முறையான ஊதியத்தை நிர்ணயிப்பது வரையில் இப்படிப்பட்ட போராட்டங்களும், பிறகு கைது செய்வதும், பின்னர் பேச்சுவார்த்தை நடத்துவதும், வெளியிலே விடப்படுவதும் போன்ற நிலைமைகள் நீடிக்கும். எனவே, அரசாங்கம் தமிழகம் முழுவதும் இருக்கின்ற கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு முறையான ஊதியத்தை நிர்ணயிக்கவும், இந்தச் சங்கங்களில் பணியாற்றுகின்றவர்களும் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த ஊழியர்கள்தான் என்கிற அளவில் உள்ள அந்தக் கோரிக்கையை ஒத்துக்கொள்ளவும் ஆன முயற்சிகளை எடுக்கின்ற அளவில் பரிசீலிக்க அரசாங்கம் முன்வருமா?

[முற்பகல் 10-40]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒவ்வொன்றும் சுதந்திரமாக இயங்கிக் கொண்டிருக்கிற ஒரு அமைப்பு. அதற்குச் சட்டரீதியான துணை விதிகள் இருக்கின்றன. அங்கே பணியாளர்களுக்கு ஊதியம், அதுபோல பணிப் பாதுகாப்பு ஆகியவைகளையெல்லாம் நிர்ணயம் செய்யவேண்டிய பொறுப்பு அந்தக் கிராமக் கூட்டுறவுச் சங்கப் பொறுப்பிலே இருக்கிற நிர்வாகத்திற்கு அன்றையதினம் சட்டம் அனுமதி செய்திருக்கிறது. அதே நேரத்தில் கூட்டுறவுத் துறை பதிவாளரைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு நியாயமான ஊதியம், பணிப் பாதுகாப்பு ஆகியவைகளைக் கொடுக்கவேண்டும். அப்போது அந்தப் பிரச்னை எழுகிறபோது அதனை முறைப்படுத்தி வருகிறோம்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணியாளர்களை ஆரம்பத்தில் போடக்கூடிய காலத்தில் அந்த ஆரம்பச் சங்கங்களுக்குக் கொடுக்கவில்லை. மத்தியச் சங்கமே அந்த நபர்களின் பட்டியல் தயாரித்து அந்தக் கிளார்க்குகளைப் போடுகிறார்கள். அவர்கள் முடிவு எடுத்து அந்தச் சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அந்தக் காலத்தில் வரவு—செலவு நன்றாக இருந்தாலும், இல்லா விட்டாலும் அந்தச் சாதாரண ஆரம்பச் சங்கங்களுக்குத் தள்ளி விடப்பட்டது. இன்றைக்கு மத்தியச் சங்கம் என்பது வேலையைக் கணக்கில் எடுத்துக் கொல்லாமல், ஒன்றும் செய்யாமல் தட்டிக் கழிக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் இந்தப் பிரச்னை தட்டிக் கழிக்கப் படவில்லை. ஆனால் அன்றைய அரசு தமிழ்நாடு கூட்டுறவு

1979 ஏப்ரல் 23] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

சட்டங்களோ அல்லது விதிகளோ அந்தக் கூட்டுறவு சங்கத்தினுடைய பணியாளர்களுக்கு உருவாக்கவில்லை என்பதையும், ஆனால் அதேநேரத்தில் அன்றைக்கு மத்திய வங்கிப் பொறுப்பிலே இருக்கிற தலைவர்கள் குழுவின் தலைவராக இருந்து அவர்கள் சட்டத்திற்கு உடன்படாத வகையில் நியமங்களைச் செய்த காரணத்தால் அந்தப் பிரச்னை இன்றைக்கு வந்திருக்கிறது.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மத்திய கூட்டுறவு வங்கியில் வேலைச் செய்யக் கூடிய ஊழியர்கள் இன்றைக்குக் கூட்டுறவுச் சங்கத்தினுடைய தலைவருக்கு உடன்பட்டு இன்றைக்குப் பெரும்பாலான ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். ஆங்காங்கு இருக்கக்கூடிய அவர்களை வெளியேற்றும் வகையில் நடவடிக்கை எடுக்கும்போது, அந்தத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இந்த நிலையைப் போக்க தமிழகத்தில் பணியாற்றுகிற அந்தக் கூட்டுறவுக் கழகத்தில் உள்ள ஊழியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதற்கு அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னது போல, அந்தக் கிராம கூட்டுறவுச் சங்கங்கள் தனித்து சுதந்திரமாக தங்களுடைய நிதி ஆதாரத்தைப் பொறுத்து இயங்கக் கூடிய அமைப்பு. அங்கே இருக்கக்கூடிய பணியாளர்களுக்கு, நிதி ஆதாரத்தை வைத்து, ஊதியங்களை நிர்ணயிக்கிறது. அதை மத்திய வங்கி எடுத்துக் கொண்டால் நிச்சயமாக சம்பளம் போன்ற ஆதாரங்கள் உட்படுத்தப்படாத முறை ஏற்படும் என்ற காரணத்தால் அந்த யோசனையை ஏற்றுக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது.

*திரு. பீ. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே அமைச்சர் அவர்கள், தன்னுடைய அறிக்கையிலே பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கிறது, தொடர்ந்து நடைபெறும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கக் கூடிய அம்சம், காலதாமதம் செய்யாமல், சீக்கிரமாக மத்திய வங்கியின் கீழ் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதோடு ஏற்கனவே அந்த யூனியனைச் சார்ந்தவர்கள் தங்கள் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அதிலே மூன்று கோரிக்கைகள் மிகவும் முக்கியமானவை. அவைகளை நிறைவேற்றுவதோடு, துணை விதிகளைத் திருத்துவதற்கு அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1979 ஏப்ரல் 23

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலில் சொன்னது போல் 11.4.79 அன்றே இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவு ஏற்பட்டிருக்கிறது. தொழிற் சங்கத் தலைவர்களும், அங்கே இருக்கிற நிர்வாகிகளும் இந்தப் பிரச்னையை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆராய்ந்து பரிந்துரை செய்து அரசுக்கு அனுப்பிய பிறகு, ஒரு நல்ல முடிவை விரைவில் எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு வங்கிகளில் மார்க்கெட்டிங் சொஸைட்டியில் பணியாற்றக் கூடியவர்கள் இப்போது 30, 40 ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் பல தவறுகள் ஏற்படுவதற்குச் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. ஆகவே, அவை களைப் போக்குவதற்கு இந்தக் கூட்டுறவு மையம் நடவடிக்கை எடுக்க வேண்டும். 581 பேர்களை மத்திய வங்கியில் தற்காலிகமாக வைத்திருப்பதாகவும், அதிலே 53 பேர்களை மட்டும் எடுத்துக் கொள்வதாகவும் கூறியிருக்கிறார்கள் ஆகவே, இதைக் கால தாமதம் செய்யாமல் 581 பேர்களை பர்மெனன்ட் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு குறிப்பிட்டிருக்கின்ற பணியாளர்கள் அனைவரும், கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் பணியாற்றி வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னை மீண்டும் மீண்டும் தோன்றுவதற்குக் காரணம் இவர்களுக்கு அடிப்படைச் சம்பள விகிதம் இல்லாமல் இருப்பது தான். கூட்டுறவுத் துறையின் பல்வேறு துறையின் கீழ் இருக்கிறது என்று ஆண்டவன் மீது பழியைப்போடுவது போல்—பல கூட்டுறவுத் துறைகளில் வரவு—செலவுக் கணக்குகளைப் பார்க்காமல் அவர்களுக்குக் குறைந்தபட்சம் ஒரு நிரந்தரமான ஊதியத்தை—இன்னும் ஆறு மாதத்திற்குள் ஒரு சம்பள விகிதத்தை—ஏற்படுத்தி அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டவன் மீது பழியைப் போட்டு தப்பித்துக் கொள்ளும் அரசு இந்த அரசு அல்ல. அவர்களுக்கு எந்தத் துறையில் சம்பள வீதத்தை அமைத்துக் கொடுக்கலாம் என்பதைப் பற்றி அரசாங்கம் ஆராய்ந்து கொண்டிருக்கிறது அதோடு கூட்டுறவுச் சங்கங்களின் வருமானம், லாப நஷ்டம்

1979 ஏப்ரல் 23] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

இவைகளையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, அதே நேரத்தில் கடன் வசூல்கள் பெருகப்பெருக விருத்தியாக்கப்பட்டு வரும்போது, பணியாளர்களுடைய ஊதியம் வளரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையில் "..........சம்பள விகிதங்களை மாற்றி அமைக்கவும், தனித் துணை விதிகளுக்கு திருத்தம் கொண்டு வரவும் பதிவாளரை கலந்தாலோசித்து பரிசிலனை செய்யப்படுமெனவும் இணைப்பதிவாளர் ஊழியர் சங்க பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்....." என்று கூறப் பட்டிருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள் இதுபற்றி விவாதித்து, ஏப்ரல் மாதத்தில் முடிவு எடுக்கப்பட்டிருப் பதாகவும், வேகமாக முடிவு எடுக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அப்படியென்றால், இந்தக் கால அளவு எப்போது? இதற்கான 'டேட் லைனை'யாவது சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சங்கத்திலே இருக்கின்ற தொழிற் சங்கப் பிரதிநிதிகளும், கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களின் பிரதிநிதிகளின் தலைவர்களும் மத்திய வங்கியின் நிர்வாகிகளும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். துரிதமாக, விரைவாக இதைப் பேசித் தீர்க்கவேண்டும் என்று நாங்களும் வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்பு கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பல கேள்விகளுக்குப் பதில் சொல்லிவிட்டார்கள். நான் குறிப்பாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கத்தின் விதிகளின் கீழ், சட்டத்தின் கீழ் அல்லது துணை விதிகளின் கீழ் இந்தக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டு குழு அமைக்கின்ற நிலைதான் இருக்கிறது. மத்திய வங்கியின் தலைவர், குழுவின் தலைவராக இருக்கிறார். ஆகவே பல கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு ஒரே மாதிரியான ஊதிய அமைப்பை—குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயித்து முடிவு எடுக்க அரசு முன்வருமா? அதுதான் சரியாக இருக்கும். அப்படியில்லை என்று சொன்னால் ஒவ்வொரு சங்கத்திலுள்ளவர்களும் தங்களுடைய நிதி நிலைமைக் கேற்ப தினக்கூலியாக ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று கொடுத்துவிட்டு வேலை வாங்கக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே உடனடியாக இந்தப் பணியாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிக்க அரசு முன்வருமா?

[1979 ஏப்ரல் 23

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இந்தப் பணியாளர்கள் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் பணியாற்று கின்றார்கள். ஆகவே அவர்களுடைய நிலைமையை அனுசரித்துத் தான் ஊதியத்தை நிர்ணயிக்க வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. டி. பி, எம். பெரியசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, மதுரை மாவட்டக் கூட்டுறவுச் சங்கமும், அதை யொட்டிய கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள கிட்டத்தட்ட 587 பேர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை என்ற காரணத்திற்காக வேலையிலிருந்து நீக்கப்பட்டார்கள். அவர்கள் இரண்டு, மூன்று கோரிக்கைகளை வைத்து, அரசு அதன் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதன் காரணமாகக் கடந்த மாதம் அவர்கள் உண்ணாவிரதம், மறியல் போன்ற நடவடிக்கை களில் ஈடுபட்டு, பலர் கைது செய்யப்பட்டார்கள். பின்னால் அங்குள்ள நிர்வாக அதிகாரிகளால் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு 53 பேர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்வது என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. வேலையில்லாமல் இருக்கும் 587 பேர்களில் 53 பேர்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

[முற்பகல் 10-50]

இந்த 587 பேர்களில் 53 பேர்களை மட்டும், நிரந்தர மாக்கிவிட்டு பாக்கியுள்ளவர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை என்று சொன்னால், அந்தக் குடும்பங்கள் எவ்வளவு அவதிக் குள்ளாகும் என்பதை அரசு சிந்தித்து, அவர்களையும் மத்திய வங்கியில் நிரந்தர ஊழியர்களாக இந்த அரசு பணியில் சேர்த்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில், அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது, இந்த 53 பேர்களைத் தவிர, பாக்கியுள்ள நபர்களை ஆதாரச் சங்கங்களில் நிரந்தரமாக்க வசதி செய்து கொடுப்பதாகச் சொன்னார்கள். இந்தச் சுமையை ஆதாரச் சங்கங்களின் மீது சுமத்திவிட்டால், ஏற்கனவே பல ஆதார சங்கங்கள் நிதி நிலைமை பற்றாக்குறை காரணமாக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் ஆதாரச் சங்கங்களின் மீது, இந்தச் சுமையைச் சுமத்து வதற்குப் பதிலாக, மத்திய வங்கியிலேயே அவர்களுக்கு வேலை கொடுத்து, பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர் களே, சமீபத்திலே நடைபெற்ற இந்தப் போராட்டம் தங்க ளுடைய பணி நிரந்தரமாக்கப்பட வேண்டும் என்பதற் காக அல்ல. இன்றைக்குக் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களிலே

1979 ஏப்ரல் 23] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

பணியாற்றுகின்ற அவர்கள், மத்திய வங்கியின் ஊழியர்களாகத் தாங்கள் ஆக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தான் இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது. இதிலே இந்த 53 பேர்கள் எடுக்கப்பட்ட நிலையைப்பற்றிச் சொல்ல வேண்டுமானால் இந்த அரசு ஒரு நடைமுறையில் இப்படிப்பட்ட மத்திய வங்கியிலோ அல்லது கூட்டுறவுச் சங்கங்களிலோ ஆட்கள் எடுக்கின்றபோது, வேலைவாய்ப்பு நிலையத்தின் மூலமாகத்தான் எடுக்கப்பட வேண்டுமென்ற ஒரு விதிகூட இருக்கிறது. அவைகளை எல்லாம் இந்த அரசு பரிசீலனை செய்த பிறகு, இப்படிப்பட்ட இந்தப் பிரச்னையிலே ஈடுபட்டிருக்கின்றது என்பதை நான் சொல்லிக் கொண்டு, இப்படி எல்லோரையும் மத்திய வங்கியில் எடுத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு மத்திய வங்கிக்கு நிதி ஆதாரம் சரியாக இல்லை. எனவே அத்தகைய வாய்ப்புகள் இல்லை என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

4. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்—1972–73.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே,

1972-73 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின் கீழ் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியுள்ள சில இனங்கள் குறித்த மானியக் கோரிக்கையை இம் மன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

2. 1975-76 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்கு ஆய்வுக் குழு, 1972-73 ஆம் ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆராய்ந்து பார்த்து, சில மானியக் கோரிக்கைகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தை விட மிகையாகச் செலவாகி யிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. மிகைச் செலவுக்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்த பின்னர், ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் ஏற்பட்ட மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளைச் சட்டப் பேரவை முன் வைத்து அனுமதி பெறுமாறு, பொதுக்கணக்கு ஆய்வுக் குழு பரிந்துரை செய்தது. அவ்வண்ணமே, 1972-73 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக் குரிய மானியக் கோரிக்கைகளின் விரிவான அறிக்கை இப்போது இம்மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது. மொத்தத்தில் மிகைச் செலவு 9.26 கோடி ரூபாயாக இருக்கிறது. ''மருத்துவம்'' என்பதன்கீழ் அதிகச் செலவு, வரப்பெற்ற வைப்புத் தொகைகளை விட பிற துறைப் பணிக்கான உதவித் தொகை முன்னிட்ட

மிகைச் செலவு, இந்துஸ்தான் ஸ்டீல் லிமிடெட் நிறுவனத்தார் 1973 ஜனவரி, பிப்ரவரித் திங்களில் வெளியிட்ட உருக்கு அளவில் ஏற்பட்ட திடீர் அதிகரிப்பு, மேலும் பலருக்கு ஓய்வூதியம் அனுமதித்தது, இந்திய அரசு வழங்கிய இரசாயன உரங்களுக்குரிய செலவைச் சரிக்கட்டியதனால் ஆண்டு இறுதியில் எதிர்பாராது ஏற்பட்ட ஒரு சில செலவினங்கள் ஆகியவை இவ்வகையில் ஏற்பட்ட முக்கிய செலவினங்களாகும். ஒவ்வோர் இனத்திலும் செலவு மிகையானதற்குக் காரணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின் விரிவான அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன.

3. 1972-73 ஆம் ஆண்டுக்குரிய மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

5. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்–1973-74.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

1973–74 ஆம் ஆண்டில் சில மானியக் கோரிக்கைகளின் கீழ் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியுள்ள சில இனங்கள் குறித்த மானியக் கோரிக்கையை இம் மன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன்.

2. 1977-79 ஆம் ஆண்டுகளுக்கான பொதுக் கணக்கு ஆய்வுக் குழு, 1973–74 ஆம் ஆண்டுக்குரிய நிதி ஒதுக்கக் கணக்குகளை ஆராய்ந்து பார்த்து, சில மானியக் கோரிக்கைகளின் கீழ் அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைவிட மிகையாகச் செலவாகியிருப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. மிகைச் செலவுக்கான காரணங்களை ஆராய்ந்து பார்த்த பின்னர், ஒவ்வொரு மானியத்தின் கீழும் இறுதியாக அனுமதிக்கப்பட்ட நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும் ஏற்பட்ட மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளை சட்டப் பேரவை முன்வைத்து அனுமதி பெறுமாறு, பொதுக் கணக்கு ஆய்வுக்குழு பரிந்துரைசெய்தது. அவ்வண்ணமே 1973-74 ஆம் ஆண்டின் மிகைச் செலவுக்குரிய மானியக் கோரிக்கைகளின் விரிவான அறிக்கை இப்போது இம் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது. மொத்தத்தில் மிகைச் செலவு 6·97 கோடி ரூபாயாக இருக்கிறது. முக்கியமாக ''மருத்துவம்'', ''தொழில்கள்'' என்பதன்கீழ் மிகைச் செலவு ஏற்பட்டுள்ளது. கூவம் ஆற்றுப் பராமரிப்பு, முக்கியமான சிறப்புப் பழுதுபார்த்தல் பணிகள், மேலும் பலருக்கு ஓய்வூதியம் அனுமதித்தது ஆகியவை

1979 ஏப்ரல் 23] [திரு கி. மனோகரன்]

குறித்து மேற்கொண்ட செலவும், முந்தைய ஆண்டுகளில் தவறான கணக்கு வகைப்பாடுகளைத் திருத்தியதில் தொகை ஈடு செய்ததன் காரணமாக ஏற்பட்ட செலவும், 1973-74 ஆம் ஆண்டு மிகைச் செலவு ஏற்பட்ட முக்கிய இனங்களாகும். ஒவ்வோர் இனத்திலும் செலவு மிகையானதற்குக் காரணங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின் விரிவான அறிக்கையில் விளக்கப்பட்டுள்ளன.

3. 1973-74 ஆம் ஆண்டுக்குரிய மிகைச் செலவுக்கான மானியக் கோரிக்கையை இம் மன்றம் ஏற்று இசைவளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

6. வரவு செலவுத் திட்டம் 1979-80 வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 24—தொழில் வளர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண். 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற மானியங்களின் மீது ஒருசில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாடு தொழிற்துறையில் முன்னணியில் இருந்த ஒரு மாநிலமாகத் திகழ்ந்து வந்தது. ஆனால் இன்றைக்கு அந்தப் பெருமையை இழந்துவிட்டிருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்பதை இந்த கொள்கை விளக்கப் புத்தகத்தில் வெளியிட்டிருப்பார்கள் என்று எதிர் பார்த்தேன். அவ்வாறு செய்யவில்லை, சில அரசாணைகளை, மேலும் சில அரசுக் குறிப்புகளை இந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்தில் அதிகமாக வெளியிட்டிருக்கிறார்களே தவிர, அடிப்படையாகத் தொழில் முன்னேறுவதற்கான முறையான திட்டங்கள் யாவை? நாம் இன்றைக்கு ஏற்கனவே இருந்த முன்னேற்றப் பாதையில் இருந்து பின்னே சென்று கொண்டிருக்கிறோமே, இதற்கு என்ன காரணங்கள்? அந்தக் காரணங்கள் ஏற்பட வேறு என்ன காரணங்கள் அடிப்படையாக அமைந்தன? அவைகளை அகற்ற இந்த அரசு என்ன திட்டங்களை வைத்திருக்கிறது? என்பவை

[முற்பகல் 11-00]

களையெல்லாம் இந்தக் கொள்கை விளக்கப் புத்தகத்தில் காணமுடியவில்லை. இது பெருத்த ஏமாற்றத்தைத் தருகிறது. ஒரு உண்மையை நாம் புரிந்து கொள்ளவேண்டும். நம்முடைய நாடு விவசாயிகள் அதிகமாக வாழுகின்ற நாடு. 80 சதவீதம் கிராமப் புறங்களில் விவசாயிகளாக வாழ்கிறார்கள்.

ஆகையினால் இந்தத் துறை முன்னேற வேண்டுமானாலும் அல்லது வேறு துறை முன்னேற வேண்டுமானாலும் எல்லாத துறைகளுக்கும் ஆதாரமாக இருக்கின்ற விவசாயத் துறை முன்னேறியாக வேண்டும். அந்த விவசாயத் துறை முன்னேறினால்தான் தொழில் துறை முன்னேற முடியும். ஆகவே தொழில் வளர்ச்சி நாட்டிலே ஏற்பட வேண்டுமென்றால் விவசாய முன்னேற்றத்திற்கு தொழில் முன்னேற்றம் எப்படி ஊக்கம் அளிக்கக்கூடியதாக அமையவேண்டுமோ அப்படி அமையவேண்டும். விவசாயம் முன்னேறவேண்டுமென்றால் தொழில் துறையிலே எந்த எந்த வகையிலே அதை முன்னேற்றுவதற்கு அது பயன்படவேண்டும் என்ற அடிப்படையிலே தொழில் துறையினுடைய கொள்கை வகுக்கப்பட வேண்டும். அதற்கு மாறாக வேறு எந்தக் கொள்கையை நீங்கள் வகுத்தாலும் நிச்சயமாக ஒட்டுமொத்தமான முன்னேற்றத்தை நாம் காணமுடியாது என்பதை நாம் உணர்ந்தாகவேண்டும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் — திரு பி. எச். பாண்டியன் தலைமை)

இன்றைக்குத் தொழில் துறையிலே முன்னேறவேண்டுமென்றால் நமக்கு முதலீடு செய்வதற்கு நிறையப் பணம் தேவை. நிறையப் பணம் தேவை என்றால் நிறையப் பணம் எங்கேயிருந்து வரும்; நிறைந்த மக்கள் எங்கே இருக்கின்றார்களோ அங்கே இருந்துதான் வரவேண்டும். நம்முடைய நாட்டிலே நிறைந்த மக்கள் விவசாயத்திலேதான் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே விவசாயத் துறை மேம்பாடு அடைந்தால்தான் அங்கே பணப்புழக்கம் ஏற்பட்டு அவர்களுடைய முன்னேற்றத்தின் வாயிலாகத்தான் நமக்கு முதலீட்டுக்குப் பணம் கிடைக்கும். அதுதான் நமக்கு ஆதாரமாக இருக்கிறது என்று சொன்னால் அதனை முன்னேற்றுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதைப் பயன்படுத்தி இதனை முன்னேற்றியாகவேண்டும். அதிலிருந்து வருமானத்தைப் பெற்று, அவர்களுடைய வருமானத்தை உயர்த்தி அவர்களிடத்திலே சேமிப்புகள் வருவதற்கான சூழ்நிலையை உருவாக்கி அந்த சேமிப்புகள் பெட்டிகளிலே அடங்கிவிடாமல் முதலீடு செய்யக்கூடிய வகையிலே தொழில் துறைக்குக் கொண்டுவர வேண்டும். அப்போதுதான் அந்த டெவலப்மெண்ட் சர்க்கிள் கம்ப்ளீட் ஆகும். அப்படியில்லாமல் அது வேறு, இதுவேறு என்ற நிலையில் நம்முடைய தொழில் துறை இயங்குகிறதோ என்ற சந்தேகம்தான் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பைப் பார்க்கிறபோது நமக்கு ஏற்படுகிறது.

1979 ஏப்ரல் 23] *[திரு. எம். ஏ. லத்தீப்]*

விவசாயத் துறையின் முன்னேற்றம் எவை எவற்றிற்கு ஆதாரமாக இருக்கின்றன, தொழில் துறையினுடைய அடிப்படைகள் எவை எவை என்பதையெல்லாம் ஆராய்ந்து அவைகளை எல்லாம் இன்றைக்கு இணைக்க, கோஆர்டினேட் செய்து நாம் திட்டங்களை வகுக்கவேண்டும். தொழில்துறை அவைகளையெல்லாம் கோஆர்டினேட் செய்கிறதா? மற்ற துறைகளைச் சார்ந்தவர்களையெல்லாம் உட்காரவைத்து அவ்வப்போது பேசி எந்த எந்த வகைகளிலே ஒவ்வொரு துறையிலேயும் முனனேற்றத்தை ஏற்படுத்துவதற்கு பயன்படமுடியுமோ செயல்பட முடியுமோ அதைச் செய்யமுடியும், அதைச் செய்கிறார்களா என்றால் இல்லை அதைத்தான் நாயுடம்மா கமிஷன் சுட்டிக் காட்டியிருக்கிறது. நாயுடம்மா கமிஷன் மூலமாகச் சொன்னது எல்லாம், மூலமான ஒரு கருத்து, தொழில் துறை முன்னேறுவதற்கு மூலப்பொருட்கள் எங்கெங்கு அதிகமாகக் கிடைக்கின்றனவோ அங்கங்கு தொழில்களை ஏற்படுத்தி மூலப்பொருட்கள் கிடைக்கின்ற இடங்களிலே மூலப்பொருட்களை உற்பத்தி செய்கிறவர்களுக்கு வேலை கிடைக்கிற வகையில் நிலைமைகளை ஏற்படுத்தி இந்தத் துறையை முன்னேற்றவேண்டும் என்பதுதான். அப்படித்தான் டாக்டர் நாயுடம்மா கமிஷன் சிபாரிசு செய்திருக்கிறது. எந்த வகையிலே அதற்கு இந்தத்துறை செயல்படுகிறது என்ற விளக்கம் எல்லாம் இந்த கொள்கை விளக்கப் புத்தகத்திலே சொல்லப்படவில்லை. புள்ளிவிவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. கிராப்ஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஸ்டேட்டிக்ஸ் டேடா புரவைட் பண்ணியிருக்கிறார்கள். இந்த ஸ்டேட்டிக்ஸ் டேடா, புள்ளி விவரங்கள் உண்மைக்கு மாறானவற்றிற்கு மற்றொரு பெயர் என்று எல்லோரும் சொல்வார்கள்.

'Statistical data is a different name for utter lies and Falsehood'

அது எல்லோர்க்கும் தெரிந்த உண்மை. நாமே நம்மை ஏமாற்றிக் கொள்கிற அளவிற்கு அமைந்துவிடும். புள்ளிவிவரங்களைக் கொடுக்காமல் எதை எதை எப்படி எப்படி இணைக்க வேண்டும். திட்டங்களை ஆரம்பிக்க வேண்டுமென்றால் நிதி ஆதாரங்கள் என்ன என்ன, டெக்னிக்கல் எக்பர்டைஸ் எங்கெங்கிருந்து வருகிறது, எங்கெங்கிருந்து மூலப்பொருட்கள் கிடைக்கின்றன இவைகளையெல்லாம் இணைக்கின்ற முறையிலே ஒரு பெர்ஸ்பெக்டிவ் அசஸ்மெண்ட் இருக்கிறதா என்றால் அது இல்லை. இந்த நிலையில் இன்றைக்கு தொழில் துறையில் ஒரு தொய்வு ஏற்பட்ட காரணத்தால் நம்முடைய தமிழகம் சிறப்பான இடத்தை இன்றைக்கு இழந்துநிற்கிறது. அதை சொல்லிக் கொள்வதிலே எனக்கு மகிழ்ச்சியில்லை. மிக வருத்தத்தோடுதான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். உதாரணமாக, ஒரு திட்டம் வகுக்கப்பெறறது. வடஆற்காடு மாவட்டத்தில், ஜவ்வாது மலைப் பகுதி. அந்த ஜவ்வாது மலையிலே மிக மூலமான பொருள் சந்தனம்.

தமிழகத்திலே கிடைக்கின்ற சந்தனச் செல்வத்தில் சுமார் 80% வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலையிலேயே கிடைக்கிறது. அது வெளி மாநிலங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஏலம் விடப்பட்டு நமக்குக் கிடைக்கக்கூடிய வருமானத்தை நாம் இழந்து கொண்டிருந்தோம். ஆகையினாலே, நான் பல்லாண்டுகளாக, நான் சட்டமன்ற உறுப்பினனாக எப்பொழுது வந்தேனோ அன்றையிலிருந்து, வற்புறுத்தி வருகிறேன், அங்கு சந்தனத் தொழிற்சாலையை நாம் ஏற்படுத்த வேண்டும் என்று அதனைச் சார்ந்திருக்கிற, 'அலைட் இனடஸ்ட்ரீஸ்', சோப்பு ஆயில், பவுடர், என்கின்ற மற்ற தொடர்புடைய பொருள்களுக்குரிய இன்டஸ்ட்ரீஸ்களை நாம் ஏற்படுத்தவேண்டும். ஒட்டு மொத்தமாக, ஒரு ஆண்டுக்கு ரூ.4கோடி, ரூ. 5 கோடி வருமானம் கிடைக்கிறது என்று, உத்திரப் பிரதேசக்காரர்களுக்கும், கர்நாடகாவிலே இருக்கிறவர்களுக்கும், நம்முடைய சந்தனத்தை அவர்களுக்குக் கொடுத்து விட்டு நாம் எவ்விதமான லாபத்தையும் பெறாமல் இருந்து கொண்டிருக்கிறோம். ஆகையினால், வருஷத்தில், கிடைக்கக்கூடிய 4 கோடியிலே, ரூ, $1\frac{1}{2}$ கோடி ஒரு ஆண்டிறகுத் ஒதுக்கித் தாருங்கள். அப்படி ஒதுக்கித் தந்தால் நல்ல தொழிற்சாலையை நீங்கள் ஏற்படுத்த முடியும்.

அது மட்டுமல்ல, நாயுடம்மா கமிட்டி சொல்லியிருக்கிற அடிப்படையிலே, மூலப்பொருள் எங்கே கிடைக்கிறதோ, அங்கே ஏறபடுத்த வேண்டுமென்ற கொள்கையின் அடிப்படையிலே, அதை ஜவ்வாது மலைச் சாரலிலே ஏற்படுத்த வேண்டும். அதை என்னுடைய தொகுதி என்பதற்காக நான் சொல்லவில்லை. ஆனால், அது ஜவ்வாது மலை ஸ்கீம் என்று ஆலங்காயம் பகுதியில் ஏற்படுத்த ஏற்பாடு செய்யவேண்டும். இதை சிபாரிசு செய்வது நான் மட்டும் அல்ல. பேரறிஞர் அண்ணா அவர்கள் அவையிலே இருந்தபொழுது, அண்ணா அவர்கள் மிக அதிகமாக வற்புறுத்திச் சொன்ன தொழிற்சாலை, இந்த சந்தனத் தோழிற்சாலை. ஜவ்வாது மலையில், ஆலங்காயத்திலே ஏற்படுத்த வேண்டுமென்று ஒரு தடவை அண்ணா அவர்கள் ஆலயங்காயத்திற்கு வந்து, இரண்டு நாட்கள் அங்கே தங்கியிருந்து, ஜவ்வாது மலை சந்தன மரங்களைப் பற்றிய புள்ளி விவரங்களையெல்லாம் அவர்கள் சேகரிதது, சந்தன மரத் தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டுமென்று, இங்கே, சட்ட சபையிலே, பேசினார்கள். அவருடைய ஆசை நிறைவேற வேண்டாமா? அவருடைய ஆசை நிறைவேறுவதன் வாயிலாக, நாட்டு மக்களுடைய நலிவு தீரும் என்ற வகையிலே அதை நிறைவேற்றக்கூடாதா? அதற்காக ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. நான் நன்றி சொல்லிக்கொள்கிறேன், மாண்புமிகு எட்மண்ட் அவர்கள் அதை ஒத்துக்கொண்டு, உடனடியாக அதற்கான ஒரு ஸ்கீம் தயார் செய்தார்கள். தயார் செய்தால் இன்றைக்கு

1979 ஏப்ரல் 23] [திரு. எம். ஏ. லத்தீப்]

என்ன சொல்கிறார்கள்? மத்திய அரசாங்கத்தினுடைய தொழில் துறை அமைச்சர் அதற்குத் தடையாக இருக்கிறார். காரணம் என்ன?

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கர்நாடக அரசாங்கம், உத்திரப் பிரதேசத்திலே இருக்கக்கூடிய—வட புலத்திலே இருக்கக்கூடிய சிலர், நம்முடைய ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்களைப் பார்த்து, எப்படியாவது, தமிழகத்திலே, இந்தத் தொழிற்சாலையை ஏற்பட விடாமல் நீங்கள் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று சொன்னார்கள் என்றும், அதன் அடிப்படையிலே; அவர்கள் இந்தத் தொழிற் சாலைக்கு உரிமம் கொடுக்கிற இடத்தில் இருக்கிற காரணத் தால், அவர்கள் அதை மறுத்துவிட்டார்கள் என்று சொல்லப் படுகிறது. அது உண்மையாக இருக்குமேயானால் — அதைப் பற்றி ஒரு கட்டுரை இந்து பத்திரிகையிலும் சில நாட்களுக்கு முன்னால் வந்தது. இப்படி நடந்து கொண்டிருக்கிறது. அவர்கள் கர்நாடக மாநிலத்தைச் சுட்டிக்காட்டி, இந்தக் கர்நாடக மாநிலம் மத்திய அரசாங்கத்தின்மீது அதை ஏற்படுத்தக் கூடாது என்று கட்டாயப்படுத்திக் கொண்டிருக்கிறது என்ற பெரிய கட்டுரையும் இந்துப் பத்திரிகையிலே வந்தது. அது எந்த அளவு உண்மை என்று எனக்குத் தெரியவில்லை. அப்படி இருக்குமேயானால்— இந்த அரசு மத்திய அரசோடு போராட வேண்டும். வட புலத்திலே இருப்பவர்கள், வடக்கு வாழ்கிறது, தெற்குத் தேய்கிறது என்பது இன்றைக்குக் கூட உண்மையாக இருக்குமானால், நான் நிச்சயமாகச் சொல்கிறேன், தமிழ் நாட்டினுடைய முன்னேற்றத்திற்காக, நல்ல பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று நாம் எடுக்கின்ற முயற்சிக்கு, வட புலத்தினுடைய நன்மையைக் காக்கவேண்டுமென்ற அடிப் படையில், நமக்குக் கிடைக்க வேண்டிய ஒரு நன்மையை அவர்கள் தடை செய்வார்களானால், இந்திய நாட்டினுடைய சமஷ்டித் தத்துவமே தடை செய்யப்படும் என்பதை அவர்கள் கவனத்திலே வைத்துக் கொள்ளவேண்டும். அவர்கள் அப்படி நடந்து கொள்கிறார்கள் என்றால், மாநில அரசு என்ன செய்யவேண்டும்? ஏன் அவர்களிடத்தில் போராடவில்லை? போராடி, இந்தத் தொழிற்சாலையை நாங்கள் ஏற்படுத்தித் தான் தீருவோம் என்கிற விஷயங்களை அவர்களிடத்திலே கேட்பதற்கு என்ன? மத்திய அரசாங்கத்திற்கு எங்கே குத்து கிறது, எங்கே குடைகிறது? அவர்களுக்கு என்ன கஷ்டம் இருக்கிறது என்று கேட்கிறேன். எங்களிடத்திலே சந்தனம் இருக்கிறது, சந்தனம் தயாரிக்கின்ற, உற்பத்தியாகின்ற இடத் திலே தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு நாங்கள் விரும்பு

கிறோம். மைசூர் மாநிலத்திலே வைத்துக்கொள்கிறார்கள், கர்நாடக மாநிலத்திலே வைத்துக் கொள்கிறார்கள், அவர்கள் எல்லாம் அறிவாளிகள், நாம் எல்லாம் ஏமாந்தவர்களா?

[முற்பகல் 11 - 10]

அந்த மாதிரியான எண்ணம் அவர்களுக்கு. இதை ஒரு சவாலாக முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன. பாடுபட்டு திட்டம்போட்டு அந்த $1\frac{1}{4}$ கோடி ரூபாய் திட்டத்திற்காக இடம் பார்ப்பதற் காக நாம் பல நாட்கள் வெய்யிலிலும், மழையிலும், முள்ளிலும், கல்லிலும் திரிந்து பல நாட்கள் பேசி, அலைந்து திரிந்து அந்த திட்டம் உருவாக்கப்பட்டு அது இன்றைக்கு நிறைவேற்றப்படும் நிலையில் இருக்கிறபோது அதற்கு உரிமம் தர மாட்டோம் என்று மத்திய அரசாங்கம் சொல்லி விடுமேயானால், அதற்காக மாநில அரசாங்கம் அதை போராடி பெற்றுத் தர வில்லை என்று சொன்னால் என்னைப் பொருத்தவரையில், வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவன், அந்த மாவட்டத்தைச் சேர்ந்த மக்களுடைய நன்மையை உத்தேசித்து நான் உண்ணா விரதம் இருக்கக்கூட, தயார். நான் முஸ்லீம் என்ற முறையில் மற்ற நாட்களில் உண்ணாவிரதம் இருக்கக்கூடாது. வேண்டு மானால் ரம்சான் மாதத்திலேயே போராட்டத்தை வைத்துக் கொண்டால், காலையில் 5 மணியிலிருந்து 7 மணி வரை உண்ணாவிரதம் என்று ரம்சான் மாதத்தில் உண்டு. சாகும் வரையில் உண்ணாவிரதம் இருந்து இதற்காக போராடுவோம்.

நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால் நமது முதல்வர் அவர்களுக்கு இதில் வேகம் வரவேண்டும் என்று அவர்களுக்கு அந்த உணர்வை தரவேண்டும் என்பதற்காக வட ஆற்காடு மாவட்டத்தின் மக்களுடைய சார்பாகச் சொல்கிறேன். அதைப் போராடி பெற வேண்டும் நாம். நமது ஜெயபால் அவர்களும் இதற்காக மார் தட்டி அறைகூவல் விடுத்திருக்கிறார். அதனால் எனக்கு கவலை இல்லை. இதை எப்படியும் போராடி பெற வேண்டும், அதற்கு முதலமைச்சர் அவர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்,

இன்னொன்றையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். ஏற்கெனவே நான் இதைப்பற்றி அவரிடம் பேசியிருக்கிறேன். பாராளுமன்றத்தின் பொது நிறுவனங்கள் குழு நேற்றைக்கு முன் தினம் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறது. அதிலே தோல் தொழிற்சாலையைப் பற்றி சொல்லியிருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலை நமது தமிழ் நாட்டிற்கு பெருமை தேடித்தரும் அளவிலே இருந்தது. ஆனால் என்னவோ தெரியவில்லை மத்திய அரசாங்கம் இந்த தொழிலிலே

1979 ஏப்ரல் 23] [திரு. எம். ஏ. லத்தீப்]

தமிழகம் பெற்றிருக்கிற சிறப்பான இடத்தை வடபுலத்திற்கு கொண்டுபோக வேண்டும் என்ற எண்ணத்திலோ என்னவோ கட்டாயத்தின் பேரில் தமிழகத்திலிருந்தே இந்தத் தொழிலை எடுத்துவிட வேண்டும் என்ற நிலைமைக்கு இன்றைக்கு சூழ் நிலையை தயாராக்கியிருக்கிறது.

ஆனால் நாம் அதை கவனமாகப் பார்த்துக் கொள்ளவேண்டும். லெதர் டெவலப்மெண்ட் போர்டு ஒன்றை உருவாக்க வேண்டும் அதன் மூலம் இந்த தோல் தொழிலை எந்தெந்த விதத்திலே மாற்றியமைத்தால் ஏற்றுமதிப் பொருளாக மாறுமோ அந்த விதத்திலே உற்பத்தி ஆவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். லெதர் என்று சொல்லக் கூடிய நேரத்தில் பாதி பதனிடப்படுகிற தோல்களை, ஏற்றுமதி செய்யக்கூடாது என்று ஒரு கட்டுப்பாடு இருந்தது. அந்தக் கட்டுப்பாட்டையெல்லாம் கிஞ்சித்தும் நினைக்காமல் இருந்து விட்டதன் காரணமாக ஏற்கெனவே இருந்த ஏற்றுமதியிலிருந்து இன்றைக்குக் குறைந்திருக்கிறது. அந்த நிலைமைக்கு நாம் ஆளாக்கப்பட்டிருக்கிறோம். இதை நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்பு கிறேன்.

நாயுடம்மா கமிட்டியில் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். மூலப் பொருள் கிடைக்கின்ற இடத்தில் தொழிலைத் தொடங்குங்கள் என்று. நான் அதனால்தான் சொன்னேன் ஆம்பூர், வாணியம்பாடி, ராணிப்பேட்டை ஆகிய பகுதிகளிலே இதை ஆரம்பிக்க வேண்டும் என்று. ராணிப்பேட்டையில் ஏற்கெனவே வைத்திருக்கிறார்கள்—சிப்காட் வைத்திருக்கிறார்கள். ஆகவே அந்த இடத்திலேயே மேலும் மேலும் வையுங்கள் என்று நான் குறிப்பிட மாட்டேன். அது பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். டி—சென்ட்ரலைசேஷன் ஆப் இன்டஸ்டிரீஸ் என்று வர வேண்டும். ஆகவே ஆம்பூர், வாணியம் பாடி பகுதிகளிலே தயவுசெய்து இப்படிப்பட்ட தொழிற் சாலைகளை ஆரம்பியுங்கள். அது மேன்மேலும் மக்களுக்கு நன்மையை கொடுக்கும். இப்படி அருகில் மூலப் பொருள் கிடைக்கும் இடத்திலேயே ஆரம்பித்தால் அது மிகவும் நல்லது. நாட்றாம்பள்ளி பகுதியிலே தேங்காய் மரங்கள் அதிகமாக இருக்கின்றன, அந்த மரங்களிலிருந்து கிடைக்கக்கூடிய பொருள்களை வைத்துக் கொண்டு எத்தனையோ தொழிற் சாலைகளை நடத்தலாம். நாட்றாம்பள்ளி பகுதியிலே அவைகளை ஏற்படுத்தினால் மிக நன்மையாக இருக்கும்.

எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்தலாம். இப்படி எங்கெங்கு மூலப் பொருள்கள் கிடைத்தாலும் அந்தந்த இடங்களில் அந்தந்த மூலப் பொருள்களை வைத்து தொழிற்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 ஏப்ரல் 23

சாலைகளை ஏற்படுத்த வேண்டும். அதே அடிப்படையில்தான் வாணியம்பாடியிலும் லெதர் இன்டஸ்டிரீஸ் ஒன்றை ஏற்படுத்த வேண்டும். லெதர் கார்மெண்ட்ஸ் தயாரிக்கும் தொழிற் சாலையை ஏற்படுத்தலாம், புட்வேர்ஸ் — பாத அணிகள் தயாரிக்கும் இன்டஸ்டிரியை உருவாக்கலாம். லெதர் மணி பர்ஸுகள், இப்பொழுது அதிகமாக தேவைப்படுகின்றன. அவைகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை ஏற்படுத் தலாம். இவைகளையெல்லாம் ஏற்படுத்துவதற்கான பூர்வாங்க வேலைகளை, ஏற்பாடுகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டிலேயே துவங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நமது முதலமைச்சரவர்கள் இந்த நிலைமைகளை யெல்லாம் புரிந்துக் கொள்ளவேண்டும். நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இந்த இடங்களுக்கெல்லாம் நேரிடையாக ஒரு முறை வந்து பார்க்க வேண்டும். அப்பொழுதுதான் அவர் களுக்கு அந்தந்த தொழில்களைப் பற்றி ஒரு ஐடியா பிறக்கும். நான் கூட அழைத்திருக்கிறேன். அடுத்த மாதம் மே மாதத்திலே வருவதாக எனக்கு வாக்கு கூட அளித்திருக்கிறார்கள். அதை இங்கேயே சொல்லி குறிப்பேட்டிலும் ஏற்றிவிடுகிறேன். அடுத்து லெதர் சர்வீஸ் சென்டர் கூட ஒன்றை தொடங்க வேண்டும் என்று ஏற்பாடு செய்துக் கொண்டிருக்கிறார்கள். நமது மாண்பு மிகு கிராம-கைத்தொழில் அமைச்சர் அவர்கள் கூட வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அது சுமார் 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே இன்றைக்கு உருவாகி யிருக்கிறது. அதை அவர்கள் கையாலே திறந்து வைத்து அதன் உள்ளே சென்று பார்த்தால்தான் அந்த இண்டஸ்டிரியைப் பற்றி முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு ஐடியா கிடைக்கும்.

ஆகையினால் முதலமைச்சர் அவர்கள் நேரில் வந்து அவைகளையெல்லாம் பார்க்க வேண்டும். அதனால் தமிழகத் திற்கு சில நன்மைகள் கிடைக்கும். இந்த இன்டஸ்டிரீ மிக நல்ல தொழில். அது ஒரு காமதேனு போல. சுமார் 30 கோடி வருவாய் வந்துக் கொண்டிருந்த இண்டஸ்டிரீ இப்பொழுது 300 கோடி ரூபாயை பெற்றுத் தந்து கொண்டிருக்கிறது—ஏற்றுமதி மூலமாக. நான் கூட 5 கோடி ரூபாய்க்கு களவு போனது என்று சொன்னபோது, எப்படி அவ்வளவு போனது அந்த அளவுக்கு செய்கிறார்களா என்று கேட்டார்கள். அப்பொழுதுதான் அவருக்கு இதைப்பற்றி முழுமையாகத் தெரியுமா என்ற ஐயப் பாடு ஏற்பட்டது. சுமார் 300 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அது இன்னும் உயர்வதற்கு வழி உண்டு.

அவ்வளவு நல்ல தொழில்: அதை முன்னேற்றுவதற்கு நமது முதல்வர் அவர்கள் தயவுசெய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சங்கு குளிக்கும் தொழில் என்று கூட ஒன்று இருக்கிறது. அதிலே நடைமுறைகள் சரியாக இல்லை என்று நான் அண்மையிலே தூத்துக்குடி போயிருந்தபோது கேள்விப் பட்டேன். அங்கே அவர்கள் சங்கு குளிக்கிறார்கள். அப்படி குளித்து எடுத்த சங்குகளையெல்லாம் லட்சக்கணக்கிலே தேக்கி வைத்திருக்கிறார்கள். லட்சக்கணக்கான சங்குகள் தேக்கப் பட்டிருக்கின்றன. நான் கேள்விப்பட்ட விவரங்களிலிருந்து மற்ற இடங்களில் எல்லாம் அதற்கு நல்ல டிமாண்டுகள் இருக்கின்றன என்றும் ஆனால் அங்கே நடைமுறைகள் சரியாகப் பயன்படுத்தப் படவில்லை என்றும் அதன் காரணமாக லட்சக்கணக்கான சங்குகள் இன்றைக்கு கெட்டுக் கொண்டிருக்கின்றன என்றும், அதனால் அதனுடைய விலைகள் எல்லாம் குறைந்துக் கொண்டு இருக்கின்றன என்றும் சொல்லப்படுகிறது. நான் அதை குற்றம் சாட்டுவதற்காக எடுத்துச் சொல்லவில்லை. அங்கே பலவிதமான தவறுகள் நடந்துக் கொண்டிருக்கின்றன என்று சொன்னார்கள், அவைகள் தவிர்க்கப் படவேண்டும் என்பதற்காக உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

ஒன்று அந்தச் சங்குகளை விளைவிப்பதில் மற்றவர்களுக்கு கொடுக்காமல் அங்கே 2 தொழிற் சங்கங்கள் இருக்கின்றனவாம். ஒன்று முருகன் சங்கு கம்பெனி என்று இருக்கிறது. அதற்கு ஒரு குறிப்பிட்ட ரேட்டிலே சப்ளை செய்கிறார்கள். இரண்டாவதாக அந்தத் தொழிலிலே செந்தில் முருகன் சங்கு கம்பெனி என்று உருவாகியிருக்கிறது. அவர்களுக்கும் அந்தச் சங்குகள் சப்ளை தேவை என்று கேட்கப்பட்டு, அந்த இடத்திற்கு டெபுடி டைரக்டர் ஜெயபாஸ்கர் அவர்கள் அங்கே சென்று பார்த்து இருக்கிறார். பார்த்ததில் அவர்கள் எந்த இடத்தில் இருப்ப தாகச் சொன்னார்களோ அந்த இடமே இல்லை. அது எப்படி நடந்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அந்தச் சங்கத் திலே குறைந்த விலைக்கு சங்குகளைப் பெற்று, அதை 1 ரூபாய் 2 ரூபாய் அதிகம் வைத்து முருகன் கம்பெனிக்காரர்களுக்கு விற்பது போல் போட்டுவிடுவது. அதை அவர்கள் இன்னும் 2 ரூபாய் 3 ரூபாய் அதிகமாக வைத்து விற்பது. நம்முடைய மீன் வளத்துறை என்ன செய்துக் கொண்டிருக்கிறது என்று சொன் னால் அதையெல்லாம் சரியாக ஆராய்ந்து பார்ப்பது கிடை யாது......

<u>மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கு விற்பனையில் சில குறைபாடுகள் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள்,

[க. உரொ. எட்ம்ண்ட்] [1979 ஏப்ரல் 23

அங்கே ஏற்கெனவே முருகன் சங்கு கம்பெனி என்ற நிறுவனம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது இன்னொரு சங்கு கம்பெனி செந்தில் முருகன் என்ற பெயரில் தொடங்குவதற்கு அனுமதி கேட்டு துறையிடம் வந்தவுடனே அதன்மேல் நாங்கள் விசாரணை செய்தோம். நாங்கள் விசாரணை செய்தோம் என்று ஒப்புக் கொண்டுள்ளதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப் பட்ட தொழிற்சாலை தூத்துக்குடியில் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறதா என்பதை பற்றி விசாரணை நடத்திக் கொண்டு இருக்கிறோம். ஆகவே விசாரணைக்கு பிறகு கொடுக்கப்பட்டதா என்பதை பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-20]

திரு. எம். ஏ. லத்தீப் : இன்னும் பாதியில்தான் இருக்கிறேன். இன்னும் கொஞ்சம் போனால்தான் உங்களுக்குத் தெரியும். நான் சொல்வது ஏற்கனவே நல்ல மார்க்கெட் இருக்கிறது. நீங்களே ஏன் ஒரு சேல்ஸ் சென்டர் கல்கத்தாவில் ஆரம்பிக்கக்கூடாது. கல்கத்தாவில் விற்பனை ஆகிறது என்று சொன்னால் அரசாங்க சார்பில் அங்கே ஏன் ஒரு சேல்ஸ் சென்டர் ஆரம்பித்து, உடனுக்குடன் அனுப்பி சேல்ஸ் சென்டர் மூலம் விற்கக்கூடாது. அதை விட்டு விட்டு ஒட்டுமொத்தமாக யாரோ ஒருவர், சுயோடா கம்பெனி, செந்தில் முருகன் என்ற பெயரில் வைத்துக்கொண்டு இருப்பவர்களுக்கு ஒரு கோட்டா கொடுக்கப் பட்டு இருக்கிறது, அப்படி கோட்டா கொடுக்கப்பட்ட பிறகு டெபுடி டைரக்டர் ஆப் பிஷரிஸ் போய் பார்வையிட்டு இருக்கிறார். பார்த்தபிறகு அங்கே அந்தக் கம்பெனியே இல்லை. அவர்களிடமிருந்து வாங்குவது, முருகன் கம்பெனிக்கு கொடுத்து விடுவது, முருகன் கம்பெனிக்குக் கொடுத்தார் என்று சொன்னால் மேலே ஒரு ரூபாய் அவர்களுக்கு கொடுத்து விடுவார்கள். இதை யறிந்த டெபுடி டைரக்டர் ஜெயபாஸ்கர் உடனடியாக அந்த லைசென்சை ரத்து செய்து இருக்கிறார்கள். அதற்குப் பிறகு என்ன நடந்திருக்கிறதென்றால் மேல் மட்டத்தில் இருந்து அந்த லைசென்சை மீண்டும் கொடுக்கவேண்டும் என்று கட்டாயப் படுத்தியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் ; கட்டாயப்படுத்தி இருக்கிறார்கள் என்பதற்கு வேண்டுமானால் ஆதாரம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் கட்டாயத்தின் பேரில் கொடுக்கப்பட்டு இருந்தால் ஆதற்கு ஆதாரம் இருக்கும், ஆகவே, கட்டாயப் படுத்தப்பட்டு கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று நிரூபிக்க முடியுமா?

1979 ஏப்ரல் 23]

திரு. எம். ஏ. லத்தீப் : நான் மேலே மேலே சில உண்மைகளை, நான் கேட்ட உண்மைகளைச் சொல்ல வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறார். அந்த செந்தில் முருகன் என்ற நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டதே— எனக்குக் கிடைத்த தகவல் அது உண்மையாக இருக்கலாம்—அது எதுவாக இருந்தாலும் அதை நான் நம்புகிறேன் —அவ்வளவு முக்கியமானவர் வந்து என்னிடம் சொன்னார்—அங்கே இருக்கும் ஆளும் கட்சிக்காரர்கள் முக்கியஸ்தர்கள் அவர்கள் ஒரு குழுவாக அமைத்துக்கொண்டு, ஒரு கம்பெனி இருக்கிறது என்று சொல்லி, உரிமம் வாங்கி, இந்தக் காரியத்தை நடத்திக்கொண்டு இருந்தார்கள். பிறகு ஜெய பாஸ்கர் விஷயம் தெரிந்து அதை மேற்பார்வையிட்டதன் பேரில் அவர்களுடைய உரிமத்தை ரத்து செய்து இருக்கிறார்கள். அதற்குப் பிறகு அந்த விஷயம்மேல் மட்டத்திற்கு வந்து, அவரை ரெனியூ செய்ய கட்டாயப்படுத்தி இருக்கிறார்கள், அவர் மாட்டேன், முடியாது என்று மறுத்து விட்டார். ஜெயபாஸ்கர். டெபுடி டைரக்டர் முடியாது, ரினியூ செய்ய முடியாது என்று மறுத்து விட்டார். அவர் மறுத்து விட்ட பிறகு, அவர் உண்மையைப் பேசினார் என்பதற்காக பூம்புகார் ஷிப்பிங் கார்ப்பரேஷனுக்கு அவர் மாற்றப்பட்டு விட்டார் ஏப்ரல் 1—ம் தேதி. . . .

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தயவு செய்து நான் மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்லிக்கொள்வேன் சம்பவங்கள் நடந்ததற்கு உடனே அந்தச் சம்பவத்தையும், அதற்கு காரணங்கள் கற்பித்துப் பேசுவதும் நல்லது அல்ல. அவருடைய சேவை இன்னும் நல்ல முறையில் பூம்புகார் ஷிப்பிங் கார்ப்ப ரேஷனுக்கு வேண்டும், இன்னும் அதிகமாக பயனுள்ள வகையில் அவரை அங்கே பயன்படுத்த முடியும் என்கிற வகையில் அங்கே மாற்றி இருக்கிறோம். அது அல்ல பிரச்னை. இப்போது தூத்துக்குடியில் அவருடைய இடத்தில் போடப்பட்டு இருக்கிற டெபுடி டைரக்டர் அந்த நிறுவனத்திற்கு ஏதாவது உதவி செய்கிறாரா, அவர் ஏதாவது தவறு செய்திருந்தால் நிச்சயமாக என்னிடத்தில் சொல்லுங்கள், நிச்சயமாக நான் நடவடிக்கை எடுப்பேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : நீங்கள் அவைகளை எல்லாம் இப்போது திருத்தியிருக்கிறீர்கள். அதற்காக நன்றி. ஆனால் ஜெயபாஸ்கர் அவர்கள் நடவடிக்கை எடுத்தாரே, அந்த மாதிரி ஊழல் நடந்து இருக்கிறது என்று கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறதே, உரிமம் பறிக்கப்பட்டு இருக்கிறதே, அப்படிப்பட்ட ஊழல் நடந்ததில் என்ன விசாரணை செய்தீர்கள். இப்படி தவறான கம்பெனி வைத்து அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்படுத்தினார்களே அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்கள், அரசாங்கத்திற்கு லட்சக்கணக்கான ரூபாய்

நஷ்டத்தை ஏற்படுத்திக் கொண்டு இருந்தவர்கள், அல்லது கம்பெனி இருப்பதாகச் சொன்னவர்கள்' அதன் வாயிலாக லாபத்தை அடைந்தவர்கள், அவர்கள் சொத்துக்கள், ஏன் ஜப்தி செய்யப்படவில்லை, அவர்கள் மீது ஏன் சிவில், கிரிமினல் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சிபார்சு செய்த டெபுடி டைரக்டர் அங்கே இருந்து ஏன் மாற்றப்பட்டார். அதற்குப் பிறகு அந்தக் கம்பெனிக்கு மீண்டும் உரிமம் கிடைக்கவேண்டும் என்று முயற்சி நடந்து கொண்டு இருக்கிறதே அதற்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? தயவு செய்து அரசு சிந்தித்துப்பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தயவு செய்து உறுப்பினர் அவர்கள் மன்னிக்கவேண்டும். ஆதாரத்தோடு அவர்கள்பேசி, இங்கே இந்த தவறு நடந்து இருக்கிறது என்று சுட்டிக்காட்டினால் அது அவருக்கும் நல்லது, அதைத் திருத்திக் கொள்வதற்கு அரசும் தயாராக இருக்கிறது. அரசுக்கும் நல்லது, நாட்டு மக்களுக்கும் நல்லது. ஏதோ தவறு நடந்திருக்கிறது என்று கற்பனையில் பேசுவது பொருத்தம் அல்ல. அந்த நிகழ்ச்சிக்குப்பிறகு என்ன தவறு நடந்திருக்கிறதென்று சுட்டிக் காட்டினால் எனக்கு உதவியாக இருக்கும். அந்தக் கம்பெனியின் மேல் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்டார்கள். கம்பெனி நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு வாங்கியிருக்கலாம். அவர்கள் லாபத்தை வைத்து விற்கிறார்கள் என்றால் அவர்கள் மீது எந்தச் சட்டத்தின் மீது நடவடிக்கை எடுக்கமுடியுமென்பதை விளக்கினால் நலமாக இருக்கும்.

திரு. எம். ஏ. லத்தீப்: ஒவ்வொரு கம்பெனிக்கும் இவ்வளவு தான் என்று கோட்டா நிர்ணயிக்கிறார்கள், கோட்டா நிர்ணயித்து அந்தக் கோட்டாவிற்கு மேல் கொடுக்க முடியாது என்று திட்டவட்டமாக அறிவித்த பின்பு அதைஎப்படி சமாளிக்க வேண்டும் என்பதற்கு புதிதாகக் கம்பெனிஇருக்கிறது என்று சொல்லி, பொய்யான ஒரு பெயரை வைத்து இன்னொரு கோட்டா வாங்கினார்கள், அது ஊழல் இல்லையா? அவர்கள் மீது என்ன நடவடிக்கை, எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு உறுப்பினர் ஒரு வழக்கறிஞர். அவர்கள் கிரிமினல் சைடில் வழக்கறிஞராக வேலை பார்த்து இருப்பார்கள் என்று நம்புகிறேன். அவர்களுக்கு ஒரு கோட்டா வழங்கப்பட்டது. இன்னொரு கோட்டா புதிதாக ஒரு கம்பெனிக்குக் கொடுக்கப்பட்டது. அதை பினாமியாக வைத்துக்கொண்டு, அதன் மூலமாக கோட்டா வாங்கினார்கள்என்று நிருபித்தால்தான் அந்தக் கம்பெனியின்

மீது நடவடிக்கை எடுக்க முடியும். அது போகஸ் கம்பெனி அல்லது பினாமி கம்பெனி என்று முடிவெடுத்து எப்படி நடவடிக்கை எடுக்க முடியும். அதையெப்படி நிரூபிப்பது?

திரு. எம். ஏ. லத்தீப் : எனக்கு இருக்கிற ஆதாரம் டிபுடி டைரக்டர் அவர்களுடைய 'காமன்ட்ஸ்' தான். அந்த ஃபைலை பாருங்கள். தவறிருந்தால் நடவடிக்கை எடுங்கள். நான் இவ்வளவுதான் சொல்லமுடியும். அவர் 'காமன்ட்ஸ்' செய்த பின்னால்தான் அவரை மாற்றியிருக்கிறீர்கள். நான் நல்ல நோக்கத்தோடுதான் சொல்கிறேன். அரசாங்கத்திற்கு நஷ்டம் வரக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். இதுபற்றி அமைச்சரவர்களுக்குத் தெரிந்தால் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன். அதனால் தகவலுக்காக நான் இதைச் சொல்கிறேன். இந்தமாதிரியான காரியங்கள் எல்லாம் நடைபெறுகின்றன என்பதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

ஏழை மக்கள் கடலிலே எடுக்கிற சங்கிற்கு ஏன் நல்ல விலை கொடுக்கக்கூடாது? அவர்களுக்கு ஏன் நல்ல ஊதியம் கொடுக்கக் கூடாது? அவர்களுக்கு நல்ல ஊதியம் கிடைக்க வேண்டுமென்றால் சங்கிற்கு நல்ல விலை கிடைக்க வேண்டும். இடையிலே இருப்பவர்களை ஒழித்துவிட்டு நீங்களே ஏன் கல்கத்தாவில் ஒரு டெப்போவை வைத்து, சங்கிற்கு நல்ல விலை கொடுத்து வாங்கி, அவர்களுக்கு நல்ல ஊதியம் கிடைக்க வழிவகை செய்யக்கூடாது என்று நான் கேட்கிறேன். யாரோ ஒருவர் இடையிலே இருந்து லாபம் சம்பாதிக்கிறார். ஏன் இடையிலே இருப்பவருக்கு லாபம் போகவேண்டும்? ஆழ்கடலிலே மூழ்கி சங்கு எடுக்கிறார்கள். அவர்கள் முன்னேற வேண்டாமா? நாடு முன்னேற வேண்டும் என்றால் தொழில் முன்னேற வேண்டும். தொழில் துறை முன்னேற வேண்டுமானால் ஊதியத்தை உயர்த்தினால் போதாது; கூலியை உயர்த்தினால் போதாது. ஒவ்வொருவரும் தான் சம்பாதிக்கின்ற பணத்திலே இருந்து கொஞ்சமாவது சேமிக்கும் சக்தியைப் பெற வேண்டும். அப்படி சேமிக்கிற பணம் முதலீடு செய்யப்பட்டால்தான் தொழில் முன்னேற முடியும். சிப்காட், சிட்கோ என்று எத்தனையோ நிறுவனங்கள் இருக்கின்றன. ஒரு சாதாரண மனிதன் அங்கே போக முடியுமா? சாதாரண மனிதன் அங்கே போகக்கூடிய நிலையிலா அந்த நிறுவனங்கள் இருக்கின்றன? ஒரு கிராமத்தில் தொழில் தொடங்க வேண்டும் என்றால், சிப்காட், சிட்கோ நிறுவனங்களில் போய் அணுக முடிகிறதா? அவர்களுக்கு ஆலோசனை சொல்கிறார்களா? உதவி செய்ய வேண்டுமென்றால் அதற்கு என்னென்ன ப்ரொஸீஜர் வைத்திருக்கிறார்கள்? உதவி கேட்கக் கூடியவர்களின் தலையைக்

கூட அடமானம் வைக்கவேண்டியிருக்கிறது. அப்படி வைத்தாலும் கூட சாதாரண மனிதனுக்கு உதவி கிடைப்பதில்லை. அப்படிப் பட்ட ப்ரொசீஜர்களையெல்லாம் வைத்திருக்கிறார்கள். போய் கேட்டால், அது இருக்கிறதா, இது இருக்கிறதா. சொத்து இருக்கிறதா என்று கேட்கிறார்கள். சொத்து இருக்கிறவன்தான் தொழில் நடத்த முடியும் என்றால் எப்படி முடியும்? தொழில் எப்படி முன்னேற முடியும்? நம்முடைய நாடு ஒரு விவசாய நாடு. விவசாய அடிப்படையில் தொழில் முன்னேற வேண்டும். தொழில் முன்னேற வேண்டுமென்றால் விவசாயம் முன்னேற வேண்டும். அப்போதுதான் சேமிப்பு வரும்; முதலீடு செய்வதற்கான ஆதாரம் கிடைக்கும். அந்த அடிப்படையில்தான் சொல்கிறேன்.

ஆழ்கடலிலே போய் மூழ்கி, சங்கு எடுக்கிறார்கள். உள்ளே போனால் வெளியே வருவார்கள் என்று நிச்சயம் இல்லை. அந்த நிலையில் கஷ்டமான தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர் களுக்கு அரை வயிற்றுக் கஞ்சிக்கு கூட கூலி கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு கிடைக்க வேண்டிய லாபத்தை இடையிலே இருக்கிற யாரோ பெற்றுக்கொண்டிருக் கிறாரகள். அப்படி இடையிலே இருக்கிறவர்கள் லாபம் சம்பாதிப் பதைத் தடுத்து, அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் லாபம் அடைய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எங்களுடைய வடாற்காடு மாவட்டத்தைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஒவ்வொரு மாவட் டத்தைப் பற்றியும் சொல்லக்கூடிய நிலையில் நான் இல்லை; நேரம் இல்லாததுதான் காரணம், எல்லா மாவட்டங்களைப் பற்றியும் பேச வேண்டிய கடமை இருந்தபோதிலும் வடாற்காடு மாவட்டத்தைப்பற்றி மட்டும் குறிப்பிடுகிறேன். எல்லா வகை யிலும் எங்களுடைய வடாற்காடு மாவட்டம் உதாசீனப்படுத்தப் பட்டிருக்கிறது. இங்கே சொல்கிறார்கள். ஹெட்குவார்ட்டர்ஸ் பற்றி கேட்டால், விழுப்புரத்திற்குப் போ, திருச்சிக்குப்போ; காஞ்சிபுரத்திற்குப் போ, சேலத்திற்குப் போ என்று சொல் கிறார்கள். எங்களுடைய மாவட்டத்தைப் பற்றிச் சொல்வதாக இருந்தால் இதுவரையில் எந்தவிதமான பிரதிநிதித்துவமும் இல்லை; எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. நீங்கள் சொன்னீர்கள். இண்டஸ்டிரியல் எஸ்டேட் டிஸ்டிரிக்ட் இன்ட்ஸ் டிரியல் சென்டர் அமைக்கிறோம் என்று சொன்னீர்கள். வடாற் காடு மாவட்டத்திற்கு அது இன்னும் வரவில்லை. என்ன பாவம் செய்தது வடாற்காறு மாவட்டம்? இந்த வருடத்திலாவது அதைச் சேர்த்துக்கொள்ளக் கூடாதா? வரும், வரும் என்று சொல் கிறார்கள், எப்போது வரும்? தொழில் துறையிலே வடாற்காடு மாவட்டம் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் அதை உடனடியாக நீங்கள் அங்கே நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 23] [திரு. எம். ஏ. லத்தீப்]

வடாற்காடு மாவட்டத்திலிருந்து அமைச்சரவையில் யாரும் இல்லை. அமைச்சரவையில் அங்கிருந்து யாரும் இல்லை என்ற காரணத்தால், அதைப்பற்றி எடுத்துச்சொல்ல யாரும் இல்லை என்ற காரணத்தால் இப்படிச் செய்கிறார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும் அவரவர் மாவட்டத்தைப்பற்றிச் சொல்கிற வாய்ப்பிருக்கிறது; சொல்கிறார்கள். எங்களுடைய மாவட்ட பிரதிநிதி அமைச்சர் அவையில் இடம்பெறாத காரணத்தால், அமைச்சரவை விவாதங்களில் அந்த மாவட்டத்தைப் பற்றி எடுத்துச் சொல்ல யாரும் இல்லாததால் வடாற்காடு மாவட்டம் புறக்கணிக்கப்படுகிறதோ என்ற சந்தேகம் எங்களுக்கு ஏற்படுகிறது. நீங்கள் திட்டமிட்டு அப்படிச் செய்கிறீர்கள் என்று நான் சொல்லவில்லை. ஏதோ ஒரு காரணத்தால் உதாசீனப்படுத்தி வருகிறீர்கள். ஆகையால் இப்போது இருப்பவர்களிலே ஒருவரை—அவர் யாராக இருந்தாலும் சரி—எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவரை அமைச்சரவையில் போடுங்கள். குடிநீர்—வடிகால் வாரியத்தில் ஒருவரை போட்டு இருக்கிறீர்கள் என்பதில் எங்களுக்கு திருப்தி இல்லை. ஏனென்றால் அவர் வெளியிலேயிருக்கிறார். அமைச்சரவை விவாதங்களில் பங்கு கொள்ள முடியாது. எங்களுக்கு அமைச்சரவையிலே ஒருவர் வேண்டும். (குறுக்கீடு). ஜெயவேலு அமைச்சரவையிலே எங்கேயிருக்கிறார்? அவர் வெறும் பார்லிமென்டரி செக்ரட்டரிதான். அவருக்கு அமைச்சரவை விவாதத்தில் பங்குகொள்ள அதிகாரம் இல்லை.

Mr. Jayavelu is not a Cabinet Minister. Even if he is appointed as Minister, I am satisfied. Now Mr. Jayavelu is outside the Cabinet and he cannot participate in the Cabinet when policy matters are discussed.

பாலிஸி டிஸ்கஸ் செய்யும்போது ஜெயவேலு எங்கேயிருக்கிறார்? யாரைப் போட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. வடாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த யாரையாவது ஒருவரை போடுங்கள். எங்கள் மாவட்ட பிரதிநிதி அமைச்சரவையில் இடம் பெறவில்லையென்ற குறையை நீங்கள் போக்க வேண்டும். அதோடு தொழில் துறையிலே அந்த மாவட்டம் முன்னேற வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தொழிற்சாலைகளைப் பற்றி முடிவுகள் எடுக்கும் போது கிராமப்புறங்களிலே அதிகமாக ஏற்படுத்தப்படவேண்டும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் திருப்பித் திருப்பிப் பாலிசி நோட்டைப் பார்க்கிறேன். தென்னாற்காடு மாவட்டத்திலே மிகப் பெரிய தொழிற்சாலை இருக்கின்றது. காகிதத் தொழிற்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 ஏப்ரல் 23

[முற்பகல் 11-30]

சாலை அங்கே போகிறது. சுகர் ரிசர்ச் சென்டர் கடலூருக்குப் போகிறது, வடாற்காடு மாவட்டத்திற்கு ஏதேனும் ஒரு தொழிற்சாலை அமைய விடாமல் இடையிலே ஒரு தடை மாதிரி இருக்கின்றது. வடாற்காடு மாவட்டத்திற்கென்று என்ன என்ன தொழிற்சாலை வருகிறது? ஒன்றும் தெரியவில்லை. எல்லா பெரிய தொழிற்சாலைகளும் வேறு மாவட்டங்களுக்குத்தான் போகின்றன.

திரு. பி. முசிறிபுத்தன் : (அமைச்சரின் பேரவைச் செயலர்) பேரவைத் தலைவரவர்களே, இராணிப்பேட்டை இருப்பது வட ஆற்காடு மாவட்டத்தில் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு லத்தீப் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : நானும் அதைத்தான் சொல்கிறேன். இருக்கின்ற இடத்தில்தான் மேலும் மேலும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். ஒரு சந்தன தொழிற்சாலை ஆலங்காயத்திலே அமைக்கவேண்டுமென்று சொல்லப்பட்டு வருகிறது. என்னுடைய ஊர் வாணியம்பாடி. இருந்தாலும் ஆலங்காயத்திலே அமைக்க வேண்டுமென்று கேட்கிறேன். மாண்புமிகு அமைச்சர் திரு. எட்மண்ட் அவர்கள் கூட ஒரு திட்டம் பற்றி முடிவு எடுத்தார்கள். இதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன். ஆனால் அதற்கு மத்திய அரசு தடையாக இருக்கிறதென்று சொல்கிறார்கள்? மத்திய தொழில் அமைச்சராக இருக்கின்றவர்கள் தடையாக இருக்கின்றார்கள் என்று சொல்கிறார்கள். யார் அவர்? யார் அந்த ஜார்ஜ் பெர்னாண்டஸ்?

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் துணைத்தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் ஜார்ஜ் பெர்னாண்டஸ் யார் என்று கேட்கிறார்கள்? இந்த அவையிலே இல்லாத ஒருவரைப்பற்றிப் பேசுவது தவறு. அந்த வகையிலே மத்திய அமைச்சரைப் பற்றிப் பேசுவது தவறு. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஜார்ஜ் பெர்னாண்டஸ் யார் என்று கேட்கிற அளவுக்கு வந்துவிட்டார்? ஆகவே அது நல்ல முறைதானா?

திரு. எம். ஏ. லத்தீப் : ஏன் பேசக்கூடாது? He is the Industries Minister for Government of India. I am also an Indian. I have got every right to comment on him.

1979 ஏப்ரல் 23]

* திரு. ர. ஜெபமணி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் ஜார்ஜ் பெர்னாண்டஸ் யார் என்று கேட்கிறார். அவர் இங்கே இல்லை என்பது நன்றாகத் தெரியும். ஆனால் மத்திய அமைச்சரைப் பார்த்து அவர் யார் என்று கேட்டு இந்தச் சபையில் தரக்குறைவாகப் பேசுவது அவ்வளவு நல்லதல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : மத்திய அமைச்சரைப்பற்றி....

திரு. எம். ஏ. லத்தீப் : என்னுடைய மாநிலத்திற்குத் தேவையானதைத் தடுக்கிறார்? மத்திய மந்திரி என்று சொன்னால் அனுமதி கொடுக்கவேண்டும்? ஏன் தடுக்கிறார்?

திரு. ர. ஜெபமணி : என்ன ஆதாரத்தோடு கேட்கிறார் மத்திய அமைச்சர் தடுத்தார் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கின்றது.

திரு. எம். ஏ. லத்தீப் : நீங்கள் அதை இல்லை என்று சொன்னால் நான் ஆதாரம் கொடுக்கிறேன்.

திரு. ர. ஜெபமணி : மத்திய சர்க்கார் இருக்கின்றது என்பது எல்லோருக்கும் தெரியும். அதுமட்டுமல்ல. நாம் ஓட்டுக் கேட்கின்றபோது மத்திய அரசாங்கத்தைக் கேட்டுச் செய்கிறோம் என்றா சொன்னோம். ஆகவே மத்திய அமைச்சரைப் பற்றி உங்கள் இஷ்டத்துக்கு பேசலாமா? அவர் யார் என்று கேட்கின்றீர்களே, அவர் யார் என்று உங்களுக்குத் தெரியவில்லைஎன்றால், உங்களுக்குத் தெரியாவிட்டால் நீங்கள் ஏன் இங்கு வருகிறீர்கள்?

திரு. எஸ். ஆர். இராதா ; பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவர்கள் இருவருமே பேசிக்கொள்கிறார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே இல்லாத ஒருவரை பற்றி பேசுவது மரபு இல்லை என்றிருந்தாலும், இந்த நாட்டில் தேவையான சில காரியங்களைச் செய்வதற்கு இந்த அரசும், இந்த மன்றமும், அமைச்சரவையும் முற்படும்போது அதற்குத் தடையாக இருக்கின்றவர்கள் யார் அவர்கள் என்று கேட்பது முறையற்றதல்ல, தவறல்ல என்று கருதுகிறேன். யார் என்று கேட்டது ஆளைத் தெரியாமல் அல்ல. அந்தப் பதவியில் இருப்பவர் யார் என்று தெரியாமல் கேட்கப்படவில்லை. தமிழகத்

திற்கு வேண்டியதை மறுக்கிறார்களே யார் அவர்கள் என்ற பொருளிலே அதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : துணைத்தலைவரவர்களே, மாண்பு மிகு முதலமைச்சரவர்கள் சொல்லுகின்ற அந்த வகையிலேதான் நானும் சொன்னேன். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெபமணி அவர்கள், இதுகூடத் தெரியாமல் ஏன் இருக்கிறார். என்று கேட்கிறார். தமிழகத்திற்குத் தேவையானதைத் தராமல் ஏன் அவர் அங்கே இருக்கிறார் என்று நான் கேட்கக்கூடாதா? ஆக அந்த அடிப்படையிலே தான் கேட்கப்பட்டது. வேறல்ல. மேலும் நான் அவருக்கும் சேர்த்துத்தான் வாதாடுகிறேன். அரசியல் காழ்ப்புணர்ச்சி கிடையாது. மரியாதைக்குரிய மாண்பு மிகு திரு. ஜெபமணி அவர்களுக்கும், இந்தத் தமிழகத்திற்கும் சேர்த்துத்தான் வாதாடுகிறேன். இன்றைக்கு தமிழகத்தின் நிலையை நினைத்துப் பார்க்கிறேன். வடபுலத்திலே அப்படிப் பட்ட எண்ணம் இருக்கத்தான் செய்கிறது. தமிழகத்திலே ஏற் படுத்தப்படுகின்ற திட்டங்களுக்குத் தடையாகத்தான் இருக் கிறார்கள் என்பது நன்றாகத் தெரிகிறது.

திரு. ர. ஜெபமணி : ஆன் ஏ. பாயின்ட் ஆப் ஆர்டர், சட்ட சபையில் வடபுலம், தென்புலம் என்று அடிக்கடி பேசுகிறார்கள். வடபுலம் என்றால் எது என்பதை விளக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் ; வடபுலம் என்று சொன்னால் வடமொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருப் பவர்களைத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். வேறு தவறாகக் கருத வேண்டாம்.

திரு. ர. ஜெபமணி : சார், உ.பி, மாநிலத்தை வட மாநிலம் என்ற அர்த்தத்தில் சொல்கிறார்களா அல்லது வட மொழியில் பேசுகிறவர்கள் என்று சொன்னால், வடக்கே எல்லா மொழிகளிலும் பேசுகிறார்கள், ஒரு மொழிதான் இருக்கிறதா? மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்—தென்புலம், வடபுலம் என்று பிரித்துப் பேசினால் தவறு. நாங்கள் பேசுவதாக ஆரம்பித்தால் நீங்கள் தாங்கிக் கொள்ள முடியாது. ஆகவே, பாரதத்தைப் பிரித்துப் பேசுவதை விட்டுவிட்டு மாநில அரசு, மைய அரசு என்று சொல்லுங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமசந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஜெபமணி அவர்கள் உணர்ச்சி வசப் பட்டு நாங்கள் விரும்பாத கொள்கையை விரும்பிச் சொல்கி

அளவிற்கு சொல்வதாகச் சொல்கிறார்கள். அந்த அளவிற்கு ஏமாற மாட்டோம். அங்கே நீங்கள் திராவட நாட்டைப் பிரித்துக் கொடுங்கள் என்று கேட்டால் நாங்கள் வேண்டுமென்றால் உங்களுக்குப் பின் பக்கத்தில் இருக்கிறோம் என்று சொல்லத் தயாராக இருக்கிறேன். இந்தப் பேச்சுக்களில் இருந்து என்ன வெளி வருகின்றன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மக்களுக்குக் கிடைக்க வேண்டியதைப் பெற்றுத் தருவதற்காகத்தான் உங்களையும் எங்களையும் இங்கே தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். அந்த வகையில் தான் மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் இங்கே பேசினார்கள் என்று நினைக்க வேண்டும். அதைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். இன்னொன்று. திராவிட நாட்டைப் பிரித்துக் கேட்பது பற்றி சொன்னார்கள். நாங்கள் அப்படி வேண்டாம் என்ற முடிவிற்கு வந்த பிறகு, இந்த இணைப்பை, ஒருமைப்பாட்டு உணர்வை கொண்டிருக்கிறோம். ஆனால் சிலர் உணர்ச்சி வசப்பட்டு, யாருக்கோ நன்மை செய்வதாக எண்ணி, அந்த முறையில் ஒரு எண்ணத்தை உருவாக்கி விட வேண்டாம் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ர. ஜெபமணி : மைய அரசு மாநில அரசு என்றுதான் சொல்லவேண்டும். வடபுலம், தென்புலம் என்ற முறையில் உறுப்பினர்கள் பேசுவது சரியல்ல. மைய அரசு என்பது எல்லோருக்கும் சேர்ந்ததுதான். ஆனால் நம் மாநிலத்திற்கு என்று வரும்போது, மத்திய அரசு செய்யவில்லை என்று சொல்லலாமே தவிர, இன்னொருவருக்குச் செய்கிறார்கள், நமக்குச் செய்யவில்லை என்று சொன்னால், இன்னொருவருக்கு செய்கிறார்கள் என்று குறிப்பிட்டாலும், எங்கோ அந்த மைய அரசு இருப்பது போலவும்; அதற்கும், தமிழகத்திற்கும் சம்பந்தம் இல்லாமல் இருப்பதுபோலவும், அதை மாற்றாந் தாய் பிள்ளையைக் கவனிப்பது போலவும், நாம் அதற்கு உட்பட்டு இருப்பதாகவும் சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நான் உங்களைவிட தமிழகம் செழித்து வாழ வேண்டும் என்பதில் யாருக்கும் பின்வாங்கியவன் அல்ல. ஆனால், நம்முடைய குறிக்கோள் எப்படி இருக்கவேண்டும் என்றால், மத்திய அரசோடு போராடத் தயார். ஆனால், வடபுலம், தென் புலம் என்ற எண்ணங்கள் வருமானால், அது ஜாதிப் பிரச்னையாக மாறும். அது குடும்பப் பிரச்னையாக மாறி, அதைத் திருத்திவிட முடியாத அளவுக்குகூட வளரும். வடபுலம், தென் புலம் என்று பேசுவதைவிட மைய அரசு, மாநில அரசு என்று பேசுங்கள என்று உங்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். எனக்கு தமிழ்நாட்டின் மீது அக்கறை இல்லை என்று ஒருநாளும் நான் சொல்லவில்லை. இந்த நாடு செழித்து வளரவேண்டும் என்பதற்காக பாடுபட்ட பாரம்பரியத்திலிருந்து வந்திருக்கும் சாதாரண தொண்டன். இந்த நாடு வளம் பெற வேண்டும்

என்று நினைப்பேனே தவிர, துண்டிக்கப்பட வேண்டுமென்றால் என் உடல் துண்டிக்கப்பட்டாலும் நான் அதை ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[முற்பகல் 11-40]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பெரியவர் அவர்கள் இன்னும் உணர்ச்சி வசப்பட்டு இருக்கிறார். அமைதி பெற வில்லையென்று கருதுகின்றேன். அமைதியோடு அவர் பேசினால் இன்னும் நல்ல பல கருத்துக்கள் அவரிடமிருந்து வெளியே வரும். அவர் ஒன்றை வற்புறுத்தி வற்புறுத்திச் சொல்லுகிறார். வட புலம் தென்புலமென்று பேசாதீர்களென்று சொல்லுகிறார்கள். வடபுலம் தென்புலமென்று பேசவேண்டாமென்று நாம் விரும்பி னாலும் கூட இந்தி போன்ற மொழிகளை வேண்டாத அளவுக்கு புகுத்தும்போது, நம்மை அறியாமலேயே மொழிப்பிரச்னை நம் முன்னாலேயே வந்து நின்று வேறு வித எண்ணங்களுக்கு கொண்டு போய் நிறுத்தி விடுகிறதென்பதை தயவுசெய்து பெரியவர்கள் மறந்து விடக்கூடாது. இன்னும் சொல்லப்போனால், இங்கே குறிப்பிட வேண்டாமென்று கருதினாலும் கூட, மைய அரசில் இருந்து வருகின்ற ஒரு அமைச்சர் மாநில அமைச்சர்களைப் பற்றி கேவலமாக பேசிவிட்டுப் போவது என்பது முறையல்ல, அது அவர்கள் தகுதிக்கு ஏற்றதுமல்லவென்பதை மாண்புமிகு பெரியவர் ஜெபமணி அவர்கள் ஒத்துக்கொள்வார் என்பதில் எனக்கு நிச்சய மாக மாற்று கருத்தில்லை. ஆனால், மறைந்த அமரர் நேரு அவர்கள் இருந்தபோது 'நான்சென்ஸ்' என்று சொன்னதற்காக தமிழகம் என்ன ஆயிற்று என்று எல்லோருக்கும் தெரியும். அவரை மதிக்காதவர்கள் யாரும் இல்லை. போற்றாதவர்கள் யாரும் இல்லை. பாராட்டாதவர்கள் யாரும் இல்லை. இருப்பினும் ஒரு வார்த்தைக்காக என்ன நேர்ந்தது என்பதை மறந்து விடக்கூடாது. ஆனால், இப்போது வருகின்ற சில அமைச்சர்கள் தாங்கள் என்ன பேசுகிறோம் என்பதை தெரியாம லேயே பேசுகிறார்கள் என்பதை எண்ணும்போதுதான், மாண்பு மிகு லத்தீப் போன்றவர்களுக்கு இவ்வளவும் பேசிவிட்டு உதவியும் செய்ய மாட்டேனென்கிறார்களே என்று ஆத்திரம் வருகிறது. ஆனால், நிச்சயமாக இந்தப் பேச்சுக்கள் அத்தனையும் மைய அரசின் கவனத்திற்குச் செல்லும். இதிலிருந்து அவர் திருந்தி நிச்சயமாக நமக்கு தேவையானதை செய்து தருவார்களென்று நம்புகின்றேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மைய அரசிலிருந்து இங்கு வருகின்ற அமைச்சர்கள் சிலர் அவர் களுக்கு தாங்கள் பேசுவது என்னவென்று தெரியாமல் பேசு

கிறார்கள் என்று முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். அவர்கள் நன்றாகத் தெரிந்து தான் பேசுகிறார்கள், இந்த அரசில் இருக்கின்ற அமைச்சர்கள் தங்களுக்கு என்று எடுத்துக் கொண்டிருக்கின்ற கொள்கையில் இருக்கின்ற தவறுகளை அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அது அவர்களுக்குள்ள உரிமை என்பதை இங்கே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : சட்டப் பேரவைத் துணைத்தலைவரவர்களே, வாதத்தை நீட்டிக்கொண்டு போகவேண்டாம் என்று எண்ணினாலும் வம்புக்கு வந்தால் என்ன செய்வது என்கின்ற நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. புரிந்து கொண்டு பேசுகிறவர்கள் நெருங்கி வரும்போது, நட்பு காண்பிப்பதும் வெவ்வேறு கருத்துக்களை வெளியிடுவதும், சந்தர்ப்பம் வரும்போது மேடையில் ஒன்றை பேசிவிட்டு, பின்னால் அந்தக் கருத்தில் பேசவில்லையென்று சொல்வதும், அல்லது மற்றவர்கள் அதற்காக வருத்தம் தெரிவிக்கின்ற நிலைமை இருப்பதால்—அது நாட்டுக்கு நல்லதல்ல என்பதை சொல்லிக் கொள்கிறேன். அவர்களை நாம் நன்றாகத் தெரிந்து கொண்டு இருக்கிறோமென்று சொல்வதற்கு முன்னால் அந்த அளவுக்கு பிரச்னைகள் இருக்கின்றன. ஆனால், தமிழகத்தைப் பொறுத்த வரையில் அவர்களைப்பற்றி இன்னாரைப்பற்றி தெரியவில்லை என்று சொல்லுகின்ற நிலைமையில் விஷயங்கள் இல்லை. ஆகவே நான் ஒன்றைக் குறிப்பிட்டு சொல்ல விரும்புகிறேன். வந்து பேசுகின்ற பெரியவர்கள் விவாதத்திற்குரிய பிரச்னையாக இருந்தால் சம்பந்தப்பட்டவர்களை அழைத்து பேசுவதற்கு அவர்களுக்கு நிச்சயமாக உரிமை உண்டு. அவர்கள் அப்படி பேசலாம். அவர்களுக்கு சந்தேகங்கள் வந்தால், தீர்த்துக் கொள்ளலாம். அதை விட்டுவிட்டு, ஏனோ தானோ என்று பேசுவதும் எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற நிலையில் செயல்படுவதும் நிச்சயமாக அவர்களுடைய தகுதிக்கு ஏற்றதல்ல. அந்த வகையில் குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்ற நிர்ப்பந்தத்திற்கு ஆளாக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அண்மையில் ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் இங்கு வந்தபோது என்ன பேசினார் என்பதை பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள். அது சரிதான் என்று ஒத்துக்கொண்டீர்கள் என்றால், மற்றவர்கள் வெளியே அவர்களைப்பற்றி பேசுவதும் நாம் பேசி கேட்டுக்கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளாகி-வற்புறுத்த வேண்டிய நிலைமை உருவாகும் என்பதை நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன்.

நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து ஒருமித்த கருத்தோடு இந்த நாடு ஒன்றுபட்டு வாழவேண்டும், பிரிவினை மனப்பான்மை கூடாது, வடபுலம், தென்புலம் என்று பேசவேண்டிய

நிலைமை வரக்கூடாது என்கிற சூழ்நிலையை உருவாக்க விரும்பினால் சம உணர்வோடு சமத்துவ உணர்வோடு நல்ல நேர்மையான எண்ணத்தோடு கண்ணியமாக பேசவேண்டும் கற்றுக்கொள்ளவேண்டும்—என்றுசொன்னால் தவறாக இருக்கும். ஆகவேதான் இழுத்தேன்—அப்படி பேச வேண்டுமென்று சொல்லும்போது, மாண்புமிகு பெரியவர்கள் அவர்கள் பதிலுக்குப் பதில் சொல்லிவிட்டோம் என்கிற ஒரு. திருப்தியை மட்டும் பெறாமல், உண்மையை ஏற்றுக் கொண்டு நாம் எங்கே தவறாக பேசக்கூடாதோ, அதேபோல் மற்றவர்களும் இருக்கவேண்டும் என்ற எண்ணத்திற்கு நீங்கள் உண்மையிலேயே ஆதரவு தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ர. ஜெபமணி : கனம் முதலமைச்சர் அவர்கள், மந்தியிலிருந்து வரக்கூடிய அமைச்சர்கள் இதுபோன்று பேசுகின்றார்கள் என்று சொன்னார்கள். நமது முதலமைச்சர் அவர்களுக்கு எவ்வளவு மரியாதை வைப்பவன் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இங்கேயுள்ள அமைச்சர்களும் பேசுகிறார்கள. அங்கேயிருந்து வந்தவர்கள் தங்கள் உள்ளத்தில் உள்ளதை அப்படியே சொல்லிவிடுகிறார்கள். அப்படி சொல்வது தவறு என்று முதல் அமைச்சர் அவர்கள் கருதுவார்களேயானால் பிரதம அமைச்சர் அவர்களோடு இவர்கள் தொடர்பு கொண்டு நிச்சயமாக அதற்கு ஒரு முடிவு காண முடியும் என்பது சபையிலுள்ளவர்களுக்கு மட்டு மல்ல, இந்த நாட்டு மக்களுக்கும் நன்றாகத் தெரியும். பிரச்னைகளை வளர்த்துக்கொண்டே போகாமல் நம்முடைய தமிழகத்திற்கு நாம் என்ன நன்மை செய்யப்போகிறோம். என்பதற்கு யார் இடையூறாக இருந்தாலும், அதை— அந்த இடையூறை பேசித் தீர்த்துக்கொள்ள முடியும் என்பதும் முதலமைச்சர் அவர்களுக்கும் தெரியும்.

ஆனால், என்னுடைய அபிப்பிராயம் எல்லாம், யார் அப்படிப் பேசினாலும், அதை மத்திய அமைச்சர் இப்படிப் பேசினார் என்று சொல்லுங்கள்; கவலையில்லை. ஜார்ஸ் பெர்னான்டஸ் என்று சொல்லும்போது, நான் தெரிவித்துக் கொள்வது அவர் இங்கே உள்ளவர்தான். ஆனால், அதைவிட்டு வடபுலம், தென் புலம் என்று இழுக்க வேண்டாம்; அந்த எண்ணம் இந்தச் சபையில் பிரதிபலிக்க வேண்டாம். தனியாக பிரிந்துவிட வேண்டும் என்ற எண்ணம் தமிழகத்திலே வரக்கூடாது.

இந்தி திணிக்கப்படுகின்றது என்று சொல்லப்படுகிறது, அதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. ஜனநாயகத்தில் எதையும் திணிக்க முடியாது. அப்படி திணிப்பதானால், அது சர்வாதிகாரத்தாலே தான் முடியும். ஜனநாயகத்திலே திணிக்கப்படுவது என்பது நடக்காத ஒன்று; அப்படி திணிக்கப்படுவதானால், அது

சர்வாதிகாரத்திலே போய் முடியும். ஆகவே, இந்தி திணிக்கப் படாது என்று பிரதமர் அடிக்கடி சொல்லியும், நம்முடைய முதல்வர் பாராட்டுத் தந்தியும் கொடுத்தும் இருக்கிறார். எனவே, இந்தப் பிரச்னையை இங்கே கொண்டு வருவது அவ்வளவு நல்ல தல்ல. எனது ஒரே ஒரு வேண்டுகோள், வடபுலம். தென்புலம் என்று இந்த அசெம்பிளியில் பேசுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்ற என் உணர்வை மட்டும் சொல்லிக்கொண்டு மேலும் இதை வளர்க்காமல் முடித்துக் கோள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு பெரியவர் ஜெபமணி அவர்கள் 100க்கு 98 எங்களுடைய கொள்கைக்கு ஒத் தவராகஇருப்பதற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். ஜார்ஜ் பெர்னாண்டஸ் கர்நாடக மாநிலத்தில் பிறந்தவர் என்பதற்காக, அவர் எது சொன்னாலும் கேட்க வேண்டுமென்பதில்லை. அதுபோலத்தான் வடபுலத்திற்கு சென்றிருந்த அவர்கள, ஒட்டு மொத்தமாக இந்த மாநிலத்திற்கும் ஆற்றக்கூடிய காரியங்களில் முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை என்ற முறையில்தான் மாண்புமிகு உறுப்பினர் லத்திப் அவர்கள் சொன்னார்கள். நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். யார், எவர், எப்படிப்பட்டவர் என்ற கேள்விக்கு அடையாளமாக பிரதம மந்திரி அவர்களின் கட்டளைப்படி செயல்பட அமைச்சர்கள், அந்த அதிகாரங்களை வைத்திருந்தும், பயன்படுத்தவில்லை என்கிற குறைபாட்டைத் தான் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆகவே, இதிலே பிரிவினை என்பதில்லை. எங்களுக்கும் அந்த எண்ணம் இல்லை என்பதை பெரியவர் ஜெபமணி அவர்கள் புரிந்துகொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்திப் : தலைவர் அவர்களே, நான் திசை யைப் பற்றிக் கூறினேன். ஆனால், எங்கோ திசை திருப்பி விட்டார்கள். வடபுலம் என்றால், வடக்கே விந்திய மலைக்கு அப்பாலுள்ளதைச் சொல்கிறோம். விந்திய மலைக்கு தெற்கே உள்ள பகுதியை தட்சிணாயினம் என்றும், தட்சிணபுரம் என்றும் சொல்வார்கள். உபநிடதங்களிலே கூட இதைப்பற்றிச்சொல்லப் பட்டிருக்கிறது. நம்மவர்களில் சிலர் தட்சிணாமூர்த்தி என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய நாயன் மார்கள்கூட, 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்று பாடி யிருக்கிறார்கள்.

திரு. ர. ஜெபமணி : 'எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி,

திரு. எம். ஏ. லத்தீப் ; 'எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்றும் பாடியிருக்கிறார்கள். இருந்தாலும், இதிலே நாயன்மார்கள் பிரிவினைப் பற்றி பேசினார்களா ?

''உத்தரம் யசஸ் சமுத்ரஸ்ய
இமாக்ரஸ்ய சைவ தட்சிணம் வர்த்தசம
பாரதம் மமபாரதி யத்ர சந்ததிய.''

அன்றைக்குச் சொன்னார்கள். நீங்கள் எனக்கு கற்றுக் கொடுக்கிறீர்களா ? ஆகவே, இந்தப் பிரிவினை உணர்வு எனக்கில்லை. இல்லாத உணர்வை என்னிடம் இருப்பதாகச் சொல்லவேண்டாம் என்று கூறி, நான் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

திரு. ர. ஜெபமணி : வடபுலம் என்று சொன்னால், காஷ்மீர், இமாசலப் பிரதேசத்தைக் குறிக்கும். எனவே, நீங்கள் சொல்வதானால் மைய அரசு என்று சொல்லுங்கள். எனவே, வடபுலம், தென்புலம் என்று சொல்லாதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தி பேசுகின்ற பகுதியைத் தான் அவர் வடபுலம் என்று சொன்னாரே தவிர, இதிலே மத்திய அரசு என்ற பிரச்னை இல்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : மத்திய அரசாங்கத்தைத் தான் நான் வடபுலம் என்று சொன்னேன். அதை ஏற்றுக்கொள்வார்களா ? எனவே, அதை விட்டு விடுங்கள்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : இவ்வளவு சுறுசுறுப்பாக இளைஞரைப்போல் இருக்கும் ஜெபமணி அவர்களை எல்லோரும் பெரியவர் என்கிறார்கள். நான் கேட்கிறேன், அவருக்கு பல் இல்லை, அதனால் தான் அப்படிச் சொல்கிறார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, பெரியவர் என்று சொல்வது அவரது வயதைக் குறித்து அல்ல. அவருடைய அனுபவத்தையும், தியாகத்தையும் தெரிவிப்பதற்காகத் தான்.

[முற்பகல் 11—50]

திரு. எம். ஏ. லத்தீப் : தொழில்துறையைப் பொறுத்தவரை நாம் முறையான ஒருங்கிணைப்பு அமைப்பை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். மத்திய, மாநில அரசுகள் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் தொழிற் துறையில் முன்னேற்றத்தை ஏற்

1979 ஏப்ரல் 23] [திரு. எம். ஏ. லத்தீப்]

படுத்த முடியும் என்பதற்காக சில உண்மைகளைச் சுட்டிக் காட்டினேன். தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய நன்மைகளை சில சமயங்களில் உண்மைகளைச் சொல்லி பெறவேண்டும், இல்லாவிட்டால் நம்முடைய வாதங்களை எடுத்து வைத்துப் பெற வேண்டும், அதனாலும் முடியாவிட்டால் போராடிப் பெற வேண்டும் – போராடுவது என்று சொல்லும்போது சொற் போரைத்தான் சொல்லுகிறேனே தவிர, மற்போரை சொல்ல வில்லை. மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தோடு போராடி நம்முடைய மாநிலத்தின் பழைமையான நிலையை மீண்டும் பெற நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லி இந்த அளவோடு என்னுடைய பேச்சை நிறைவு செய்து கொள்ளுகிறேன்.

திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அவை முன் வைக்கப்பட்டிருக்கும் மானியக் கோரிக்கைகளை ஆதரித்து தொழில் துறை மானியத்தைப் பற்றி என்னுடைய கருத்துக் களைச் சொல்ல முன்வருகிறேன்,

குறிப்பாக, இன்றையதினம் தமிழகத்தில் ஒரு தாள் ஆலை வர இருப்பதாக அறிவித்திருப்பதை மனமுவந்து பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன், அதே போன்று கொடுக்கப் பட்டிருக்கிற அறிக்கையில் இருந்து பார்ப்போமானால் இராணிப் பேட்டைக்கும் மற்றும் பல்வேறு பகுதிகளுக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக புதிதாக கூட்டுறவுத் துறையில் உருவாக்கப்படும் சர்க்கரை ஆலை உளுந்தூர்ப் பேட்டையில் உருவாக்க இருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் நேரத்தில் தமிழகத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் எவ்வளவு தூரம் கட்சி சார்பற்ற முறையில் சேவை செய்து வருகிறார், நியாயம் வழங்கவேண்டுமென்ற எண்ணத்துடன் செயல்பட்டு வருகிறார் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். இவ்வளவு சிறப்பாக அரசு செயல்பட்டு வந்தாலும் இன்றைய தினம் ஆளும் கட்சி உறுப்பினர்கள் உள்ளக் குமுறலுடன் மனம் வருந்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதற்கு மூலகாரணம் அரசு என்று சொல்லமாட்டேன். சட்டமன்ற நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது எதிர் வரிசையில் இருந்து ஒரு சில பிரச்சினை கள் வருகிற நேரத்தில் அவர்கள் நடந்து கொள்ளும் முறையால் வருந்தக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்ற உள்ள உணர்வை நாங்கள் வெளியிடுவதை எதிர்க்கட்சிக்காரர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இங்கே வர இருக்கிற அடுத்த மானியக் கோரிக்கையிலே இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த

சுந்தரராஜன் அவர்கள் பொதுமக்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள தங்களுக்குத் துப்பாக்கி கொடுக்கவேண்டுமென்று வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். பொதுமக்களிட மிருந்து நாம் மிகவும் பாதுகாப்பாகத்தான் இருக்கிறோம். ஆனால் சட்டமன்றத்திற்கு வருகிற நேரத்தில் எங்களுக்குக் கவசத்தைத் தாருங்கள், குறைந்தபட்சம் ஹெல்மெட்டாவது தாருங்கள். பேப்பர் வெயிட் மேலே விழுந்தால் பரவாயில்லை. மைக்குகள் எல்லாம் மேலே வந்து விழக்கூடிய சூழ்நிலை இருப்ப தால் நாங்கள் ஹெல்மெட் போட அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு தூரத்திற்கு இங்கே நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கிறது என்பதைக் கூற விரும்புகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: இன்றும் அந்தப் பயம் திரு. யூசுப் அவர்களுக்கு இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. யா. சை. மு. யூசுப்: இப்போது இல்லையென்றாலும் இந்த நிலைமை தொடர்ந்து இருக்காது என்பது தெரிகிறது. இன்னும் சில நாட்கள் கழித்து அத்தகைய நிலைமைகள் மீண்டும் வரக்கூடும். முன்னெச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்பதற்காகச் சொல்லுகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: இன்றைக்கு நேரம் குறைவாக இருக்கிறது. ஒரு மணிக்கு தீர்மானங்களை ஓட்டுக்கு விட வேண்டும். திரு. யூசுப் அவர்கள் எந்த மானியத்தின்மீது பேசுகிறார்கள்? தொழில்துறை மானியத்திலா அல்லது வேறு ஏதாவது மானியத்திலா?

திரு. யா. சை. மு. யூசுப்: ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால், எங்களுடைய உணர்வுகளை எதிர்க்கட்சியினர் புரிந்து கொள்ளவேண்டும். நாங்களும் இந்த அவையில் உறுப்பினர்களாக இருந்து கொண்டிருக்கிறோம். முக்கியமாக எங்களுடைய தலைகள் எழுகின்ற நேரத்தில் எதிர் வரிசையில் இருப்பவர்கள் உரிய மரியாதை கொடுத்து நடந்து கொள்வதில்லை.

நான் தொழிற்துறை பற்றிப் பேச முன்வருகிறேன். நாட்டின் தொழில் வளர்ச்சி ஏற்படுவதற்கு காமராஜர் அவர்கள் ஆர். வி. போன்றவர்கள் சிறப்பாக பணியாற்றினார்கள். அப்படிச் சொல்லும்போது நான் ஒன்றைக் குறிப்பிட விரும்பு கிறேன். தொழில்துறையில் முன்னேற்றம் ஏற்பட்டது என்று சொல்லும்போது அன்று அந்தத் தொழில்கள் எல்லாம் குறிப்பிட்ட ஒரு சாராரை, பணக்கார வர்க்கத்தைச் சார்ந்த தாக இருந்தது. அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற

1979 ஏப்ரல் 23] (திரு. யா. சை. மூ. யூசுப்)

பிறகு இன்று புரட்சித் தலைவர் அவர்கள் தொழிற்துறையில் மாபெரும் மாற்றங்களைச் செய்துவருகிறார்கள். சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ளவர்களுக்குப் பயன்கிடைக்கும் வகையில் மாவட்டத் தொழில் மையங்களை ஆங்காங்கு ஏற்படுத்தியதன் மூலம் ஏழை எளிய மக்கள் பயன்பெற்று வருகிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதேபோல் இங்கே பல்வேறு அறிக்கைகளை நாங்கள் பெற்றிருக்கிறோம். கைத்தறி நெசவாளர்களின் நன்மைக்காக சாயத்தைப் போன்ற பல்வேறு உபபொருட்களைத் தயாரிக்கின்ற ஒரு எண்ணத்திலே இந்த அரசு செயல்பட்டு வருகிறது. அடுத்து தோல் உற்பத்திக்காக அந்தத் தொழிலின் மேம்பாட்டிற்காக தனியாக நிதியை ஒதுக்கீடு செய்து இருக்கிறது நம்முடைய அரசு. சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையிலும் அல்லது மற்ற எந்த வளர்ச்சியாக இருந்தாலும் அந்தப் பலன்கள் எல்லாம் கீழ் மட்டத்திலே உள்ள சாதாரண மனிதனுக்குச் சென்று சேர வேண்டுமென்ற நோக்கத்திலே இந்த அரசு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது, ஆகவே இதையெல்லாம் செய்துவருகிற இந்த அரசுக்கு உங்கள் ஆதரவை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மின்சாரம், மின் அணுவியல் இவற்றின் வளர்ச்சிக்காக இந்த அரசு தீவிரமாக அக்கறை செலுத்திவருகின்றது. அதன் மூலமாக பல்வேறு வசதிகளைச் செய்து தர முன்வந்திருக்கிறது. இந்த அறிக்கையைப் பார்த்தால் மின்சார உற்பத்தி ஏற்கெனவே இருந்ததை விட பல மடங்கு அதிகமாகி இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். பெங்களூரிலே உள்ள பெல் தொழிற்சாலைக்கு உதவியாக ஒரு தொழிற்சாலை தமிழகத்திலே ஏற்படுத்துவதற்கான நிலைமைகள் இருக்கின்றன. அதை ஆவடியிலே ஏற்படுத்தித் தருவதற்கு இந்த அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நேரம் அதிகமாக இல்லாத காரணத்தினால் ஒரு சில கருத்துக்களை மட்டும் சொல்லி முடித்துக்கொள்ள இருக்கிறேன்.

என்னுடைய பகுதியிலே - உவரி—என்ற பகுதியிலே—கடலிலே கிடைக்கிற தங்க மணலை – திரு ஜெபமணி அவர்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது – வடநாட்டிற்கு கொண்டு செல்கிறார்கள். அங்கே அதை வைத்து உப்புத்தாள் தயாரிக்கப்படுகிறது. அந்த உப்புத் தாளை தமிழகத்திலே தாயாரிப்பதற்கு முயற்சிகளைச் செய்தால் உப்புத் தாளும் பயன்படும், தொழிற்சாலையும் ஏற்படும், அந்த மணலும் பயன்படும், அதோடு அட்டையைத் தயாரிக்கின்ற தொழிற்சாலையையும் அமைப்பதறகு வாய்ப்பாக இருக்கும்.

அடுத்து கனிவளத்தைப் பொறுத்தவரையிலே தமிழகத்திலே உள்ள மூலை முடுக்குகளிலே எல்லாம் எங்கெங்கே கனிவளங்கள் கிடைக்கின்றன என்பதை ஆராய்ந்து அறிவதற்காக நல்ல பணிகளை எல்லாம் நம்முடைய அரசு செய்து வருகிறது. புரட்சித் தலைவரின் சீரிய தலைமையிலே உள்ள அரசு ஒளிமய மான எதிர்காலத்தை தமிழகத்திற்கு ஏற்படுத்தித் தரும். என்னுடைய பகுதியிலே கிராபைட் இருக்கிறது, கன்னியாகுமாரி பகுதியிலே இருக்கின்ற கிராபைட்டைக் கொண்டுவருவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அதோடு எங்கள் பகுதியிலே உள்ள கிராபைட்டையும் பயன்படுத்தி நல்ல ஒளிமயமான தமிழகத்தை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார வாரியத்திற்கு பல்வேறு கேபிள்கள் கிடைக்க வில்லை. கேபிள்கள் வடநாட்டிலிருந்து வருகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அங்கே இருந்து வருகின்ற கேபிள்கள் சரியாக விநியோகத்தில் இல்லாத காரணத்தினாலே நம்முடைய மின்சார வாரியமே கேபிள்களை தயாரிக்கவேண்டும், எனது தொகுதியிலே அதிகமான சுண்ணாம்புக் கல் கிடைக்கிறது. அதை தனியார் துறையினர் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள், அதை இப்போது பயன்படுத்தாவிட்டாலும், நிரந்தரமாக அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையிலே தொடர்ந்து லைசென்ஸ்களை ரினியூவல் செய்து கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 600 ஏக்கர் நிலத்திலே அந்த சுண்ணாம்புக் கல் கிடைக்கிறது, அதை வைத்து அங்கே ஒரு மினி சிமின்ட் பிளான்டை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லை மாவட்டம் ஏற்கெனவே பிற்பட்ட மாவட்டம் என்று இருந்தாலும் அது முற்பட்ட மாவட்டமாகக் கருதப் படுகிறது, வரக்கூடிய பட்ஜெட்டுகளைப் பார்க்கக்கூடிய நேரத்திலே எந்தவிதமான ஒதுக்கீடும் அதிகமாக இல்லை, ஆகவே நெல்லை மாவட்டத்தை பிற்பட்ட மாவட்டம் என்று கருதி அதிகமாக நிதி ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரையில் இத்தனையையும் செய்தது மட்டுமல்ல, ஏழை எளிய மக்கள், பாமர மக்கள், கிராமப்புறங்களிலே உள்ள மக்களுக்காக இந்த அரசு தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறது இந்த அரசு என்பதால் இந்த அரசின் தலைவரால் கொண்டுவரப்பட்டு இருக்கின்ற மானியக் கோரிக்கைகளை நாங்கள் ஆதரிப்பதுபோல் எதிர்வரிசையிலே

1979 ஏப்ரல் 23] [திரு. யா. சை. மூ. யூசுப்]

உள்ளவர்களும் ஆதரிக்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொண்டு இன்னும் பல்வேறு பிரச்சினைகளைப்பற்றிப் பேசவேண்டுமென்றாலும் நேரம் அதிகமாக இல்லாத காரணத்தினால் இத்துடன் என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

[நண்பகல் 12-00]

திரு. ரெ. வி. சவுந்திரராஜன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. யூசுப் அவர்கள் பேசும்பொழுது என் பெயரை இழுத்து, நான் வெட்டுத் தீர்மானம் கொடுத்ததைப் பற்றிச் சொன்னார்கள். இதே மாமன்றத்திலே பல உறுப்பினர்கள தங்களுக்குப் பாதுகாப்பில்லையென்று பேசியது, மன்ற உறுப்பினர்களுக்கு நன்றாக நினைவிருக்கலாம். அதன் பேரில்.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களைப் பற்றி தவறாகச் சொல்லவில்லை. நீங்கள் கொடுத்ததை அவர் ஆதரித்து தான் பேசினார்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் யூசுப் அவர்கள் பேசும் பொழுது. பால் வள நிறுவனத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டு, அதை அதிகப்படுத்த வேண்டுமென்பதைச் சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு இந்தியா எங்கும் பசுவதையைத் தடை செய்யக் கோரி நம்முடைய மதிப்பிற்குரிய வினோபா பாவே அவர்கள் இன்றைக்கு உண்ணாவிரதம் இருக்கின்ற நிலைமையிலே இருக்கின்றார்கள். தமிழ்நாட்டிலேயிருந்து கறவை மாடுகள்கூட கேரளாவிற்குத் திடீர் திடீர் என்று கடத்தப்பட்டு அங்கே அதை அடித்துச் சாப்பிடுகிற ஒரு நிலைமை இருக்கிறது. அதற்குத் தமிழ்நாட்டிலேயிருக்கிற பல்வேறு நல்லவர்களும், அதைத் தடை செய்ய வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில், தமிழக அரசைப் பொறுத்தவரையிலே, தமிழ்நாட்டில் நாம் பசுவதையை அனுமதிக்கவில்லையென்றாலும், இங்கேயிருந்து கேரளாவிற்குக் கடத்தப்படுகிற பசுக்களையாவது தடை செய்கிற அளவுக்குத் தமிழ்நாடு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நாளைக் காலையில் அந்தக் கேள்வியைப் போடுங்கள்.

திரு. தே. ஞானசிகாமணி : குமரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் நீண்ட காலமாக கேரளாவிலேயிருந்து நல்ல இனப் பசுக்கள் வந்து கொண்டே இருக்கின்றன. இப்பொழுதும் நல்ல இனப் பசுக்கள் வேண்டுமானால், கேரளாவிலேயிருந்து தான் நாங்கள் கொண்டு வரவேண்டும். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு சட்டம் வருவதாக இருந்தால், கன்னியாகுமரி மாவட்டத்தில், இது வரையிலும், நல்ல நல்ல இனப் பசுக்கள் வந்து கொண்டிருப்பதும் நின்று விடும். தமிழ்நாட்டிலிருந்து, நல்ல இனப் பசுக்கள் கொண்டு வருவதும் இல்லை, அதற்கான திட்டமும் இல்லை. நான், ஒரு விண்ணப்பத்தைக் கூட அமைச்சருக்குக் கொடுத்தேன். நீண்டகாலமாக, கேரளாவிலேயிருந்து வந்து கொண்டிருக்கிறது, இன்றைக்குக் கேரளாவில் ஜெர்சி மாடுகள் என்பது பரவலாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அதற்கு மேல் இருக்கக்கூடிய ப்ருஷியன் போன்ற மாடுகள் கொடுக்கப்பட வேண்டும் என்றெல்லாம் விண்ணப்பம் கொடுத்தேன். அது செவி சாய்க்கப்படவில்லை. ஆகவே, இந்தத் தீர்மானம் வருவது, பசு வளர்ப்பதற்கு கேடாக இருக்கும். ஆகவே, அதை நீங்கள் யோசித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பசுவதை கூடாது என்கிற பிரச்னை இந்திய துணைக் கண்டம் முழுவதுமே, பரவலாக, அது நம்மைப் போன்றவர்களுடைய மனதை ஈர்க்கின்ற ஒரு மாபெரும் பிரச்னையாக மாறி விட்டது என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள் என்று கருதுகிறேன். வினோபாஜி அவர்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். நாம் இங்கே பசுவதை கூடாது என்பதைச் சொல்லியிருக்கிறோம். அதே நேரத்தில் இங்கிருந்து போகின்ற பசுக்கள், மாடுகள் எல்லாம் நல்ல ஆரோக்கிய மானவைதான் என்று நாம் எடுத்துக்கொள்ளவும் முடியவில்லை, இல்லையென்றும் நாம் சொல்லிவிட முடியாது. ஆனாலும் ஒட்டுமொத்தமான, பொதுவான, ஒரு கொள்கை, நியாயம் என்ற வகையில் தமிழக அரசு இப்பொழுது, மாடுகளை, கன்று களை, காளைகளை இங்கிருந்து வெளி மாநிலத்திற்குக் கொண்டு போவதைத் தடை செய்வது என்கிற முடிவிற்கு வந்திருக்கிறது என்பதையும், இதை நாங்கள் நேற்றைய தினமே உத்தரவு போட அதற்கு அனுமதி தந்திருக்கிறோம் என்பதையும் இங்கே சொல்லிக் கொள்ள நான் விரும்புகிறேன்.

இங்கே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல், கேரளாவிலேயிருந்து நல்ல பசுக்கள் எல்லாம் வருகின்றன என்று சொன்னால், நான் மறுக்கவில்லை.

1979 ஏப்ரல் 23] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

ஆனால் அப்படிப்பட்ட பசுக்களை எல்லாம் கொண்டு வருவதற்கு இன்னும் பல்வேறு வழிகளில் நாம் முயன்று கொண்டிருக்கிறோம். வெளிநாடுகளிலிருந்து கூட வருகின்றன என்பதையும் இங்கே குறிப்பிட்டுக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த வகையில், பசு, மாடுகள் போன்றவைகள், தமிழகத்திற்கு எவ்வளவு தேவையோ, நம்முடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எப்படிப்பட்ட பசுக்கள் வேண்டுமோ, அவைகளைக் கொண்டு வருவதிலே இந்த அரசு நிச்சயமாக அக்கறை காட்டும், அதிலே நாம் ஏமாந்து விடுவதற்கு யாரையும் விட மாட்டோம், ஏமாற மாட்டோம் என்பதைச் சொல்லி, ஒரு உயிரைக் காப்பாற்றுவது என்பதற்காக என்று நினைக்காமல, நியாயமான ஒரு கொள்கை என்ற அளவில் கூட அதை எடுத்துக் கொண்டு, இந்த நேரத்தில் நாம் அதைச் செய்ய வேண்டிய கடப்பாடுடையவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறோம் என்பதை எண்ணிப்பார்த்து, இப்பொழுது அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் மாமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கருத்து, வேறு வழியில்லாத நிலைமையிலும், ஓரளவிற்குச் சரி என்ற நிலைமையிலும் இதைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொல்லி, அவசரப்படாமல், அமைதியாக இருந்தால், மீண்டும் பரிசீலனை செய்ய முடியும், மற்றவர்களும் சிந்திப்பதற்கு நாம் வாய்ப்பைத் தரலாம் என்பதை இங்கே சொல்லிக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : துணைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி, இன்றையதினம் பூதான இயக்க வீரர் வினோபா பாவே அவர்கள் உயிருக்காகப் போராடிக் கொண்டு இருக்கும் நேரத்தில் தமிழ்நாடு அரசின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் இந்த அவையின் சார்பில் உண்ணா விரதத்தை நிறுத்துவதற்கு அரசு தீர்மானம் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டோ அல்லது தனிப்பட்ட முறையில் முதலமைச்சர் அவர்கள் அவர்களுக்கு தங்களுடைய செய்தியாகவாவது அனுப்புவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் எங்களுடைய முடிவை மைய அரசுக்குச் சொல்லியிருக்கிறோம். மைய அரசும் எங்களைக் கேட்டுக்கொண்டார்கள். அதிலும் உள் துறை ஆட்சியைக் கையில் வைத்து இருக்கும் அமைச்சர் அவர்கள் எழுதிக்கேட்டு, நாம் அதை ஒப்புக்கொண்டு இருக்கிறோம். ஆகவே, கன்கரன்ட் லிஸ்டில் என்கிற நிலைமையில் கூட தேவையில்லை. அது முடிந்த முடிவாக ஆகிவிட்டது என்பதை மனதில் கொள்ளவேண்டும் என்று சொல்லிக்கொண்டு, இந்தச் செய்தி வினோபாஜிக்கு அனுப்ப வேண்டுமா என்ற கேள்வி நான் பதில் அளிக்க வேண்டுமானால், அதை மைய அரசின் பொறுப்பிற்கே விட்டு விடுகிறேன். ஆனாலும், நீங்கள் இங்கே தீர்மானம் போட்டு

அனுப்பலாமா என்று கேட்ட கேள்வியும், அதற்கு நான் அளித்த விளக்கங்களும் வெளிவருமானால் இந்த மாமன்றத்தின் ஒருமித்த கருத்தாக அது அமையும் என்று நான் நினைக்கிறேன்.

* திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய மானியத்திலே குறிப்பாக, வடாற்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலையில் இரும்புத்தாது மேம்பாட்டு திட்டம் என்று ரூ. 200 கோடி செலவிலே ஆய்வு நடந்து கொண்டு இருக்கிறது என்று பாலிசி நோட்டில் தந்து இருக்கிறீர்கள். அதற்காக இந்த அரசாங்கத்திற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். அது பரிசீலனையோடு நின்று விடாமல், அடுத்த கூட்டத் தொடரிலேயே அது நடந்து விட்டது என்கிற ஒரு திருப்தியான, ஒரு சந்தோஷகரமான செய்தியை எங்களுக்குத் தருகிற முறையில் இந்த அரசாங்கம் அதை செயல் முறைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். திருவண்ணாமலை இரும்புத்தாது மேம்பாடு திட்டம், திருவண்ணாமலைப் பகுதியில் இரும்புக் கனி வளம் அதிகமாக இருக்கிறது என்று ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டு இருக்கிறது. அங்கே அந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டால் அது லாபமாக இருக்கும், மற்ற எல்லாவற்றையும் விட பயன் உள்ளதாக இருக்கும் என்ற கொள்கையில் இந்த அரசாங்கம் அதை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே வடாற்காடு மாவட்டத்தில் தொழிற் சாலைகள் இல்லை என்கிற ஒரு குறை எப்போதுமே எங்களுக்கு உண்டு. அந்தக் குறைபாட்டை நீங்கள் தீர்த்துத் தீரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்திலே இந்த அரசுக்கும் நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன். இரண்டு பட்ஜெட் கூட்டங்களிலே பேசி இருந்ததன் பயனாக இந்த ஆண்டிலே இருந்து பால் பவுடர் தொழிற்சாலை, சிறு தொழில் நிறுவனத்தின் மூலமாக 200 யூனிட்டுகளை வடாற்காடு மாவட்டத்தில் அறிவித்து இருப்பதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் எங்களுடைய மாவட்டப் பிரச்னைகள் சிலதும் அரசாங்கத்தின் ஆய்வில் இருக் கின்றன, அவற்றையும் எடுத்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே கனி வளங்களை மேம்படுத்துகிற கொள்கையை மையமாகக் கொண்டு ரூரல் பகுதியில் ஏற்கனவே இருக்கும் கனிவளங்களை உபயோகப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவேண்டும் என்கிற எண்ணம் வரவேற்கத் தக்கதொன்றாகும். இது ஏற்கனவே நகர்புறங்களில் இருக்கும் கான்சன்டிரேஷன் ஆப் இன்டஸ்டீரிஸ் என்பதை டிசென்டிரலைஸ் செய்வதன் மூலமாக கிராமப்புறங்களில் நன்மை

1979 ஏப்ரல் 23] [திரு. ரா. மார்க்கபந்து]

ஏற்பட முடியும் என்கிற அடிப்படையில் அரசு திட்டம் வைத்து இருப்பது வரவேற்கக்கூடியதாகும். அந்த முறையில் என்னுடைய வடாற்காடு மாவட்டத்தில் ஒரு பேப்பர் தொழிற்சாலை ஆரம்பிக்க அதற்கு மூலப்பொருளாக உள்ள கரும்புச்சக்கை, மற்றும் எம். பி. கோரைப் பயிர், மூங்கில் ஆகியவை திருவலம் பகுதியில் நிறைய கிடைக்கிறது, அந்தப் பகுதியில் ஒரு பேப்பர் இன்டஸ்டிரீஸ் ஆரம்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டது. பின்னர், அது சாத்தனூர் பகுதியில் ஆரம்பிக்கலாம் என்று மாவட்ட அளவில் சொல்லப்பட்டது.

[பிற்பகல் 12–10]

ஆனாலும் அது இன்னும் மெட்டீரியலைஸ் ஆகவில்லை. அதை நீங்கள் ஏற்று எங்களுடைய வடாற்காடு மாவட்டத்திலே ஒரு பேப்பர் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, வடாற்காடு மாவட்டத்தில் வனஸ்பதி தொழிற்சாலை-எண்ணெய் உற்பத்தித் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. வேர்க்கடலை போன்ற எண்ணெய் வித்துகள் அதிகமாக பயிரிடப்படும் ஒரு மாவட்டமாக இன்றைக்கு வடாற்காடு மாவட்டம் இருந்துகொண்டிருக்கிறது, ஆகவே, அங்கே வனஸ்பதி தொழிற்சாலை— எண்ணெய் உற்பத்தித் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே சந்தனத் தொழிற்சாலையைப்பற்றிச் சொன்னார்கள். சந்தனத் தொழிற்சாலையை ஆரம்பிக்க மத்திய அரசினுடைய ஒப்புதல் கிடைக்க முடியாத சூழ்நிலையில் அதை ஒரு பெரிய தொழிலாக ஆரம்பிக்க முடியாது என்ற குறிப்பும் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. நாங்கள் கேட்டுக்கொள்வதெல்லாம், அந்த பெரிய தொழிற்சாலையை ஆரம்பிக்க மத்திய அரசு அனுமதி கொடுக்கவில்லை என்றாலும் அதை சிறு, சிறு யூனிட்டுகளாகப் பிரித்து 'ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்டிரீஸ் லிமிட்டுக்குள்' வருவது போல பல யூனிட்டுகளாகப பிரித்து சந்தன தொழிலை ஆரம்பித்தால் மக்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும்; அதே நேரத்தில் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்துச்செல்கின்ற டிரான்ஸ்போர்ட் எக்ஸ்பென்சும் குறையும். ஒரு சந்தன தொழிற்சாலை வடாற்காட்டில் ஆரம்பிப்பதன் மூலம் மூலப்பொருட்களை எடுத்துச் செல்வதற்கான செலவு குறைவதால், அதிக லாபம் கிடைக்கின்ற ஒரு வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே, சிறு தொழில்கள் என்ற அடிப்படையில் சந்தனத் தொழிலை சிறு, சிறு யூனிட்டுகளாகப் பிரித்து, வடாற்காடு மாவட்டத்தில் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் இந்த இன்டஸ்டிரியல் யூனிட் என்பதை மாற்றி, சிறு தொழில் யூனிட்டுகளை ஒரு தொகுதியாக 'யூனிஃபார்ம் டிஸ்டிரிபியூஷன் ஆஃப் இன்டஸ்ரீஸ்' என்ற அடிப் படையில் நீங்கள் வைக்க வேண்டும். காரணம், ஒரு பகுதியில் வைக்கும்போது அங்கே பாரபட்சம் காட்டும் வாய்ப்பு ஏற்பட்டு விடக்கூடாது. ஒரு பகுதியில் இருக்கிறவர்கள் வாய்ப்பு இல்லாத வர்கள் அல்லது ஒரு பகுதியிலே இருக்கிறவர்கள் வாய்ப்பு உள்ள வர்கள் என்ற எண்ணத்தை உருவாக்காமல் இந்த நாட்டு மக்கள் அனைவரும் பரவலாகப் பெறுகின்ற ஒரு நல்ல வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிற்சாலைகளுக்கு பெர்மிஷன் கேட்டு, பெர்மிட் மனு கொடுக்கும்போது, இங்கே வேண்டாத, விரும்பத்தகாத சில ரெஸ்டிரிக்ஷன்களை வைத்திருக்கிறார்கள். கட்டடம் இப்படித் தான் இருக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். அதைப்போல மற்றும் பல்வேறு கட்டுப்பாடுகள் இருக்கிற காரணத்தால் சாதாரண மக்கள் தங்களுக்கு இருக்கிற வசதியை வைத்து, ஒரு சிறு தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்று விரும்புகிற போது முடியாமல் போகிறது. அதேநேரத்தில், பஞ்சாப், அரியானா மாநிலங்களில் இன்டஸ்டிரீஸ் ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னால் அங்கே எந்தவிதமான கட்டுப்பாடும் கிடையாது. சமீப காலத்தில் உருவாக்கப்பட்ட மாநிலமாக இருந்த போதிலும் அரியானா இன்றைக்கு தொழில் மையமாக விளங்கு வதைப் பார்க்கிறோம். அதேமாதிரி தமிழ்நாட்டிலும் தொழில் களை உருவாக்க தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அக்ரோ based இன்டஸ்டிரீஸ் பஞ்சாப் மாநிலத்தில் வைத் திருக்கிறார்கள் சைக்கிள் ஸ்பேர் பார்ட்ஸ், போல்ட், நட்டு போன்ற சிறு சிறு உதிரிப் பொருட்களை தயார் செய்கின்ற உரிமையை பஞ்சாப், அரியானா மாநிலங்களில் ஏற்கெனவே நிலங்களில் பம்புசெட் வைத்து இருக்கிற சாதாரண மக்களுக்குத் தந்து, உற்பத்தி செய்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை அரசாங்கம் வாங்கி, பயன்படுத்து கிறது. அந்த முறையை தமிழ்நாட்டிலும் நீங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

கிராமப்புறங்களில் விவசாயத்தை நம்பி இருக்கிற மக்களுக்கு சிறுதொழில்களை ஆரம்பிப்பதில் முன்னுரிமை கொடுக்க வேண்டும். சமுதாயத்திலே 'வீக்கர் செக்ஷன்' என்று சொல்லக் கூடியவர்களுக்கு தொழில்களைத்தொடங்கும்போதுமுன்னுரிமைத் தரவேண்டும். ஆனால் இன்றைக்கு இருக்கின்ற ரெஸ்டிரிக்ஷன் காரணமாக சாதாரண மக்கள் தொழில் தொடங்க வாய்ப்பு

1979 ஏப்ரல் 23] [திரு. ரா. மார்க்கபந்து]

இல்லாமல் இருக்கிறது. நீங்கள் போடுகின்ற ரெஸ்டிரிக்ஷன்களை ஏற்று, தொழில்களைத் தொடங்கும் வாய்ப்புள்ளவர்களாக சாதாரண மக்கள் இருக்க மாட்டார்கள். வசதி படைத்தவர்களால்தான் அது முடியும். அல்லது ஏற்கெனவே தொழில் நடத்துகிறவர்களாக அவர்கள் இருக்கலாம். அப்படிப்பட்டவர்களுக்குத்தான் தொழில் உரிமை தரப்படும் என்று சொன்னால் சாதாரண மக்களுக்கு நிச்சயமாக கொடுக்க முடியாது. ஆகையால் உங்களுடைய தொழில் முறையிலே கடைப்பிடிக்கின்ற கட்டுப்பாடுகளை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. விஜயராகவன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தொழில் துறை மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கின்ற ஜனதாக் கட்சியினுடைய சார்பில் ஒரு சில கருத்துக்களை எடுத்துவைக்கலாம் என்று கருதுகிறேன். இன்றைக்கு இந்த மாநிலத்தின் பல இடங்களில் தொழில் மையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், மாவட்டங்களிலே அவ்வாறு அமைக்கப்பட்டிருக்கக்கூடிய தொழில் மையங்கள் சிறப்பாக பணியாற்றுகின்றனவா என்று பார்த்தால் நிச்சயமாக நாம் மகிழ்ச்சி கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையில் அந்தத் தொழில் மையங்கள் தன்னுடைய பணியை ஆற்றவில்லை என்கிற நிலைமையைத்தான் நான் எடுத்துரைக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய குமரி மாவட்டத்தில் ஒரு தொழில் மையம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழில் மையத்தை ஏற்படுத்துகின்ற நேரத்திலே ஒரு நல்ல நிலை உருவாகும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் ஒட்டுமொத்தமாக நான் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம், இந்த அசிஸ்டெண்ட் டைரக்டர்ஸ் ஆஃப் இன்டஸ்ட்ரீஸ் அண்டு காமர்ஸ் என்பதை தொழில் மையம் என்று பெயரை மாற்றி வைத்துக்கொண்டிருக்கிறார்களே அல்லாமல் மிகவும் பெருமைப்படத்தக்க அளவில், வரவேற்கத் தக்க அளவில் மிகப் பெரிய மாறுதல்களை அந்தத் தொழில் மையங்கள் செய்து விடவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்தத் தொழில் மையங்களில் இருக்கின்ற அதிகாரிகள் தங்களுடைய காலத்தைக் கடத்திவிட்டுச் சென்றுவிட வேண்டும் என்ற அளவில்தான் இருந்து கொண்டிருக்கிறார்கள். முனைப்புடன் ஈடுபட்டு, அந்த மாவட்டத்திலே இருக்கின்ற மூலப் பொருட்களைக் கணக்கில் எடுத்து, எந்தெந்தத் தொழில்களைத் தொடங்க முடியும், எந்தெந்த தொழிலுக்கு வாய்ப்பு, வசதிகள்

அதிகம் என்பதை ஆராய்ந்து, அங்கே தொழில் தொடங்க வருபவர்களுக்கு பயன்தரத் தக்க கருத்துக்களை எடுத்துச் சொல்லவேண்டிய நிலை இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, அங்கே கடன் உதவி செய்வதற்கென்று ஒரு டெபுட்டி டைரக்டர் போட்டிருக்கிறார்கள். அவர் வங்கியில் இருந்து வந்திருக்கிறார் என்று சொல்கிறார்கள். அந்த டெபுட்டி டைரக்டரைப் பார்க்கவேண்டும் என்றால் மிகச் சிரமமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஏனென்றால் வாரத்தில் ஒரு நாள் தான் அவரைப் பார்க்க முடியும். அதுவும் திங்கட்கிழமை மட்டும் ஒரு சில மணித்துளிகள் நேரம்தான் அவர் அங்கே இருப்பார். மற்ற நேரங்களில் அவர் அங்கே இருப்பது இல்லை என்று புகார் கூறப்படுகிறது, தொழில்களைத் தொடங்க வேண்டும் என்று கடன் உதவிக்காகச் செல்பவர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு எப்படி முடியும்? தினந்தோறும் வரவேண்டியவர் வாரத்தில் ஒரு நாள் மட்டும் இருந்தால் தொழிலைத் தொடங்கவேண்டும் என்று வருபவர்களின் ஆர்வம் என்னவாகும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படி ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் இன்றைக்கு அதனுடைய செயல்திறன் சிறப்பாக இல்லை என்றுதான் சொல்ல முடியும்.

அடுத்துக் குமரி மாவட்டத்தைப் பொறுத்த அளவில் ஒரு சில கருத்துக்களை மட்டும் சொல்லிவிட்டு விடைபெறலாம் என்று கருதுகிறேன். குமரி மாவட்டம் தொழில் துறையிலே மிகவும் பின்தங்கிய மாவட்டம். அங்கே மிகப்பெரிய தொழில்கள் எதுவும் கிடையாது. அதுமட்டுமல்ல படித்தவர்கள் அதிகமாக உள்ள மாவட்டம். வேலை வாய்ப்பு அலுவலகத்திற்குச் சென்றால், அவர்களால் கூட வேலை அளிக்க முடியாத அளவிற்கு அங்கே அதிகமானபேர் பதிவு செய்திருப்பதைக் காண முடியும். அந்த அளவிற்கு அங்கே படித்தவர்கள் அதிகமாக வேலைவாய்ப்புக்கள் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே அங்கே உடனடியாகத் தொழில்களைத் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்பது மிக முக்கியமானது என்பது மட்டுமல்ல, உடனடித்தேவை. பல்வேறு மூலப்பொருட்கள் அங்கே கிடைத்தாலும் கூட அவற்றை வைத்து அங்கே தொழில்களைத் தொடங்குவதற்கு அரசும் முயற்சியில் ஈடுபடவில்லை, அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபடுபவர்களை, அதாவது தனியார்களை ஊக்குவிக்கின்ற திட்டங்களும் அரசிடம் இல்லை என்பதை எண்ணிப் பார்க்கும்போது உண்மையிலேயே வேதனை அடைகின்றேன்.

1979 ஏப்ரல் 23] [திரு. பொ. விஜயராகவன்]

அடுத்து அங்கே 150-க்கு மேற்பட்ட முந்திரித்தொழிற்சாலைகள் இருக்கின்றன. முந்திரிக்கொட்டைகளை எடுத்து பக்குவப்படுத்தி அவற்றை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கின்ற தொழில் அங்கே நடைபெற்று வருகின்றது. அந்தத் தொழிற்சாலைகளிலே பணியாற்றுகின்றவர்களில் பெரும்பாலோர் இளம் பெண்களும், இளைஞர்களும் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஆனால் அவர்களுக்கெல்லாம் அங்கே தொடர்ந்து வேலை கொடுக்க முடியாத நிலை இருக்கின்றது. ஏனென்றால் தொழிலுக்கு வேண்டிய கச்சா முந்திரி சரிவர கிடைப்பதில்லை. பல நாட்களில் அவர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் என்று கூட வேலை இல்லாமல் போய்விடுகிறது. இதற்கெல்லாம் காரணம் அந்த தொழிற்சாலைகளுக்கு வேண்டிய கச்சா முந்திரிக் கொட்டை கிடைக்காமல் இருப்பதுதான். ஆகவே அங்கே இருக்கின்ற 150-க்கு மேற்பட்ட தொழிற்சாலைகளுக்கு வேண்டிய கச்சா முந்திரிக் கொட்டையை தருவித்துக்கொடுக்கின்ற பணியில் தமிழக அரசு தொடர்ந்து ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தொழிற்சாலைகளில் பணி புரிகின்ற 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு போதிய சம்பளம் நிர்ணயிக்கப்படாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் சரியாக வேலை கூட இல்லை என்ற நிலையும் ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே இந்த நிலைமைகளை எல்லாம் உணர்ந்து உடனடியாக அந்தத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய கச்சா முந்திரியை அவர்களுக்குத் தருவித்துக் கொடுப்பதில் இந்த அரசு ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

இதற்கு முன்னால் மன்றத்தில் தொழில் மானியக் கோரிக்கையின்மீது பேசுகின்ற போது குறிப்பிட்டேன். மத்திய அரசுக்குச் சொந்தமான இந்தியன் ரேர் எர்த் என்ற நிறுவனம் இயங்கிக் கொண்டு வருகின்ற நேரத்தில், அதில் எடுக்கப்படுகின்ற மூலப் பொருள்கள் வெளிநாடுகளுக்கும், மற்ற மாநிலங்களுக்கும் அனுப்பப் பட்டு, அவைகள் எல்லாம் சரியாகப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. இந்த மாநில அரசு, மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து, மத்திய அரசை வற்புறுத்தி இதன் மூலப்பொருட்களைக் கொண்டு பல்வேறு பொருட்களை அதாவது டிடானியம் குளோரைடு, டிடானியம் ஆக்சைடு, டிடானியம் மெடல் போன்றவைகளைத் தயாரிப்பதற்கு ஒரு மிகப்பெரிய தொழிற்சாலையை இந்த மாவட்டத்திலே கொண்டு வருவதற்கான ஒரு நிலையை உருவாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கயிறு சம்பந்தமான தொழிலைப் பொறுத்தவரையில், இந்த மாவட்டத்தில் சாதாரண குடிசைத் தொழிலாக இருக்கிறது. இந்தத் தொழிலுக்கு இன்றைக்கு ஆபத்து வரக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நெல்லை மாவட்டத்திலிருந்து கன்னியாகுமரிக்கு தேங்காய் மட்டை நார் கொண்டு போகக் கூடாது என்ற உத்தரவு போடப்பட்டு, இன்றைக்கு உயர்நீதி மன்றத்தில் வழக்காக இருக்கின்றது. அந்த வழக்கிற்குள் நான் போக விரும்பவில்லை. இந்தத் தொழிலைப் பொறுத்தவரையில் இந்த உத்தரவை ரத்து செய்யவேண்டும். கன்னியாகுமரிக்கு அனுப்பினால், கேரளாவிற்குச் சென்றுவிடும் என்ற காரணத்தைச் சொல்லி, இந்த உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மை நிலை கேரளாவிலிருந்து கன்னியாகுமரிக்கு மட்டைநார் கொண்டு வரப்படுகிறது. அதனால் தேங்காய் நார் மட்டையின் விலை இன்றைக்கு உயர்ந்திருக்கிறது. கன்னியாகுமரிக்கு அனுப்பினால், கேராளவிற்குப் போய்விடும் என்று காரணம் காட்டுவது சப்பைக் கட்டுவதுபோல் ஆகும். ஆகவே, கன்னியாகுமரிக்குச் செல்லக்கூடாது என்ற உத்தரவை ரத்து செய்யவேண்டும்.

அடுத்து, கோகநட் ஷெல்லிருந்து ஒருவித கார்பன் தயாரிக்கபடும் முறை இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த தேங்காய் ஓட்டிலிருந்து கார்பன் தயாரிப்பதற்கு வெளிநாட்டிலிருந்து வேண்டிய 'டெக்னிகல் நோ ஹௌ'களைப் பெற்று, அதற்கான ஒரு தொழிற்சாலையை அமைக்கும் சூழ்நிலையை இந்த அரசு ஏற்படுத்தித் தர வேண்டும்.

ரப்பரைப் பற்றி இங்கே பலர் எடுத்துச் சொன்னார்கள். ரப்பரைப் பொறுத்த வரையில் கன்னியாகுமரி மாவட்டத்தில், தண்ணீர் வசதி இருக்கின்றது. இந்தியாவிலேயே மிகுந்த, உலகத்திலேயே சிறந்த அளவுக்கு அங்கே ரப்பர் கிடைக்கின்றது. ஆகவே, மிகப் பெரிய அளவில் 2,000, 3,000 பேர்கள் வேலைசெய்யக்கூடிய அளவுக்கு ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி, நம்முடைய நாட்டிற்குத் தேவையான ரப்பரை உற்பத்தி செய்கின்ற ஒரு தொழிற்சாலையை அங்கே உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, பார்டிகிள் போர்டு, கார்டு போர்டு போல, இந்தக் கயிற்றிலிருந்து கழிக்கப்படும் கழிவு பொருள்களிலிருந்து (கோகனட்பித்) பார்டிகிள் போர்டு தயாரிக்கும் தொழிற்சாலைத் திட்டத்தை அரசே. டான்சி போன்ற நிறுவனம் நடத்துவது போல ஒரு நிறுவனத்தை நிறுவி செயல்படுத்த வேண்டும் என்று ஒரு ஆலோசனையாக நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

1979 ஏப்ரல் 23] [திரு. பொ. விஜயராகவன்]

மார்த்தாண்டத்திலே, கல்குளம், விளவங்கோடு கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைடியில் பழ ரசம், பழ ஜாம் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலை நடைபெற்று வந்தது. அன்றைக்கு அங்கே ஒரு தொழிற் சங்கம் ஆரம்பித்தார்கள் என்ற காரணத்தைக் காட்டி, அந்த தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது. உடனடியாக அதைச் செயலுக்குக் கொண்டுவந்து, அதை விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு முன்னால் கூட சோவியத் யூனியனிலிருந்து அந்தப் பகுதியிலுள்ள ஒரு தனியார் நிறுவனத்திற்கு இங்கிருந்து ஏற்றுமதி செய்து அனுப்புவதற்கு ஆர்டர் கொடுத்திருந்ததாக அறிகிறேன். அங்கு தயாரிக்கப்படும் பழ ரசம், பதப்படுத்தப் பட்ட பழங்கள் இவைகளை ஏற்றுமதி செய்வதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. இதன் காரணமாக ஏராளமான அந்நிய செலாவணியும் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் கிடைக்கிறது. அத்துடன் ஓரளவுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்கின்ற அளவுக்கு இதை அரசாங்கத்தின் ஆலோசனைக்காக மட்டுமல்ல. உடனடியாக மூடப்பட்டு கிடக்கின்ற அந்த தொழிற்சாலையை திறந்து நல்ல முறையில் அரசு நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பனைப்பட பொருட்களைப் பொறுத்தஅளவில், அந்த மாவட்டத்தில் அதிகமாக கிடைக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பனையேற்றுத் தொழிலாளர்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சர்க்கரையின் விலை குறைந்து போனதின் காரணமாக கருப்புக்கட்டிக்கு அதிகமான தேவையில்லாமல் இருக்கிறது. கரும்புக்கட்டியி லிருந்தும், பனஞ்சாறிலிருந்தும், பனம் சர்க்கரை, பாம்கோலா போன்றவைகள் தயாரிக்கப்படுகின்றன, இதன் மூலமாக ஓரளவுக்கு பனைப்படு தொழிலாளர்களுக்கு கூலி கிடைக்கக்கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. ஆகவே இவ்விதம் தயாரிக்கப் படுகிற பனம்சர்க்கரை, பாம்கோலா போன்ற பொருட்களுக்கும், பனை ஓலையிலிருந்து செய்யப்படுகிற கூடைகள், பலவேறு அலங்காரப் பொருட்கள் இவைகளுக்கு எல்லாம் நல்ல விற்பனை வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுத்தால், பனையேற்றுத் தொழிலாளர் களுடைய குடும்பங்களிலுள்ள பெண்டிர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவும் வழிஏற்படும். ஆகவே இதைசெய்ய இந்த அரசு முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாகர்கோவில் தொழிற்பேட்டையில் அங்கே தொழில் நடத்து வதற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிலத்தை யார் யார் தொழில் நடத்த முன்வருகின்றார்களோ அவர்களுக்கு பங்கிட்டு கொடுக்க வேண்டும். இதற்காக விண்ணப்பம் போட்ட விண்ணப்பதாரர்கள்

[திரு. பொ. விஜயராகவன்] [1979 ஏப்ரல் 23

பலபேர்கள் இருந்தும், அரசு சிவில் சப்ளை கார்ப்பரேஷனுக்கு தொழிற்பேட்டைக்கு என்றிருந்த இடத்தை கிட்டங்கி கட்டுவதற்கு கொடுத்திருக்கிறது, இதை நான் மிகவும் வன்மையாக கண்டிக்க கடமைப்பட்டிருக்கிறேன். தொழிற்பேட்டையில் சிவில் சப்ளை கார்ப்பரேஷனுக்கு தேவைப்படும் கிட்டங்கி கட்டுவதற்கு இடம் கொடுப்பது என்பது, எவ்வளவோ கடன் பெற்று தங்கள் தொழிலை நடத்தவேண்டும் என்று இடம் கேட்டிருப்பவர்களுக்கு நிலம் கொடுக்க முடியாத நிலைமையை உருவாக்குகிறது. இதன் காரணமாக வருங்காலத்தில் தொழில்கள் அங்கு வளருவதற்கு இடமில்லாமல் போய்விடும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் த்ரீ பேஸ் (Three pages) மின்சார வசதி போன்றவை தொழிற்பேட்டை இடங்களில் எளிதாக வழங்கப்டும். அத்துடன் ஒரு தொழில் தொடங்கவேண்டும் என்றால், இதற்கென்று வாங்கவேண்டிய சர்டிபிகேட் தனியாக தொழிற்பேட்டையில் இடம் கிடைத்தால் வாங்க வேண்டியதில்லை.

இன்னொன்றையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்றால், 'நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட்' என்ற முறையில் ஒரு ஃபீஸிபிலிட்டி சர்டிபிகேட் வாங்கவேண்டும். அப்போதுதான் மின்சாரம் கொடுக்கப்படும் என்று இருக்கிறது. தொழிற்பேட்டையில் இல்லாமல் வேறு தனி இடங்களில் தொழில்கள் ஆரம்பிக்கவேண்டும் என்றால் இந்த சர்டிபிகேட் வாங்குவது மிகவும் கஷ்டம். அதோடு கடன்களையும் சீக்கிரமாக பெற முடியாது. ஆகவே இந்த பீஸிபிலிட்டி சர்டிபிகேட் கொடுக்கின்ற விஷயத்தில் இருக்கின்ற கட்டுப்பாடுகளை அரசு ஆராய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை.)

மேலும், 25 ஹார்ஸ் பவர்-க்கு உட்பட்ட மின்சாரம் வழங்குவது என்றால் உரிமங்கள் அதாவது லைசன்ஸ் முறை தேவையில்லை என்றும் அதற்கு மேல் வேண்டுமென்றால் லைசன்ஸ் முறைகள் தேவையென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி அரசாங்கம் தீவிரமாக பரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆக, இந்த மாநிலத்தில் தொழில் துறையை வளர்க்கவேண்டுமென்றால் அதற்காக கருத்தரங்குகள் நடத்துகிறோம். ஒரு மாதத்திற்கு முன்னால் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு தொழில் கருத்தரங்கை நடத்தியிருக்கிறார்கள். பொதுவாக கருத்தரங்கில் எங்களைப்போன்ற பொதுமக்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளக்கூடிய வகையில் நடத்தவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் இங்கு சட்டமன்ற வேலைகளில் ஈடுபட்டிருக்கும் இந்த நேரத்தில் அங்கு தொழில் கருத்தரங்கு நடத்துவது சரியாக இருக்குமா என்பதையும் ஆலோசிக்கவேண்டும். அங்குள்ள

1979 ஏப்ரல் 23] [திரு. பொ. விஜயராகவன்]

தொழில் நடத்துகின்றவர்கள் அத்தனைபேருமாவது இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசியிருக்கிறார்களா என்றால் தொழில் நடத்துகின்றவர்கள் அத்தனைபேரையும் அழைக்க வில்லை என்று தெரிகிறது. கருத்தரங்கில் ஒழுங்காக எல்லோரை யும் அழைத்து குறைபாடுகளை கேட்டறிந்து, பிரச்னைகளை எல்லாம் அறிந்து கொள்வதற்கும், மேலும் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்த மாவட்டங்களில் இருக்கின்ற நேரத்தில் இது போன்ற கருத்தரங்குகளை நடத்தவேண்டும். அதற்கு மாறான நிலையில் இந்த கருத்தரங்கு நடத்தப்பட்டிருக்கிறது. இது மிகவும் கண்டிக்கத்தக்கது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மேலும் தொழில் துறை சம்பந்தமான பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லவேண்டுமென்றாலும், அதற் குரிய நேரமில்லாத காரணத்தாலும், இதுவரை நேரம் அளித்த தற்கு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

[பிற்பகல் 12-30]

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வணக்கத்திற்குரிய முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த மானியக் கோரிக்கை எண் 24—தொழில்கள், மானியக் கோரிக்கை எண் 51—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு குறித்து மக்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை ஆளும் கட்சியின் சார்பிலே, இப்போது பேரவையில் எடுத்துச் சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே தொழில்கள் வளர வேண்டும், தொழிலாளர்கள் வாழ வேண்டும் என்பதுதான் இன்றையதினம் வணக்கத்திற் குரிய புரட்சித் தலைவர் அவர்களின் இதய கீதம். அந்த அடிப் படையிலேதான் இந்தத் தொழிற் கொள்கை வகுக்கப்பட் டிருக்கின்றது என்பதை நான் மிகத் தெளிவாக சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசுகின்றபோது, தொழிற் கொள்கை கடுமையான வகையிலே இருக்கின்ற தென்றும், இங்கே இருக்கக்கூடிய அரசு அலுவலர்கள் கடுமை யாக நடந்து கொள்கிறார்கள் என்றும் பெருவாரியான உறுப்பினர்கள் சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வதெல்லாம், உண்மையிலேயே இன்றைக்கு இருக்கக்கூடிய அரசு அலுவலர்கள், அதிலும் தொழில் துறையைப் பொறுத்த வரையில் மிகவும் கண்ணியமாகவும், அக்கறையாகவும் இருக் கிறார்கள் என்பதை என்னால் எடுத்துச்சொல்ல முடியும். ஆனாலும்கூட, இமையும், விழியும் ஒன்றாக இருக்கக்கூடியதாக இருந்தாலும்கூட, கண் இமை கண்ணை எப்படியெல்லாம்,

அதிலே பூ விழுந்தாலும், பார்வை இருந்தாலும், அந்தக் கண்ணைப் பாதுகாக்கின்ற இமைகள் இருப்பதுபோல், எந்த கருத்துக்கள் எதிர்க் கட்சியிலே இருந்து வந்தாலும்கூட, அந்தக் கருத்துக்களிலே இருக்கக்கூடிய உணர்வுகளைப் புரிந்து, பாதுகாக்கக்கூடிய அளவிலே இந்த அரசும், இந்த அரசு அலுவலர்களும் பணியாற்றுகின்றார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். 'சாலை ஓரத்திலே வேலை அற்றதுகள், வேலையற்றுச் சுற்றித் திரிந்தால், நெஞ்சிலே விபரீத எண்ணங்கள் பிறக்கும்' என்று. அதையே தான் நான் இங்கே விடையாக வைக்க விழைகின்றேன். இன்றையதினம் இந்தத் தொழிற் கொள்கையை வகுத்து, இந்தப் பிரச்னையிலே ஒரு தீர்வு கண்டதை யாரும் மறந்துவிட முடியாது. ஏற்கனவே இருந்த பல பல தொழில் பிரச்னைகள் எப்படி இருந்தது என்று சொன்னால், தொழிற் சட்டங்கள் எப்படி இருந்தது என்று சொன்னால், பூ வைத்துக் கொள்வதற்கு அனுமதி கொடுத்துவிட்டு, மொட்டை அடிப்பது என்று சொல்வார்கள், அதைப்போல், தொழிற் கல்வி பெறுவதற்கும், தொழிற்சாலைகள் திறந்து விட்டோம் என்றெல்லாம் சொல்லி விட்டு, அதற்குவேண்டிய சட்டதிட்டங்களை மாற்றியமைக்காமல் இருந்துவிட்டார்கள் என்பதை யாரும் மறந்து விட முடியாது. அந்த அளவில் இருந்து பல சட்ட திட்டங்களை திருத்தம் செய்து, மிக நல்ல முறையில் இந்தத் தொழிற் கொள்கையை இந்த அரசு அமைத்திருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, இந்த ஆட்சியின் கொள்கை உழைப்பவர்களை உயர்த்துவது என்பதுதான். இல்லாதவர்களைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை. இருப்பவர்களை, உழைக்கின்றவர்களை உயர்த்தவேண்டும் என்பதற்காக விரிவான, தேவையான ஒரு தொழிற் கொள்கை திட்டத்தை இந்த ஆட்சி தெளிவாக அறிவித்திருக்கின்றது என்பதை நான் எடுத்துக்கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. இன்றையதினம் வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு, பலபல நல்ல பல திட்டங்களை கொண்டு வந்திருக்கிறார்கள். அண்மையிலே, சேலம் மாவட்டத்தில், ஓமலூரிலே, தாத்தையங்கார்பேட்டையிலே மாக்னசைட் குத்தகை ஒரு தனிப்பட்ட நிறுவனத்திற்கு விடப்பட்டிருந்த குத்தகை காலம் முடிந்தவுடன், மேற்கொண்டு தனியாருக்கு குத்தகை விடாமல், அரசே அதை ஏற்றுக்கொண்டு

1979 ஏப்ரல் 23] [டாக்டர் கே. சமரசம்]

அதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. இதிலிருந்து அரசாங்கத்தின் தொழிற் கொள்கை என்ன என்பதைத் தெளிவாக உணர்ந்துகொள்ளலாம் என்பதையும் நான் எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. தர்மபுரி மாவட்டத்தில் சல்பைடு வகை கனி வகைகள் எங்கெங்கிருக்கின்றன என்பதைக் கண்டறிந்து, அதை எப்படி தோண்டி எடுப்பது என்பதற்கான செயல் திட்டங்களை எல்லாம் இந்த அரசு அறிவித்திருக்கின்றது என்பதையும் நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. இன்றையதினம் பட்டுத் தொழில் உற்பத்தி தமிழகத்திலே எவ்வாறு இருக்கிறது என்பதை இங்கே மிக அழகாக படம் பிடித்துக் காட்டப்பட்டிருக்கிறது. அதை இந்த அறிக்கையிலே தந்திருக்கிறார்கள். இந்த அறிக்கையைக் காணும்போது, தமிழகத்திலே இன்றைய தினம், தர்மபுரி மாவட்டத்தில்தான் முழுமையாக பட்டுத் தொழில் வளர்ப்பிற் காக, தேவையான நிலைமைகள் இருக்கின்றன என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். ஆகவே, இப்படிப் பட்ட நிலையில் அதற்குவேண்டிய டைரக்டர் ஆப் செரிகல்சர் இயக்கத்தை இந்த தர்மபுரி மாவட்டத்தில் அமைக்க வேண்டும் என்ற நமது அரசின் கொள்கை சரியாகும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் மத்திய அரசு அனுமதியுடன், உதவியுடன் பலப்பல திட்டங்கள் நம்முடைய அரசு மேற்கொள்ள வேண்டி யிருக்கிறது. ஐந்து கோடி ரூபாய் முதலீட்டில் உருக்காலைத் திட்டத்தை நிறைவேற்ற உடனடியாக மத்திய அரசிடமிருந்து அங்கீகாரம் பெற தமிழக அரசு முயற்சித்து வருகிறது. ஏராள மான பல புதுப்புதுத் திட்டங்களை உருவாக்க இந்த அரசு பலப் பலவகையில் மத்திய அரசை அணுகியிருக்கிறது.

அந்த நிலையில் நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில் சந்தனத் தொழில் மிகவும் தேவை. சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்தியாக வேண்டும். சந்தனக் கட்டை என்று சொல்லும்போது சிலருக்கு அது சிறியதாகத் தெரியலாம். சிலருக்கு விறகாகத் தெரியலாம். சிலருக்குக் கட்டையாகத் தெரியலாம். ஆனால் அது பல கணக்கான ரூபாயைப் பெற்றுத்தருகிற சந்தன மரம் என்பதை மறந்து விடுவதற்கில்லை. கிராமத்தில் இருப்பவர்கள் அதை

[டாக்டர் கே. சமரசம்] [1979 ஏப்ரல் 23

விறகு என்று எண்ணிக் கொண்டு ஐந்து ரூபாய்க்கும் பத்து ரூபாய்க்கும் கொடுத்துவிடுகிறார்கள். இதனால் சிலர் பல்லாயிரம் ரூபாய் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதை அடிப்படையில் ஒழிக்க சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையை அரசு தேசீயமயமாக்க வேண்டும். இதனால் அரசு பல கோடி ரூபாய் வருவாய் பெற வழிவகை இருக்கிறது.

அதே போன்று இன்று கறுப்புக் கல்லின் மூலம் தமிழக அரசுக்கு பல கோடி ரூபாய் கிடைக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு இது முழுவதும் தனியார் கையில் இருந்தது. தமிழக அரசு இன்று இதனை ஏற்று ஓராண்டுக் காலத்தில் ஒரு கோடி ரூபாய்க்குமேல் வருவாய் பெற்றிருக்கிறது. தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலும் இருக்கக்கூடிய கறுப்புக் கல்லை எடுத்து வெளியே அனுப்பும் பொறுப்பை அரசே ஏற்று, தேசியமயமாக்கவேண்டும். அதிலே சட்டதிட்டங்கள் குறுக்கிட்டாலும் அதிலே தேவையான மாற்றங்களைச் செய்வது இன்றியமையாத கடமையாகும். அப்போதுதான் நாட்டிலே இருக்கும் பொதுச் சொத்துக்கள் தனியார் கைக்குச் செல்லாமல் இந்த நாட்டுக்குப் பயன்படக்கூடிய வாய்ப்பு ஏற்படும். ஆகவே, இதுபோன்ற சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையையும், கருப்புக்கல் திட்டத்தை அரசே எடுத்து மேற்கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாகவே, தமிழகத்தில் இன்றையதினம் கொண்டு வந்திருக்கக்கூடிய மாவட்டத் தொழில் மையங்கள்தான் பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையை முழுமையாக அமலாக்கக்கூடிய திட்டமாகும். 'சாலையோரத்திலே உள்ள வேலையற்றதுகள் கொதித்தெழுவார்களேயானால் விபரீதம் ஏற்படும்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறினார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் தான், சாலையோரத்தில் வேலையற்றவர்கள் எவ்வளவு பேர்கள் இருப்பார்கள், அவர்கள் என்ன தொழிலைச் செய்ய முடியும் என்பதையெல்லாம் மிகத் தெளிவாக உணர்ந்த பிறகுதான் மாவட்டத் தொழில் மையங்கள் தேவை என்பதை உணர்ந்து, சிறு தொழில்கள் மூலந்தான் எல்லோரும் வேலை வாய்ப்புப் பெற முடியும் என்பதை உணர்ந்து அரசு சிறு தொழில்களை ஊக்குவிக்க மாவட்டத் தொழில் மையங்களை அமைக்க முன் வந்தது. மாவட்டங்களில் பரவலாக சிறு சிறு தொழில்களைத் துவங்குவதன் மூலம் போக்குவரத்து பெருகுகிறது, கிராமம் நகரம் என்ற நிலையில் பெரிய மாறுதல் ஏற்பட்டு பொருளாதாரம் மேம்பாடு அடைகிறது, வாங்குவோர் எண்ணிக்கை பெருகுகிறது

1979 ஏப்ரல் 23] [டாக்டர் கே. சமரசம்]

வசதியுள்ளவர்கள். வசதியற்றவர்கள் என்ற நிலை மாறுபடுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் கிராமம் எங்கே என்று சொன்னால் அது இல்லையென்று சொல்லத் தக்க நிலைமை நிச்சயமாக வரும். இந்தியாவின் ஜீவநாடி கிராமங்களில்தான் இருக்கிறது என்பது காந்திஜியின் கருத்து. தமிழகத்தைப் பொறுத்தவரை கிராமம், நகரம் என்ற நிலை இருப்பது நீடிக்கக்கூடாது, சிறு நகரம். பெருநகரம் என்ற அளவிலே கிராமங்கள் வளரவேண்டு மென்று புரட்சித் தலைவர் அவர்கள் தேர்தல் காலத்திலே சொன்னார்கள். அதை முழுமையாக நிறைவேற்றப்படும் திட்டந் தான் மாவட்டத் தொழில் மையங்கள். அது சீராக நிறைவேற்றப் பட்டால் கிராமங்கள் இல்லையென்ற நிலை வந்தே தீரும். அந்த அளவுக்குக் கிராமங்கள் எல்லாம் நல்ல முறையில் வளர்ந்து பேரூராட்சிகளாக, சிறு நகரம், பெரு நகரங்களாக மாறக்கூடிய வழிவகைகளை உண்டாக்கக்கூடிய மாவட்டத் தொழில் மையம் மிக மிகத் தேவையானது என்று மக்கள் சொல்லுகிறார்கள். அந்த வகையில் அப்படிப்பட்ட மிக நல்ல திட்டத்தை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள்.

தொழில் கொள்கை என்று சொல்லுகிறபோது தீப்பெட்டித் தொழிலைப் பொறுத்து மத்திய அரசு கொள்கை தொழிலாளர் களை வாழ வைக்கவில்லை.

[பிற்பகல் 12-40]

ஆனால், மாநில அரசின் கொள்கை தொழிலாளர்களை வாழ வைக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டுகள் ஏராளமாக உண்டு. தொழிலாளர்களை எப்படி வாழவைக்க வேண்டுமென்ற சட்ட திட்டத்தை மிகத் தெளிவாக ஆராய்ந்து தெளிவாக தெரிந்துதான் இதுபோன்ற திட்டங்களை இந்த அரசு கொண்டுவந்திருக்கிறது. ஏராளமான அளவிற்குப் புதிய புதிய, நல்ல தேவையான உருப் படியான, நிறைவேற்றக்கூடிய திட்டங்கள் என்ற முறையிலே புதிய சிமின்ட் ஆலை அமைப்பது, சர்க்கரை ஆலை அமைப்பது, நலிந்த பல தொழில்களை எடுத்துக் கொள்வது, டான்ஸி நிறுவனத்தின் மூலமாகப் பல தொழில்களை உருவாக்க முயற்சிப்பது—இவைகள் எல்லாம் மிக மிகத் தேவையான திட்டங்களாகும்.

அது மட்டும் அல்ல, மின்சாரத் துறை என்று சொன்னால் தொழில் வளர்ச்சிக்கு தேவையானது மின்சாரம் என்ற முறையிலே திட்டங்களைப் போட்டு இந்தியத் துணைத் கண்டத்திலே மிக அதிகமான அளவிற்கு தமிழகத்திலே இந்த ஆண்டு தான் அதிகமான மின் உற்பத்தி ஏற்பட்டிருப்பதைப்

[டாக்டர் கே. சமரசம்] [1979 ஏப்ரல் 23

பார்க்கிறோம். தமிழகத்திலே மிக அதிகமான உற்பத்தி செய்ததன் காரணமாக மாவட்டத் தொழில் மையங்கள் மூலமாக தொழில் வளர்ச்சி ஏற்பட்டு நாட்டிலே தொழில்கள் முன்னேறக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த முறையிலே இந்த அரசு நல்ல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது. தர்மபுரி மாவட்டம் என்று சொல்கிறபோது தர்மபுரி மாவட்டம் என்று சொன்னாலே அங்கே இல்லாதது எதுவும் இல்லை என்பது தான். தர்மம்புரியக்கூடிய மாவட்ட மாகத்தான் தர்மபுரி மாவட்டம் இருககிறது. அங்கே இல்லாதது இல்லை, எல்லாம் இருக்கும். இல்லாதது போல் காட்சியளிக்கும். கருப்புக்கல் அங்கே இருக்கிறது, அன்னியசெலாவணி ஈட்டித்தரு கிறது. சந்தன மரங்கள் இருக்கின்றன, அங்கே சந்தனம் அன்னியச் செலாவணியைப் பெற்றுத் தருகிறது. அங்கே திராட்சை கிடைக்கிறது, அங்கே அதற்கு ஒரு பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்தும் வாய்ப்பு இருக்கிறது. மூங்கில் இருக்கிறது. அங்கே கரும்பு இருக்கிறது, கரும்புச் சக்கை இருக்கிறது. இவைகளைப் பெற்று ஒரு தொழிற்சாலையை தொடங்கும் வாய்ப்பு இருக்கிறது. தர்மபுரி மாவட்டத்தில் இல்லாதது ஒன்று வேறு எந்த மாவட்டத் திலேயும் இல்லை என்று சொல்லக்கூடிய அளவிற்குத்தான் இருக் கிறது. ஆனால் அதிகமாக இல்லை, அளவிற்குத் தான் இருக்கிறதே தவிர உச்சவரம்பு எதுவும் இல்லாத நிலைமை இல்லை, தேவையான நிலைமைக்குத் தக்கவாறு இருக்கிறது. அங்கே ஒரு தொழிற்சாலை இல்லாத காரணத்தினால்தான் அந்த மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டமாக இருக்கிறதே தவிர இயற்கைச் செல்வங்களை அத்தனையையும் கொண்டிருக்கிற மாவட்டமாக அது இருக்கிறது. 32 ஆண்டுக்கால வரலாற்றைப் பார்க்கிறபோது தர்மபுரி மாவட்டம் இந்த ஆண்டுதான் உண்மையான முழுமையான தேவையான வாய்ப்பைப் பெற் றிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் சரி, இன்றைய தினம் தமிழக அமைச்சரவை மிகத் தெளிவாக ஆராய்ந்து அறிந்து பார்த்து அது பின்தங்கிய பகுதி என்று பார்த்து அதற்கு ஏன் பின்தங்கிய பகுதி என்ற பெயர் வந்தது, ஏன் அது தகுதியற் றிருக்கிறது என்பதையெல்லாம் பார்த்து எல்லாத் தகுதியும் இருக்கிறது அதற்கு என்பதை உணர்ந்து நல்ல முறையிலே எல்லாத் துறைகளிலேயும் கல்வித் துறையானாலும் சரி, விவசாயத் துறையானாலும் சரி, கூட்டுறவுத் துறையானாலும் சரி, மின் துறையானாலும் சரி, இன்ன பிற துறையாகயிருந் தாலும் சரி தேவையான நல்ல பல திட்டங்களைக் கொண்டு வந்திருப்பதற்காக நான் தர்மபுரி மாவட்டத்தின் மக்களின் சார்பாக பாராட்டுகிறேன். தர்மபுரி மாவட்டத்திற்கு அமைச்சர் இல்லையென்று சொன்னாலும், பேரவைச் செயலர் இல்லை யென்று சொன்னாலும், வாரியத் தலைவர் இல்லையென்று

சொன்னாலும் அத்தனைக்கும் நான் இருக்கிறேன் என்ற முறையிலே தர்மபுரி மாவட்டம் என்றாலே புரட்சித் தலைவர், புரட்சித் தலைவர் என்றாலே தர்மம் புரி என்று தான் பொருள். அந்த முறையிலே தர்மபுரி மாவட்டத்தின் முழுமையான நலன்களுக்காக திட்டங்களை உருவாக்கிவருவதற்காக தர்மபுரி மாவட்டத்தின் மக்களின் சார்பாக நான் வரவேற்று, பாராட்டி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரவர்களே, தொழில், தொழில் வளர்ச்சி பற்றிய மானியங்களின் மீது, மாமன்ற உறுப்பினர்கள் அவரவர்களுக்குத் தேவையான, அவசியமான ஒரு தனி இலாபத்தைப் பெறுவதற்காக என்று இல்லாமல், ஒட்டு மொத்தமாக தமிழகம் முழுவதற்கும் என்ன என்ன நன்மைகள் வேண்டுமென்கிற நோக்கத்தோடு, இங்கே பல நல்ல கருத்துக்களை எடுத்து வைத்திருக்கின்றார்கள்.

தமிழக அரசு தொழிலை எப்படி அமைப்பது, வளர்ப்பது, காப்பது என்கிற நிலையில், இன்னொரு நோக்கம் எந்த வகையிலே அமைகிறது என்பதைத் தெளிவுபடுத்த வேண்டியது எனது முதற்கடமை என்று நான் கருதுகிறேன். தொழிலைப் பொறுத்த வகையில், வெவ்வேறு விதமான தொழிலாக நாம் அதைப் பிரித்துப் பார்க்க வேண்டும். கனரகத் தொழில்கள் என்கிற வகையில் ஒன்று பிரிக்கப்பட்டு, பிற்பட்ட கிராமப்புற தொழில் என்ற அளவிலே ஒரு பிரிவாகப் பிரிக்கப்பட்டு, இந்த இரண்டு பிரிவுகள் இப்பொழுது வேலை செய்து கொண்டிருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மக்கள் மத்தியிலே, தேர்தலிலே வாக்குறுதி கொடுத்தபோது, நாங்கள் சொன்ன கருத்துக்களிலே முக்கியமானவை, பெரிய தொழில்கள் வேண்டும், காப்பாற்றப்பட வேண்டும்; ஆனால், அதே நேரத்தில் கிராமப்புறத்திலே இருக்கிற ரூ. 2, ரூ. 3 கூட சம்பாதிக்க முடியாத நிலைமையிலே இருக்கிற ஏழை, உழைக்கும் வர்க்கத்திற்கு, முதலில் வாய்ப்பு கொடுத்தாக வேண்டும்.

வேலையில்லா திண்டாட்டத்தை நீக்க வேண்டுமென்கிற கருத்தை நாங்கள் வலியுறுத்திச் சொல்லி, மக்கள் நம்பிக்கை ஓட்டைப் பெற்று, இன்றையதினம் ஆட்சியிலே இருக்கின்றோம். ஒரு அரசினுடைய கொள்கை, இன்னொரு அரசு வகுத்து விட்டுப் போன கொள்கைக்கு மாறாக இருந்து தீர வேண்டுமென்கிற கட்டாயமும் இல்லை; அதைப் போலவே, அந்தக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டுமென்ற கட்டாயமும்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 ஏப்ரல் 23

யாராலும் உருவாக்க முடியாது என்பதை நான் குறிப்பிட விரும்புகின்றேன். ஆனால், முன்னாலே இருந்தவர்கள் தொடங்கி வைத்தவைகளை முடித்தாக வேண்டும். அதைப் போல், புதிதாக, யார், யாருக்கு வேலை வாய்ப்புகள் கொடுக்க வேண்டுமோ, அதைச் செய்வதற்குத் திட்டமிட்டு நிறைவேற்றியாக வேண்டும். இந்த மாமன்றத்தில் பல்வேறு நிலைமைகளில் வாய்ப்புகள் கிடைக்கும் போதெல்லாம் அதனை நாங்கள் சுட்டிக்காட்ட மறந்ததில்லை. ஆனால், அனுபவம் பெற்றவர்கள், தொழிலைப் பற்றி தெரிந்தவர்கள், தொழிலாளர்களைப்பற்றி தெரிந்தவர்கள், முழுமையான அடிபபடை காரணங்களை அவர்கள் சரிவரத் தெரிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பை இழந்துவிட்ட நிலையில்தான் அவர்கள் சில கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள் என்று கூட நான் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இந்த நாட்டில், வசதி படைத்தவர்கள் கோடிக்கணக்காக முதலீடு செய்து, ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை கொடுக்கத் தயாராக இருக்கின்றார்கள் என்பதை நான் முதலில் மகிழ்ச்சியோடு குறிப்பிடுகின்றேன். நாங்கள் பதவியேற்ற முதல் ஆண்டில் எந்தத் தொழிலையும் தொடங்குவதற்கு எந்த வசதிப் படைத்தவர்களும் தயாராக இருக்கவில்லை என்பதையும் நான் சுட்டிக்காட்டியாக வேண்டும். அதற்குப் பிறகு, அண்மைக் காலத்தில், அவர்களுக்கு ஏதோ ஒரு நம்பிக்கை, ஒரு உறுதி ஏற்பட்ட பிறகு, என்னைச் சந்திக்கின்ற வாய்ப்பு அவர்களுக்கும் கிடைத்தது, எனக்கும் கிடைத்தது. அதை நாங்கள் சரிவரப் பயன்படுத்திக் கொண்டோம் என்பதையும், இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். அப்பொழுது அவர்கள் குறிப்பிட்டவைகள் எல்லாம் எங்களுடைய மூலதனத்திற்குப் பாதுகாப்பு வேண்டுமென்பது முதல் கோரிக்கையாகவும், நாங்கள் எந்த, எந்தத் தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்று விரும்பு கிறோமோ, அவைகளுக்கு அனுமதி கிடைக்க பல மாதங்கள் ஆகின்ற நிலைமை இருக்கக்கூடாது என்பதும் அவர்களுடைய முக்கியமான இரு கோரிக்கைகளாக, எண்ணங்களாக இருந்தன. முதல் ஆண்டு முடிந்து, இரண்டு ஆண்டு ஆன பிறகு, அல்லது, 5, 6, 7 மாதங்கள் கழிந்த பிறகு இன்றையதினம் அந்த நம்பிக்கையை அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்றார்கள். அதற்கு என்ன காரணம் என்பதை இப்பொழுது நான் சொல்ல முடியாவிட்டாலும், அல்லது சொல்ல விரும்பாவிட்டாலும் ஏதோ, தமிழகத்தில் நாம் முதலீடு செய்து தொழிலை துவங்கினோமானால், நிச்சயமாக அது ஒழுங்காக சரியாக நடைபெறும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பது மட்டும் நிச்சயமான உண்மை என்பதை மட்டும் நான் அழுத்தமாகச் சொல்கின்றேன்.

1979 ஏப்ரல் 23] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

[பிற்பகல் 12—50]

அதை அவர்கள் சொல்லியபோது எனக்கு நினைவு படுத்துகிற வகையில் சில காரியங்களை எடுத்துக்காட்டிய போதும் நான் அவர்களுக்கு சொன்னது ஒன்றுதான், நீங்கள், உங்கள் முதலில் இங்கே நல்ல தொழிற்சாலையைத் துவங்க ஆதார கட்டமாக அமைத்து அதை நன்கு செயல்பட செய்து உழைத்த பிறகு அந்த தொழிற்சாலை மூடப்பட்டு உங்கள் மூலதனம் உங்களுக்கு திரும்ப வராமல் போகின்ற நிலைமை ஏற்படாது என்பதை நான் அவர்களுக்கு எடுத்துக் காட்டி உறுதியும் கொடுத்தேன். அந்த அடிப்படையில் அந்த நம்பிக்கையில் அண்மைக் காலங்களில் பல்வேறு பிரச்னை தொழிலாளர்கள் சார்பிலும், ஆலை முதலாளிகள், அதிபர்கள் இடையே பிரச்னைகள் அதிகமாக, மிக அதிகமாக நாம் அஞ்சும்படியாக மூண்டிருந்தாலும் கூட இறுதியில் சுமுகமாக ஒரு நல்ல முறையில் செயல்படுகின்ற நோக்கம் தொழிற்சங்கங்களின் தலைவர்களுக்கும், அதிபர் களுக்கும் இருந்ததின் விளைவாக எதிர்பார்த்ததை விட அதிகமான நன்மைகளையெல்லாம் தமிழக அரசும், தமிழக மக்களும் பெற்றார்கள் என்பதை இங்கே நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதை அவர்கள் உணர்ந்திருக் கிறார்கள் என்பதை தான் அவர்கள் பேச்சு எனக்கு எடுத்துக் காட்டியது.

இந்த அரசு எப்படிப்பட்ட கொள்கையை பின்பற்றும் என்று அவர்களுக்கு புரியாமல் இருந்த காலம் அது. ஒன்று, எல்லா பெரும் தொழில்களும், கன ரக தொழில்கள் அனைத்தும், வேறுபட்ட பல தொழில்களிலும் முதலீடு செய்த பிறகு வளர்ந்து வருகிற நிர்வாகத்தில் அதை அப்படியே தேசிய உடமையாக ஆக்கிக் கொள்வார்களோ என்கிற அச்சம் அவர்களுக்கு முதலில் இருந்தது என்பதை நான் புரிந்துக் கொண்டேன். நான் ஒரு முறை இந்த மாமன்றத்திலே பேசும்போது வேறு பிரச்னைகளைப் பற்றி பேசுகிற நேரத்தில் தொழிலாளர்களுக்கு போனஸ் போன்றவை களை கொடுக்கின்ற போது தனியார் துறையில் கொடுக்கின்ற 8.3 சதவீதம் போனஸை அவர்கள் ஒத்துக் கொள்கிறார்கள். ஆனால், அரசு நடத்துகிற நிறுவனங்களில் ஒப்புக்கொள்வதில்லை. தொழிலாளர்கள் அதை ஏற்றுக் கொள்வதில்லை. அது நஷ்டத் தில் இருந்தாலும் கூட அவர்கள் அதிகமாக கேட்கிறார்கள் என்ற நிலைமை இருந்தது. அதை நான் சுட்டிக்காட்டி அந்த விஷயத் தில் தேசிய உடமை பாக்குவது தேவைதானா என்று சொன்னதை அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

தொழிலாளர்கள் பிரச்னை என்று வரும்போது அவர்களுடைய மொத்த தீர்மானத்தையும், அதை ஒழுங்காக செய்து அவர்களுக்கெல்லாம் வழி நடத்திச் சில நல்ல சங்கங்கள்

இருந்தேயாக வேண்டும் என்ற கொள்கை இருக்கிறது. தொழில் அதிபர்களும் முதலாளிகளும் தொழிற்சங்கத் தலைவர்களும் என்னைச் சந்தித்து பேசுகிறபோது அவசரப்பட்டு எந்தவிதமான முடிவையும் எடுக்க வேண்டாம். முடிவுகளை எடுப்பதற்கு முன் எங்களையெல்லாம் கொஞ்சம் கலந்து கொள்ளுங்கள், பிரச்னைகளை சுமுகமாகவே தீர்த்துக் கொண்டு விடுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

தொழிற்சங்கங்களிலும் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்று விடுகின்றன. தொழிலாளர்கள் போராடுகிறார்கள் என்றால் அவர்களுடைய தேவையின் விளைவே அவர்களை போராடச் செய்கிறது என்பது ஒன்று. இன்னொன்று தம் தம் சங்கங்களை யூனியன்கள் என்று சொல்லப்படுகிற தொழிலாளர்கள் அமைப்புகளை புதிதாக துவங்குவதற்கும், அப்படித் துவங்கியவர்கள் பழைய சங்கங்களில் இருக்கின்ற வேலை செய்கிறவர்கள் எந்தஅளவிற்கு அதிபர்களிடம் இருந்து அதிகமாக பணம் வாங்கிக் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்களோ அதை விட அதிகமாக நாங்கள் வாங்கிக் கொடுக்கிறோம் என்கிற நிலமையில் தொழிலாளர்களுக்கு அறிவிலே ஊட்டி அதன் விளைவாக பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. நல்ல தொழிற்சங்கங்கள் இல்லை என்றால் புதிய தொழிற் சங்கங்கள் தேவை என்பதையும் நல்ல தொழிற்சங்கம் இருந்து புதிய தொழிற்சங்கம் வந்தால், அது அந்த நல்ல தொழிற் சங்கத்திற்கு பாதகம் விளைவிக்கிறது என்கிற பிரச்னைகள் மக்கள் மத்தியிலே, குறிப்பாக தொழில் அதிபர்கள் முதலாளிகள் மத்தியில் பெரும் அச்சத்தையும், அதிருப்தியையும் விளைவித் திருக்கிறது. தமிழகத்தில் தொழில் முன்னேற்றத்திற்காக நாம் பணத்தை முதலீட்டுக் கொள்கையில் செலவழித்துவிட்டு, அந்தக் கொள்கையை காப்பாற்றுவதற்காக நாம் அந்தப் பணத்தை செலவிட வேண்டி வருமோ உழைக்க வேண்டுமோ என்ற சந்தேகத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதையும் நான் இங்கே சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்

ஆனால் அண்மையில் நடந்து இருக்கின்ற சில போராட்டங்கள் பிரச்னைகள் அவைகள் எல்லாம் எவ்வளவுதான் அவர்களுக்குப் பிடிக்கவில்லை, அவர்களுடைய எண்ணத்திற்கும் கொள்கைக்கும் கூட மாறாக இருக்கிறது என்றாலும் உழைக்கும் வர்க்கம் பட்டினி கிடந்து தவித்துவிடக்கூடாது என்ற நோக்கத்துடன் தொழிலாளர்கள் நசிதது விட்டால் அதற்குப் பிறகு எந்தத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தி, வேலைச் செய்யச் சொல்வது என்ற பிரச்னையை உணர்ந்த பெரியவர்கள், தொழிலாளர். தலைவர்கள் விட்டுக்கொடுத்து, ஒரு நல்ல

ஒப்பந்தத்திற்கு மற்றவர்களையும் வரச்செய்து, தாங்கள் ஒப்புக்கொண்டதின் விளைவாக அமைதியான சூழ்நிலையை முழு அளவில் என்று சொல்லி, என்னையே நான் ஏமாற்றிக்கொள்ளவும் விரும்பவில்லை, உங்களையும் ஏமாற்றத் தயாராக இல்லை, மிகப் பெருத்த அளவிற்குத் தொழில் துறையில் அமைதி இருந்து கொண்டு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்பு. கிறேன்,

இதற்கெல்லாம் பிறகு தான் என்னைச் சந்தித்த தொழில் அதிபர்கள் நாங்கள் எங்களால் முடிந்த அளவிற்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலும் மூலதனம் செய்திடத் தயாராக இருக்கிறோம். அரசு தரவேண்டும் என்று இல்லை அல்லது அரசு பங்குதாரர்களாக ஆகி கூட்டுத் தொழிலாக அமையும் என்றால் கூட எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. நாங்கள முதலீடு செய்யத் தயாராக இருக்கிறோம், எந்தெந்தத் தொழில்கள் தொடங்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ அல்லது நீங்கள் எதிர்பார்க்கின்ற தொழில்கள் எந்தெந்த இடத்தில் தொடங்கினால் மூலப்பொருள்கள் கிடைக்கும், தொழில்களும் நல்ல முறையில் நடக்கும் என்ற நம்பிக்கையுடன் நாங்கள் எடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம் என்ற வகையில் அவர்கள் மீண்டும் அரசின் பிரதிநிதிகளைச் சந்தித்து அந்த உத்தரவாதத்தைத் தந்தார்கள்.

அதன் பலன்—நான் முடிவான சில எண்ணங்களுக்கு ஆட்பட்டு, அதைத் திட்டமாக உருவாக்கி, அந்த அதிபர்களின் பணத்தை மக்கள் நல்வாழ்வுக்காகச் செலவிடக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்தவும், அதே நேரத்தில் அவர்களுடைய மூலதனத்திற்குப் பாதுகாப்புத் தருவதற்கும், தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கவும், அதைப் பயன்படுத்திக் கொள்கிற அந்த நிலையில் நான் சில யோசனைகளை அவர்களுக்குக் கூறினேன். அதில் குறிப்பிடத்தக்க என்னுடைய யோசனைகள் பல்வேறு வகைகளில் இருக்கின்றன என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

ஒன்று, புதிதாக விஞ்ஞானரீதியில் அறிவியல் துறைகள் உருவாக்கப்படவேண்டிய மிகப் பெரிய தொழிற்சாலைகள். அந்தத் தொழிற்சாலைகளிலே உருவாக்கப்படுகின்ற உற்பத்தி பொருள் நமது நாட்டு மக்களுக்குத் தேவையான பொருளாக இருக்கவேண்டும். அந்தப் பொருள் ஒவ்வொரு நாளும் மக்களுக்குப் பயன்பட்டு, அது செலவாக்கப்படுகின்ற அல்லது உணவுப் பொருள் போல் ஜீரணிக்கப்படுகின்ற பொருள்களாக அது உற்பத்தியாக வேண்டும் என்ற நிலைமையை நான் எடுத்து வைத்தேன். அந்த வகையிலே பல நிறுவனங்கள் பற்றிப் பேசுகிற

போது சில குறிப்பிட்ட கருத்துக்களை சொன்னவர்கள் ஏழை விவசாயிகளுக்குத் தேவையான உரம் இன்னும் மலிவாகக் கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்தை இங்கே எடுத்து வைத்து இருக்கிறார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இன்னும் 1 நிமிடம் தான் இருக்கிறது. முடித்து விடவேண்டும். கரெக்ட்டாக ஒரு மணிக்கு கில்லட்டின் எடுக்கவேண்டும்.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> என் வாட்ச் படி இன்னும் இரண்டு நிமிடங்கள் இருக்கின்றன. நாளைக்குப் பேசலாமா?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> கில்லட்டின் எடுத்து விட்டால் மானியக்கோரிக்கை மீது விவாதம் கிடையாது. அப்புறம் அப்ராபிரியேஷன் பில் எடுத்துக்கொள்ளவேண்டும், ஆகவே, 1 மணிக்கு முடித்துவிடுங்கள்.

<u>மாண்புமிகு திரு, எம். ஜி. இராமசந்திரன் :</u> மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இன்னும் என்னவெல்லாமோ சொல்ல வேண்டும் என்று விரும்பி, புள்ளி விவரங்களையெல்லாம் கொண்டு வந்து இருக்கிறேன். அதை மேலவையில் முழுமையாக நேரத்தை எடுத்துக்கொண்டு நிறைய விவரங்களை நான் தருகிறேன் என்று சொல்லி, உங்களைச் சேர்ந்தவர்கள் அங்கேயும் இருக்கிறார்கள், அவர்களிடம் நீங்கள் என்னென்ன கேள்விகள் கேட்க விரும்பு கிறீர்களோ, அதை எழுதிக் கொடுத்து, தயவு செய்து முடிந்தால் இங்குள்ள ஒரு சிலராவது அங்கே வந்து அவ்வப்போது அவர் களுக்கு எழுதிக் கொடுத்து, கேட்கச் சொல்லவேண்டும் என்கிற வேண்டுகோளையும் நான் வைக்க விரும்புகிறேன்.

[பிற்பகல் 1-00]

ஏனென்றால் ஒவ்வொரு நிறுவனத்தைப்பற்றியும் பல புள்ளி விவரங்களை நான் சொல்லியாக வேண்டியிருக்கிறது. பல்வேறு தொழில் துறைகளைப்பற்றியும், எத்தனை தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டிருக்கின்றன; எத்தனை பேர் கஷ்டப்படுகிறார்கள், எத்தனை தொழிற்சாலைகள் திறக்கப்பட்டிருக்கின்றன என்பதை எல்லாம் சொல்லியாக வேண்டும். இல்லையென்றால் இது மாமன்றத்திற்கு மட்டும் ஏமாற்றமாக இருக்காது; தமிழ்நாடு முழுவதற்கும் ஏமாற்றமாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, வேறு வழியில்லாத நிலையில், மாண்புமிகு உறுப்பினர்கள் எனக்கு உதவுகின்ற வகையில் நாளைய தினம் மேலவைக்கு வந்து, குறிப்பிட்ட ஒவ்வொரு கட்சித்

1979 ஏப்ரல் 23] *[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]*

தலைவர்களாவது வந்து, அவர்களுடைய கட்சி நண்பர்களுக்கு, மேலவையில் இருக்கிற எம்.எல்.சி—களுக்குச் சொல்லி, நான் பேசும்போது கேள்வி கேட்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த இரண்டாண்டு காலத்தில் ஏற்படாத இந்த சோதனை இப்போது புதிதாக ஏற்பட்டிருக்கிறது. 5½ மணி நேரம் பேச வாய்ப்பளித்த மன்றம் இப்போது ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்ளச் சொல்லும் கட்டாயத்திற்கு நான் ஆளாக்கப்பட்டிருக் கிறேன் என்பதால் இத்துடன் என்னுடைய உரையை நிறுத்திக் கொள்கிறேன். இந்த மாமன்றத்திலே இருப்பவர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். இன்றையதினம் ஒரு மணியோடு இந்த விவாதம் முடிவடைய வேண்டும். அதற்குப் பிறகு 'அப்ராபிரியேஷன் பில்' தாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற தகவலை முதலமைச்சரவர்களுக்குச் சொல்லவில்லையா? முதலமைச்சருக்கு இது தெரியாதா? மேலும் இந்த பெரிய டிமாண்டில் மாண்புமிகு முதலமைச்சர் விரிவாகப் பதில் கூற கடமைப்பட்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. இப்போது பிற்பகல் ஒரு மணி. விவாதம் முடிவுற்று வாக்கெடுப்பு நடைபெறுகிறது.

திருவாளர்கள் செ. சதாசிவம், என். பழனிவேல், மு. அம்பிகாபதி, சேலம் மு. ஆறுமுகம் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி— "மானியக் கோரிக்கை எண். 24 – தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,72,53,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரியத் தொகை வழங்கப்பெற்றது.

கோரிக்கை எண். 51 – தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

திருவாளர்கள் ரெ. வி. சவுந்திரராஜன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், மு. அம்பிகாபதி, சேலம் மு. ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''மானியக் கோரிக்கை எண் 51 — தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,39,39,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(இ) கோரிக்கை எண் 7 — மாநில சட்டமன்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி —''மானியக் கோரிக்கை எண் 7 — மாநில சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 77,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(ஈ) கோரிக்கை எண் 37 — பொதுப்பணிகள்—கட்டடங்கள்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி — ''மானியக் கோரிக்கை எண் 37 — பொதுப்பணிகள்—கட்டடங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,78,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(உ) கோரிக்கை எண் 38 — பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி — ''மானியக் கோரிக்கை எண் 38 — பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,20,85,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

''மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 23]

(ஊ) கோரிக்கை எண். 42.

ஒய்வூதியங்களும் ஏனைய ஒய்வுகால நன்மைகளும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி – ''மானியக் கோரிக்கை எண். 42 – ஒய்வூதியங்களும் ஏனைய ஒய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 29,90,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(எ) கோரிக்கை எண். 43.

பல்வகை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி – ''மானியக் கோரிக்கை எண். 43 – பல்வகை என்ற தலைப்பின் கீழ் ரூ. 45,33,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(ஏ) கோரிக்கை எண். 53.

பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு—கட்டடங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி – ''மானியக் கோரிக்கை எண். 53 – பொதுப்பணிகள் குறித்த மூலதனச் செலவு-கட்டடங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,67,69,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(ஐ) கோரிக்கை எண். 58.

மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவை முன்னுள்ள கேள்வி – ''மானியக் கோரிக்கை எண்.58 – மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,14,43,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரியத்தொகை வழங்கப்பெற்றது''.

(ஓ) கோரிக்கை எண். 8.

தேர்தல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி – ''மானியக் கோரிக்கை எண். 8 – தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 21,76,000–க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(ஓ) கோரிக்கை எண். 44.

எழுது பொருள்–அச்சுத்துறை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி ''மானியக் கோரிக்கை எண். 44 – எழுதுபொருள்—அச்சுத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,23,89,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்'',

மானியக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

7. அறிவிப்பு.

நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டுநிதி ஒதுக்க (எண் 3.) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் தமது இசையைத் தெரிவித்துள்ளார்.

8. அரசினர் சட்ட முன்வடிவு

நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.09 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்,

149. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரை அரங்குகள் (முறைப் படுத்துதல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் (திரை அரங்குகள்) 11.1.1979ஆம் தேதியிட்ட அரசாணை எண். 120-ல் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரை அரங்குகள் முறைப்படுத்துதல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IX/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பட்டது].

150. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரை அரங்குகள் (முறைப் படுத்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் (திரை அரங்குகள்) 27.5.1978ஆம் தேதியிடப்பட்ட அரசாணை எண், 1180-ல் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரை அரங்குகள் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் IX/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பட்டது].

இணைப்பு I.

[3-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 777க்கான விடையைக் காண்க]

விடை :—

பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய நூல்களின் பட்டியல் விவரம்.

1. தமிழ்ப் பெரியார் திரு.வி.க. அவர்களின் தலைமையில் பொதிகை நூல் நிலையத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவின்போது அண்ணா நிகழ்த்திய சொற்பொழிவு.

2. 24.3.49 அன்று சென்னை கொத்தவால்சாவடி வள்ளுவர் கழகத்தின் ஆதரவில் இந்து அறநிலையப் பாதுகாப்பு மசோதாவை ஆதரித்து திரு. ஏ. எஸ். துரைசாமி அவர்கள் தலைமையில் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு.

3. 9.8.51-ல் திரு. எஸ். ஏ. பி. பாண்டியன் அவர்கள் தலைமையில் சென்னை தியாகராயர் கல்லூரி மாணவர்களிடையே நிகழ்த்திய சொற்பொழிவு.

4. தாம்பரம் கிறிஸ்துவ கல்லூரியின் தமிழ் சங்க ஆண்டு விழா 19.2.48 அன்று புலவர் உயர்திரு அ. கி. பரந்தாமனார் தலைமையில் நடைபெற்றபோது, அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய அரிய சொற்பொழிவு. ''அண்ணாவின் சொற் செல்வம் என்ற தொகுப்பு''.

5. ஆரிய மாயை
6. நீதிதேவன் மயக்கம்
7. கம்பரசம்
8. தீ பரவட்டும்
9. வேலைக்காரி
10. ஓர் இரவு
11. சொர்க்கவாசல்
12. ரங்கோன் ராதா
13. பணத்தோட்டம்
14. குமரிக்கோட்டம்
15. கலிங்கராணி
16. பார்வதி பி.ஏ.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1979 ஏப்ரல் 23]

17. ஏ! தாழ்ந்த தமிழகமே
18. வானொலி பேச்சுகள்
19. பாராளுமன்ற பேச்சுகள்
20. சட்டமன்ற சொற்பொழிவுகள்
21. சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்
22. சந்திரோதயம்
23. அவன் பித்தனா—ஓரங்க நாடகம்
24. ரோம் எரிகிறது ''திராவிட நாடு ஏடு''
25. இன்றைய ஒளி
26. நல்ல தம்பி
27. அவினாசியார் காணவேண்டிய காட்சி
28. இரக்கம் எங்கே
29. இரக்கம் ஒரு பயணம்
30. இளங்கோவின் சபதம்
31. இன்ப நாளில் இதயம் பாடுது
32. எந்தன் திருவிளையாடல்
33. கடவுளார் உலகில்
34. கண்ணாயிரத்தின் உலகம்
35. கண்ணீர்த்துளி
36. கல்சுமந்த கசடர்
37. களத்தில் வென்றான்
38. கதை போகவில்லை
39. காகூரார் கருணை
40. காதல் ஜோதி
41. சன்மானம்
42. சுயேட்சையாகி விடுவேன்
43. செல்லும் இடம் தோறும்
44. செல்லப்பிள்ளை
45. சோணாசலம்
46. நன்கொடை
47. நீதிபதி வக்கீலானார்
48. தங்கத் துளிகள்
49. தர்மம் தலைகாக்கும்
50. துரோகி கப்ளான்
51. தேவலோகத்தில்
52. பக்தியின் பேரால்

53. பகீரதியின் பந்தயம்
54. பாங்கர் பணம் பெருத்தான்
55. பாங்காக் பங்கஜா
56. பாரதம்
57. புதிய மடாதிபதி
58. ராகவாயணம்
59. வழக்கு வாபஸ்
60. விலையேறிவிட்டது
61. நாடும் ஏடும் சொற்பொழிவு
62. நல்ல தீர்ப்பு
63. தம்பிக்கு (இரண்டு தொகுப்புகள்)
64. அண்ணாவின் பொன்மொழிகள்
65. காந்தியார் சாந்தியடைய

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு II

[14 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 782க்கான விடையைக் காண்க]

விடை—

(அ) 1977–78-ல் உற்பத்தியான உரத்தின் அளவு:

(1) தனியார் துறை:

(மெட்ரிக் டன்களில்)

(அ) யூரியா	37,45,000
(இ) அம்மோனியம் சல்பேட்டு	ஏதுமில்லை
(உ) அம்மோனியம் பாஸ்பேட்	5,42,000
(ஊ) சூப்பர் பாஸ்பேட்	3,23,000

(2) பொதுத்துறை:

(அ) யூரியா	20,64,000
(இ) 17:17:17 கலப்பு உரம்	38,38,000

(ஆ) 1957-ம் ஆண்டு உரக்கட்டுப்பாடு உத்தரவுப்படி மத்திய அரசு மாநில அரசுக்கு வழங்கும் தொகுப்பு இரசாயன உரங்களுக்கு (Pool Chemical Fertilisers) தரவாரியாக அடிப்படை வழங்குவிலைகளை (Pool Issue Prices) அறிவிக்கிறது. அதனடிப் படையில் விற்பனை வரி, உபரி வரி, நிர்வாகச் செலவு, இருப்பு வைப்பவர் கமிஷன் மற்றும் உரங்களை வழங்குவதற்காக மொத்த விற்பனையாளர்களுக்கும் சில்லரை விற்பனையாளர்களுக்கும் அனுமதிக்கப்படும் கமிஷன் தொகை உட்பட கடைசியாக விவசாயி கையில் உரம் சேரும்போது இருக்கவேண்டிய உச்ச விற்பனை விலையை மாநில அரசு நிர்ணயிக்கிறது. மாநில அரசுக்கு தொகுப்பு உரத்தின் அடிப்படை விலையை நிர்ணயிக்கும் அதிகாரமில்லை. இப்படி நிர்ணயிக்கப்பட்ட உச்ச விலைகளுக்கு மேல் எவரும் உரங்களை விற்கக் கூடாது. உர உச்ச விற்பனை விலை, உரங்களை மொத்த விற்பனையாளர்களுக்கும் சில்லரை விற்பனை யாளர்களுக்கும் அனுமதிக்கப்படும் கமிஷன் தொகையையும் (Distribution margin allowed to wholesalers and retailers) சேர்த்துத்தான் நிர்ணயிக்கப்படுகிறது. இப்படி அனுமதிக்கப்படும் கமிஷன் உரத்திற்கு உரம் மாறுபடும்,

[1979 ஏப்ரல் 23

தங்கள் உர விற்பனையைப் பெருக்குவதற்காக உர உற்பத்தியாளர்களும், விநியோகஸ்தர்களும் விவசாயிகள் தங்கள் உரங்களை வாங்க ஊக்குவிக்கும் வகையில் தங்களுக்கு அனுமதிக்கப்பட்ட கமிஷனில் ஒரு பகுதியை விட்டுக்கொடுத்து (foregoing a portion of the distribution margin) அதற்கொப்ப உர விலைகளைக் குறைத்து விற்கின்றனர். இப்படி விற்பதானது கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனைச் சாலைகளில் விற்கப்படும் ஒரே ரக உரங்களின் விற்பனை விலைகளில் சிறு வித்தியாசம் ஏற்பட வழிகோலுகிறது. எனினும் இது உர உச்ச விலைக்குட்பட்டே நடக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
MADRAS
4-DEC 1979
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS